பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

மாநகர சபை
யாழ்ப்பாணம்.

விலை
ரூபா
15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 20 ஞாயிற்றுக்கிழமை (04.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:039

★ தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் குறித்து ★

# அரசும் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோருகிறது அமெரிக்கா

## ராஜாங்க அமைச்சு அதிகாரி கருத்து

வாஷிங்ரன், ஜனவரி 4

இலங்கைத் தமிழர்களின் நியாயபூர்மான கோரிக்கைகளை அடைவதற்கு அந்த நாட்டின் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

அவர்களுக்கு இடையே உள்ள பிணக்குகள் சமாதான வழியிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்பதனை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சின் அதிகாரி கோர்டன் டியுகிட்

விடுதலைப்புலிகளின் நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சிய அரசபடைகள் கைப்பற்றிவிட்டதாகவும், -

அதனைத் தொடர்ந்து ஆயுதங்களை கீழே வைக்குமாறு ஜனாதிபதி புலிகளை கோரியுள்ளதாகவும்

செய்திகள் வெளியான பின்னணியில் அவை குறித்து கருத்துக் கேட்டபோதே

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றும் தாக்குதல்

வவுனியா, ஜன. 04

வன்னிப்பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றும் விமானம் மற்றும் ஷெல் தாக்குதல்கள் பரவலாக நடத்தப்பட்டன.

முரசு மோட்டையில் படையினரின் ஷெல் தாக்குதலில் காயமடைந்திருந்த சண்முகநாதன் குருநாதன் என்பவர் நேற்று உயிரிழந்தார்.

இதேவேளை- நேற்று புளியம் பொக்கணைப்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## படை வெற்றிக்கு பின்னரான தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன.04

ஸ்ரீலங்கா படையினரின் வெற்றிக்குப் பின்னரான அரசியல் தீர்வை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணமும் அதன் அடிப்படையில் எழுந்த

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் தாக்குதல்களில் 12,000 படையினர் படுகாயமுற்றனராம்



கொழும்பு, ஜன.4

வன்னிப் போர்க்களத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலால் அதிகாரிகள் உள்ளிட்ட 12 ஆயிரம் படையினர் படுகாயமடைந்தனர் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர் -

வன்னிப் போர்க்களத்தில் ஆட்லறி மற்றும் மோட்டார்தாக்குதல்களால் எறிகணைகள் மழையாகப் பொழிந்தன. தொடர்ச்சியான எறிகணை தாக்குதல்களில் அதிகாரிகள் உள்ளிட்ட 12 ஆயிரம் படையினர் படுகாயம் மடைந்துள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது. விடுதலைப்புலிகளுக்கு தொடர்ச்சியான ஆயுத விநியோகம் இருந்தது - என்று கூறியுள்ளார்.

(அ-02)

## புலிகளிடம் இருந்து பிரதேசங்களை மீட்பதால் தமிழர்களின் மனங்களை வெல்ல முடியாது

### அரசு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்கிறார் கூட்டமைப்பு எம்.பி.

கொழும்பு, ஜன.4

புலிகளிடமிருந்து பிரதேசங்களை படையினர் மீட்டுக்கொள்வதால் மாத்திரம் தமிழ் மக்களின் மனங்களை வென்று விட முடியாது.

தமிழ் மக்களின் மனங்களை வெல்வதில் இலங்கை அரசுக்கு உண்மையான விருப்பம் இருந்தால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அது முன்வைக்கட்டும்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு உட்பட மேல்மாகாணத்தில் வதியும் வடக்கு கிழக்கு மக்கள் இன்று பதிவு செய்யப்படுவர்

கொழும்பு, ஜன.4

மேல்மாகாணத்தில் வசிக்கும் வடக்கு, கிழக்கு மக்கள் இன்று தமது விவரங்களைப் பொலிஸில் பதிவு செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திதுக்கு பின்னர் தலைநகர் கொழும்பிலும் மற்றும் மேலமாகாணப் பிரதேசங்களிலும் குடியமர்ந்த வடக்கு,கிழக்கு மக்கள் தொடர்பான பதிவுகள் இன்றையதினம் நடைபெறவுள்ளது. இன்று காலை எட்டு மணி முதல் மாலை ஆறு மணிவரை இந்தப் பதிவுகள் இடம்பெறவுள்ளதாக

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மசூதிக்கு அருகில் நேற்று மாலை குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜன.4

கொழும்பு பாங்சல் வீதியில் உள்ள மசூதிக்கு அருகில் நேற்று மாலை 5.15 மணிக்கு குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பில் மூவர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாகவே கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை கைது செய்வதே தமது நோக்கம் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜன.4

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவில் மறைந்திருக்கக்கூடும் என் றும் அவரை உயிருடன் கைது செய்வதே இராணுவத்தின் நோக்கம் என்றும்- இராணுவத் தளபதி லெப்.ஜெனரல்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு, முல்லைத்தீவு நோக்கி ஒரே வேளையில் படையினர் தமது தாக்குதல்களைத் தொடர்கின்றனர்

### அமைச்சர் ரம்புக்வெல தகவல்



கொழும்பு, ஜன.4

வடக்கை விடுவிப்பதற்கான நடவடிக்கையை படையினர் தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் பலமான நிலைகளான ஆனையிறவு மற்றும் முல்லைத்தீவு நோக்கிப் படையினர் ஒரேவேளையில் தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்கின்றனர்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தை முழுமையாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை படையினர் முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் கேந்திரமான - பலமான - இருநிலைகளான - ஆனையிறவு, முல்லைத்தீவு ஆகியவற்றை நோக்கி படையினர் தமது தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார் அவர்.

இதேவேளை- படையினர் ஆனையிறவில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அதிரடிப்படை ஒன்று ஆனையிறவை நோக்கி செல்கின்றது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு, பரந்தன் பகுதிகளில் நேற்று விமானத் தாக்குதல்

கொழும்பு, ஜன.4

முல்லைத்தீவு, பரந்தன் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது நேற்று நான்கு தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிளிநொச்சி வீழ்ந்த செய்தி கேட்டு எனது நெஞ்சில் இடி விழுந்தது

## நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் வைரமுத்து

சென்னை, ஜன.4

கிளிநொச்சி வீழ்ந்த செய்தி கேட்டு எனது நெஞ்சில் இடி விழுந்து விட்டது. இவ்வாறு தெரிவித்துள்ளார் கவிஞர் வைரமுத்து.

நூல் வெளியீட்டு விழாக்களில் முதலமைச்சர் கருணாநிதி ஆற்றிய 11 இலக்கிய சொற்பொழிவுகள் புத்தகமாக தொகுக்கப்பட்டுள்ளது.

''என் தம்பி வைரமுத்து'' என்று பெயரிடப்பட்டுள்ள இப் புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகள் தலைமை தாங்கி, புத்த கத்தின் முதல் பிரதியை வெளியிட நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின் முடிவில் கவிஞர் வைரமுத்து ஏற்புரையாற்றிய போது மேலும் தெரிவித் துள்ளவை வருமாறு:



இன்று கிளிநொச்சி வீழ்ந்து விட்டது என்ற செய்தி வருகிறது. நெஞ்சில் இடி விழுகிறது. ஒரு தமிழன், தமிழ் சகோதரி அங்கு அடி படுகிறபோது எனக்கு குளிப்பதற்கோ, உண்பதற்கோ, சிரிப்பதற்கோ தோன்றவில்லை. கிளிநொச்சி வீழலாம். 'கிலி' வீழலாம். ஆனால் புலி கள் வீழ மாட்டார்கள். அவர்களும் சேர்த்து தான் தமிழர். அவர்கள் நம் இரத்தத்தின் நீட்சி. அவர்களை இழப்பதற்கு நாம் தயாராக முடியாது.

நாங்கள் போர் நிறுத்தம் வேண்டும் என்று கேட்கிறோம். பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அங்கே போர் முனைக்கு செல்லுமாறு வேண்டிக் கொண்டோம். இன்னும் காலம் கடந்து விடவில்லை.

இலங்கையில் போர் நிறுத்தத்தை எவ்வளவு வலியுறுத் துகிறோமோ அதைப் போல் இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் போர் வந்து விடக்கூடாது என்பதும் முக்கியம். பொருளாதாரச் சீரழிவு வந்து கொண்டிருக்கும் நேரத்தில் இன்னொரு போரை உலகம் தாங்காது. பாகிஸ்தானில் தீவிரவாத முகாம்கள் ஒழிக்கப்பட வேண்டும். போர் மூலம் தான் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை - என்றார் அவர். (50)

## பொஸ்கோவில் தரம்-1 7ஆம் திகதி ஆரம்பம்

யாழ்.சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கான வகுப்புகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

## யாழ். ப.நோ.கூ. கிளைகள் இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன.4

உருளைக்கிழங்கு, வெங்காயம், சீனி போன்றவை பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கும் முகமாக சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களும் இன்று ஞாயிற்றுக் கிழமை முழு நாளும் திறந்திருக்கும் என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இன்று விடுமுறை தினமாக இருந்த போதிலும் நுகர்வோரின் வசதி கருதி சங்கக் கிளைகள் யாவும் முழு அளவில் திறந்து வியாபார நடவடிக்கைகள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (1-224)

## வெளியிணைப்பு தொழிலுக்கு நேற்று அனுமதியில்லை

யாழ்ப்பாணம், ஜன.4

குடாக்கடலில் நேற்று சனிக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை வெளி இணைப்பு இயந்திரங்களில் கடல் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மற்றும் நாவாந்துறை பகுதிகளில் இருந்து குடாக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் வெளி இணைப்பு இயந்திரம் பூட்டி செல்லாமல் பாய் வள்ளங்களில் நேற்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் கடலில் தூர இடங்களுக்குச் சென்று தொழிலில் ஈடுபட முடியாமல் குறிப்பிட்ட கடல் எல்லை வரை சென்று தொழிலை மேற்கொள்ள முடிந்ததாக அவர்கள் கூறினார். (1-160)


### விற்பனைக்கு

சன் T.V தொடர் நாடகங்கள், பழைய, புதிய திரைப்படங்களின் ஒலி நாடாக்கள், CDகள் விற்பனைக்குண்டு தொடர்புக்கு - தனுஷ் வீடியோ சென்ரர்.

பஸ் நிலையம், பருத்தித்துறை, தொ.பே.இல- 077 9835995


# மரண அறிவித்தல்கள்

## தம்பு நடராஜா

(வர்த்தகர், நெல்லியடி மத்திய சந்தை, முன்னாள் கார் உரிமையாளர் - EY 3113)

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சந்தாதோட்டம், புலோலி வடகிழக்கு, புலோலியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா நேற்று (03.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சந்தா தோட்டம்,*
*புலோலி வடகிழக்கு, புலோலி.*
*தொ.பே: 077 6617382* (சி/556021)

தகவல்: குடும்பத்தினர்.

## விஸ்வலிங்கம் பத்மநாதன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது அம்பலவாணர் வீதி, உடுவிலில் வசித்து வந்தவருமான விஸ்வலிங்கம் பத்மநாதன் நேற்று (03.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பத்மதாஸ், கௌரி(றாஜி- முகாமை உதவியாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரனின் (சந்திரன்- டோகா) அன்பு மாமனாரும், பானுஜனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.01.2009) சனிக்கிழமை பி.ப 2மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.* (81486)

தகவல்: திருமதி வி.கௌரி (மகள்).

## இராசரத்தினம் பாலகிருஷ்ணன்

(முன்னாள் பணிப்பாளர், தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களம், கொழும்பு, முன்னாள் குழுத்தலைவர், கொயர் சர்வதேசம், யாழ்ப்பாணம்)



தலையாழி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாலகிருஷ்ணன் நேற்று (03.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.இராசரத்தினம்- கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும், ஜானகிதேவியின் அன்புக் கணவரும் சாயி சங்கர்(முன்னாள் பொறியியலாளர், Sri Lanka Telecom), சாயிஜனனி(ஆசிரியை- யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), Dr.சாயிநிரஞ்சன், சாயிமாதவன் (செலான் மேச்சண்ட் வங்கி- கொழும்பு), சாயிமுகுந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷாந்தி, Dr.சுதாகர் (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), Dr.பாமதி, வித்தியா (செலிங்கோ, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்வக், றோணக், அச்சுதன், ஆதர்ஸ், ஹரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், இராதாகிருஷ்ணனின் சகோதரரும், பொன்னம்பலவாணர், இராமதாஸன், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2009) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தி நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''பிரசாந்தி''*
*இல:- 55/23, சபாபதி வீதி,*
*தலையாழி,*
*கொக்குவில்.* (81485)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## விஜயரத்தினம் பிரகாஷ் (கனடா)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் பிரகாஷ் கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் கனடாவில் வசிப்பவர்களான Dr.விஜயரத்தினம் - விமலநாயகி தம்பதியினரின் அருமைப் புத்திரனும் வினோதியின் (கனடா) அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (மலேசியா), ஞானப்பிரகாசம் (வைத்தியரும், பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளரும்) மற்றும் திருமதி பாக்கியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமணல்,*
*காரைநகர்.* (81489)

தகவல்: திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம்.

## திருமதி வள்ளியம்மை சிவராமன்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சிவராமன் 02.01.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - கதிராசி தம்பதியினரின் இளைய மகளும் சிவராமனின் அன்பு மனைவியும் மனோகரன், மாதவன், மகேஸ்வரன், மனோராஜன், மணிவண்ணன், மலர்மதி ஆகியோரின் தாயாரும் குஞ்சு, மாலா, கலா, மாலினி, ராஜன் ஆகியோரின் மாமியாரும் சாவித்திரி, சந்திராதேவி, கானதாசன், தேவதாசன், சரஸ்வதி, நாகேஸ்வரி, நாகேஸ்வரன், காலஞ்சென்ற பார்வதி, றாணி ஆகியோரின் பெரியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.01.2009) சனிக்கிழமை ஏழாலை உச்சியோடை மயானத்தில் நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோடாக் கொம்பனி ஒழுங்கை,*
*மல்லாகம்.*

தகவல்: மகேஸ்வரன் (சந்திரன்).

## ஆறுமுகம் சபாபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சபாபதிப்பிள்ளை நேற்று (03.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும் சுசீலாவின் (இளைப்பாறிய உத்தியோகஸ்தர், ரெலிக்கொம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் சுமதி (ஆசிரியை, மெதடிஸ்த கல்லூரி, கொழும்பு-3), மதுமதி (கொமர்சல் வங்கி, கொட்டாஞ்சேனை), நிர்மலன் (U.K) மற்றும் நிரஞ்சன் (e-futures, கொழும்பு -03) ஆகியோரின் அருமைத் தந்தையும் வசந்தன் இம்மானுவேல் (விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்), ஸ்கந்தராஜன் (Cargo dept-Sri Lanka Airlines), நிஷாந்தி (SDC, கொழும்பு-6) ஆகியோரின் அருமை மாமனாரும் சிவகாமிப்பிள்ளை (அராலி தெற்கு), காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கந்தையா ஆகியோரின் அருமைச் சகோதரரும் றொசானி, நிருஷன், தனுஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2009) ஞாயிற்றுக்கிழமையும், நாளை (05.01.2009) திங்கட்கிழமையும் அஞ்சலிக்காக மு.ப. 10 மணி முதல் இரவு 9 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24A, Sri Dharmarama Road,**
**Dehiwela.**
*011 2717830*
*078 6038795*
*072 3476214*

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.


கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடாத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
You are Safer with the Leader
என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்.
வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை, பணக்காரர் பேதமின்றி எல்லோரிடமும் பாடசாலைகள் அதிகளவு அனுமதிக் கட்டணங்களை அறவிடுவது சரியா?

"பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும்போது எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படக் கூடாது. அவ்வாறு அறவிடும் பாடசாலை அதிபர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும்''. இவ்வாறான எச்சரிக்கைத் தொனியில் வருடாவருடம் வலயக்கல்விப் பணிப்பாளர்களால் அறிவுறுத்தல் விடப்படுவதும் பத்திரிகைகளில் அறிவிக்கப்படுவதும் வழமையான செயற்பாடுதான்.

இத்தகைய அறிவுறுத்தல்களை எந்தப் பாடசாலை அதிபர்களும் செவி மடுத்த பாடில்லை. இதனை வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கண்டும் காணாததுபோல் விட்டுவிடுவது தொடர்கதையாக நீள்கின்றது.

பாடசாலை அதிபர்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து பாடசாலை அபிவிருத்திக்கென கட்டணம் அறவிடுவதில் கண்ணும் கருத்துமாய் உள்ளனர்.

பாடசாலை அபிவிருத்திக்கும் அதனுடைய வளர்ச்சிக்கும் நிதி தேவையென்பது நியாயபூர்வமான கோரிக்கைதான். எனினும் அதற்காக ஏழைப்பெற்றோர்களின் நிலை பற்றிச்சிந்திக்க வேண்டாமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததொன்று.

தற்போது யாழ்.மாவட்டப் பாடசாலை

**கே.கலையம்சன்**

களில் 2009 இற்கான புதிய கல்வியாண்டுக்கு 'மாணவர் அனுமதி' களைகட்டத் தொடங்கிவிட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், அதிபர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு அனுமதிக்காகக் காத்திருக்கும் மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து அடிக்கடி சந்தித்துக் கட்டண விவரங்களை அழுத்தமாக அறிவித்து வருகின்றனர். தமது கட்டண விவரங்களில் எந்தவித மாற்றமும் கிடையாது. எவருக்கும் எதுவித சலுகைகளும் கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறி கட்டணம் அறவிடும் திகதியையும் அறிவித்து விட்டிருக்கிறார்கள்.

இத்தகைய கட்டணங்களைக் கேட்ட அநேகமான பெற்றோர்கள் தலையில் கைவைத்தவாறு என்ன செய்வது? ஏது செய்வது என்று தெரி

## பாதிக்கப்பட்ட பெற்றோரின் மனக் குமுறல்களைத் தீர்க்க உரிய அதிகாரிகள் ஆவன செய்யக் கூடாதா? இல்லை முடியாதா?

யாமல் நிலைதடுமாறி நிற்கிறார்கள். இப்போது கிராமப்புறப் பாடசாலைகளிலும் இத்தகைய வசூல்கள் தொடங்கிவிட்டன. இதனால் கிராமப்புறங்களில் அன்றாடம்காய்ச்சிகளாக உள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ? என்ற ஏக்கத்தைச் சுமக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.


குறித்த ஒரு பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கான அனுமதிக்கு மட்டும் ஐயாயிரம் ரூபாவரை அறவிடப்படுகிறது. இதில் எவருக்கும் எந்தவொரு சலுகைகளும் வழங்கப் படமாட்டாது என்று அதிபர் அறிவித்திருக்கிறார். அந்தப் பாடசாலைக்கு ஒரு பெற்றோர் 4500 ரூபாவினைக் கொண்டு சென்று அனுமதி கேட்டபோது கூட அனுமதி வழங்கப்படவில்லை.

இது ஒருபுறமிருக்க, இன்னொரு பாடசாலையில் தரம் ஒன்று அனுமதிக்கு பத்தாயிரம் ரூபாவில் ஒரு சதம் கூட குறைந்தாலும் அனுமதி வழங்கப் படமாட்டாது என்று அதிபர் கறாராகக் கூறியுள்ளார்.

''எமது பிள்ளைகள் பல வருடங்களாகக் கல்வி கற்கப் போகின்ற பாடசாலைகளின் வளர்ச்சிக்கு நிதி தேவைதான். அதனை நாம் கொடுக்க மனதார விரும்புகிறோம். ஆனால் இப்போதைய இக்கட்டான - வறுமையான- சூழ்நிலையில் எமது கையில் பணமில்லையே, என்ன செய்வது?'' என்று பல பெற்றோர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

ஏ-9 பாதை பூட்டப்பட்டதன் பின்னர் கட்டடப்பொருள்களின் விலைவாசி உயர்ந்துள்ளது. அதனால் அந்தத் துறைசார்ந்த ஊழியர்கள் தொழில் பாதிப்புக்குள்ளாகி வீடுகளுக்குள் முடங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றால் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென முன்னரைக் காட்டிலும் அதிகளவான நிதி தேவைப்படும் என்பதை யாருமே மறுக்க முடியாத யதார்த்தம்.

இதைவிட நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற யுத்தம், இயற்கைச் சீற்றம் என்பவற்றாலும் பலரும் பாதிப்புக்குள்ளா கியுள்ளதுடன் தொழில் வாய்ப்புக்களையும் இழந்துள்ளனர்.



இப்படியான நெருக்குவ[illegible] மிகுந்த சூழலுக்குள் சிக்கி[illegible] பெற்றோர்கள் இப்படி கண்[illegible] தனமான கட்டண அறவீடு[illegible] அளவில்லா துயரத்துக் குள்[illegible] ஏழை எளியவர்களின் கல்[illegible] கேள்விக் குறி யாக்குவது [illegible] கத்திற்கு அழகல்ல.

வகை தொகையற்ற கட்[illegible] அறவீடுகளை மேற்கொள்[illegible] பாடசாலை அதிபர்களின் வி[illegible] மேல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி- நியாய பூ[illegible] நீதியினைப் பெற்று தமது [illegible] பிள்ளைகளைப் பாடசாலை[illegible] அனுமதிக்கும்போது எதிர்[illegible] அந்தப் பாடசாலையில் த[illegible] பிள்ளைகள் பழிவாங்கப்ப[illegible] என்ற அச்சம் காரணமாகப் பெற்றோர்கள் மேல் அதிக[illegible] இந்த விடயத்தை அம்பலப்படுத்தாமல் இரு[illegible] விடுகிறார்கள்.

கட்டண அறவீடு விட[illegible] கல்விப்பணிப்பாளர்கள் உடனடியாகத் தலையிட்டு வலுக்கட்டாயமாக கட்டணங்களை அறவிடும் பாடசாலை களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து ஏழை மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு ஒளியூட்டத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் ஆதங்கமாக உள்ளது. ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

**மக்கள் பிரச்சினையில் உதயன்**

# பாடசாலைகளின் பண அறவீட்டால் பாதிக்கப்பட்ட ஓர் ஏழைப் பெற்றோரின் வாக்குமூலம்

யாழ்ப்பாணத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் அதிகமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதைப் புள்ளிவிவரங்கள்



காட்டுகின்றன. இருந்தும் யாழ்ப்பாணத்தில் இன்று மக்கள் படும் சொல்லெணாத் துயரங்கள் அதிகம்.

ஆயுத முனையில் கொள்ளையடிப்பவர்கள் ஒருபுறம், விலைவாசி ஏற்றம் இன்னொருபுறம், இயற்கையின் அழிவுகள் மறுபுறம், அதைவிடப் பாடசாலைப் பணப் பறிப்புகள் புதுவிதம். அரசாங்கம் எப்படித்தான் அறிவிப்புக்களை, சுற்றுநிருபங்களை விடுத்தாலும் இவர்களது நெளிவு, சுழிவுகளும் வெற்றிகரமாக நிறைவேறவே செய்கின்றன.

ஆனால் சமூகத்தில் பொருளாதார ரீதியில் உயர்நிலையில் இருப்பவர்களிடம் வேண்டுமானால் பாடசாலை அபிவிருத்தி நிதிக்கென பணத்தைக்கேட்டுப் பெறலாம். அதுகூட அவர்கள் விரும்பிக் கொடுக்க வேண்டும். ஆனால் [illegible] பொருளாதாரத்தில் [illegible] நிலையில் உள்ள மாணவர்களின் பெற்றோரை 10, 20, 30, 40, 50 என ஆயிரக்கணக்கில் கட்டுமாறு நிர்ப்பந்திப்பது நியாயமா? கணனி வாங்கித் தருமாறு வற்புறுத்துவது முறையா?

பிள்ளைகளை வஞ்சித்துவிடக் கூடாது என்பதற்காகத் தமது உள்ளக் குமுறல்களை மனதினில் புதைத்து, தலையாட்டி பொம்மைகளாகப் பணம் கட்டுகிறோம் என ஒத்துக் கொண்டு வந்தவர்களே அதிகம். ஒவ்வொரு வருடமும் இத்தகைய முயற்சிகள் அரங்கேறுகின்றன. ஆனால் அவை எல்லாம் மக்கள் மனமுவந்து கொடுத்த கொடுப்பனவுகள் அல்ல.

பெற்றோர்களிடம் சுதந்திரமாக 'நீங்கள்' பாடசாலை வளர்ச்சிக்கு இயன்றதைச் செய்யுங்கள்'' எனக் கூறுவதே ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமாக இருக்கும். இவ்வளவு பணம் கட்டுங்கள் என்று குறிப்பிட்டு சிட்டை கொடுப்பது எவ்வகையில் நியாயம்? மிகப் பிரபல்யமான பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்களின் வெளிநாட்டுக் கிளைகள் மூலமாக அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கென வருடந்தோறும் லட்சக்கணக்கில் நிதி சேகரித்து அனுப்பப்படுகின்றது.

இத்தகைய பாடசாலைகளுக்கு இவ்வாறான கீழ்த்தரமான பண வசூலிப்புப் பொருத்தமற்றது. முன்னணிப் பாடசாலைகள் என்பன [illegible] சகல வசதி வாய்ப்புக்களையும் பொருளாதார மனித வலுக்களையும் கொண்டிருக்கின்றன. அரச பாடசாலைகளும் ஒருவிதத்தில் தனியார் கல்வி நிலையங்கள் போல மாறுகின்றன. அதைவிட ஒருபடி இன்னும் மேல் என்று கூறவேண்டும். இவற்றையெல்லாம் தட்டிக்கேட்க உரியவர்கள் இல்லை என்ற குறை. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி கிடைப்பது பொதுவான விடயம். ஆனால் சித்திப் புள்ளிகளைவிட முன்னணிப் பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி சற்று அதிகமாகவே இருக்கிறது. இருந்தும் சித்தியடைந்

**ந.தில்லைநாதன்**

தவர்கள் அந்த வெட்டுப் புள்ளியில் முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி பெறமுடியாது வேறுபாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். ஆனால் ஒரு சில யாழ்ப்பாண முன்னணிப் பாடசாலைகளில், சித்தியடையாத - மிகக் குறைந்த புள்ளிபெற்ற மாணவர்களும் செல்வாக்கு மற்றும் இலட்சக்கணக்கில் பணம் கட்டி அனுமதி பெற்றிருக்கின்றார்கள். சித்தியடைந்தவர் வெளியில் நிற்க அதி குறைந்த புள்ளிபெற்றவர்கள் பணத்தைக் கட்டி நுழைகின்றபோக்கு மாறவேண்டும். மாறுமா?

★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸா அழிகிறது!

''எங்குபோவதென தெரியவில்லை. எது பாதுகாப்பான இடமென்பதும் தெரியாது. மீண்டும் எப்போது தாக்குதல் நிகழும் என்பதும் தெரியாது.''

காஸாவில் 14 வயது சிறுமி ஒருத்தி பி.பி.சி. செய்தியாளரிடம் தெரிவித்த வார்த்தைகள் அந்த மக்களின் இந்த நிமிட மனோநிலையை புலப்படுத்துபவை.

காஸாவின் வீதிகள் வெறிச்சோடிக் கிடக் கின்றன. அவசர அவசரமாக காயப்பட்ட வர்களை மருத்துவமனைக்கு எடுத்துச்செல் லும் வாகனங்களையும் இறந்தவர்களை கொண்டு செல்லும் சீற்றம் கொண்ட மக் களையும் தவிர வேறு எதனையும் காண முடிய வில்லை என்கிறார் பி.பி.சி. செய்தியாளர்.

செய்தியாளர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று காஸா என்பது நினைவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயம்.

''மருத்துவமனைகளுக்குச் சென்றேன். பிரேத அறைகள் நிரம்பி வழிந்தன. வீதி களில் கூட உடல்களைக் காணமுடிந்தது. தங்களது குழந்தைகளைத் தேடி பெற்றோர் மருத்துவமனைகளுக்குப் படையெடுத்துக் கொண்டிருந்தனர்'' எனக் குறிப்பிடும் பி.பி.சி. செய்தியாளர், ஒரு தாயின் அவலத்தை இவ்வாறு விவரிக்கின்றார்.

''எனது மகன் எங்கே? என அலறிய படி மருத்துவமனையின் அனைத்துக் கட்டடங்களையும் சுற்றிவந்தபடி இருந்த பெண்மணி ஒருவரைப் பின்தொடர்ந்தேன். இறுதியாக அவர் தனது மகனைக் கண்டுபிடித் தார். மகனுக்கு 20 வயதிருக்கும். மருத்துவ மனை ஊழியர்கள் மகனின் உடலைப் பார்ப் பதற்கு அப்பெண்மணியை அனுமதிக்க வில்லை. என்றா லும் நான் அதனைப் பார்த்தேன். அதில் தலைஇருக்கவில்லை. வயிறும் இருக்கவில்லை. வெள்ளைத்துணி யால் போர்த்தப்பட்டிருந்த உடல்சிதைவு கள் மீது அந்தப் பெண்மணி மயங்கிவிழுந் தார்'' என்கிறார் பி.பி.சி.செய்தியாளர்.

''கடவுளே எங்களை காப்பாற்று என்பதைத் தவிர பாலஸ்தீன மக்களிடம் வேறுவார்த்தை கள் இல்லை'' என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

காஸாவில் மின்சாரம் அவ்வப்போது வந்துபோகின்றது. கடைகள் அநேகமாக மூடப் பட்டுள்ளன. 750,000 மக்களுக்கு விநியோ கிப்பதற்கு போதிய உணவின்றி ஐக்கிய நாடுகள் அமைப்புத் தடுமாறுகின்றது.

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் விமானத்தாக்குதலால் அந்த மக்களின் வாழ்க்கை முற்றாக சிதறடிக்கப்பட்டுள்ளது. 400 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 18 மாதகாலமாக எல்லைகளை இஸ்ரேல் மூடியுள்ளதால் கடும்பொரு ளாதார நெருக்கடிகளைச் சந்தித்து பாரிய மனிதாபிமான துயரத்தில் சிக்கியிருந்த மக் களின் மீதே இந்த வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

''அடுத்த தாக்குதல் எங்கு நிகழும் என தெரியாமல் காஸா மக்கள் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று கொண்டிருக்கின்றனர். விமானத்தாக்குதல்களிலிருந்து தப்புவதற் கும் இடமில்லை'' என்கிறார் நசீர் பரஹாட்.

கடந்த சனிக்கிழமை காஸா மசூதி மீது தாக்குதலை நடத்தி இஸ்ரேல் அதனை அழித்த தருணத்திலிருந்து பல இடங் களுக்குத் தான் தப்பி ஓடிக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது வீடு மசூ திக்கு அருகில் அமைந்திருந்தது. ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் கூட்டங்களை நடத்துவதற்காக குறிப்பிட்ட மசூதியை பயன்படுத்தினர் என்கிறது இஸ்ரேல்.

**- ரஜீவன்-**

தான் காஸாவின் இஸ்லாமிய பல்கலைக் கழக வளாகத்துக்கு அருகில் சென்று தங்கி யிருந்தவேளை அதுவும் தாக்கப்பட்டது என்கிற்ா் அவர்.

''எவரும் பாதுகாப்பாக இல்லை. வீதி களில் நடப்பது மிகவும் ஆபத்தானது'' என நசீர் பரஹாட் குறிப்பிடுகின்றார்.

''ரொக்கட்களும் விமானக்குண்டு வீச்சும் காஸாவின் 1.5 மில்லியன் மக்க ளுக்கு புதிய விடயமல்ல. எனினும், இஸ் ரேலின் சமீபத்தைய இராணுவ நடவடிக்கை முன்னர் எப்போதையும் விட நடுங்கவைப்ப தாகவுள்ளது. அவர்கள் அளவுக்கதிகமாகச் சென்று விட்டனர்'' என்கிறார் காஸாவில் வாழும் கனடாப் பெண்மணி ஒருவர்.

''சகல இடங்களிலும் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. 15 நிமிடங்களுக்கு ஒருதடவை விமானக்குண்டு வீச்சும் ரொக் கட் தாக்குதலும் இடம்பெறுகின்றன'' என்கின்றார் அரசசார்பற்ற அமைப்பொன் றின் தலைவர்.

''துறைமுகத்துக்கு அருகிலிருந்த மீன் சந்[illegible]த ஒன்று தரை[illegible]மாக்கப்பட்டது. தபாலகம் அழிக் பட்டது'' என அவர்கள் ஒவ்வொன்றாக விவரிக்கின்றனர்.

இஸ்ரேல் நடத்தும் விமானத் தாக்குதல் களுக்கு உடனடி பதிலடியாகப் பதில் ரொக்கட் தாக்குதல் காஸாவிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

காஸா பள்ளத்தாக்கில் இஸ்ரேல் மேற் கொள்ளும் இந்த வன்முறைகளுக்கு வெள்ளை மாளிகை தனது ஆதரவை வழங்கியுள்ளது வெளிப்படை.

இஸ்ரேல் தன்னைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை அமெரிக்கா உணர்கிறது என்கிறார் வெள்ளை மாளிகை பேச்சாளர் கோர்டென் ஜோன் டிரோ.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதலை மேற்கொள்வதை நிறுத்தும் பட்சத்திலேயே வன்முறைகள் நிறுத்தப்படும் என்பது அவரது நிலைப்பாடு.

2006ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் லெப னானின் ஹெஸ்புல்லா அமைப்புக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போதும் அமெரிக்கா இந்த நிலைப்பாட்டைக் கையாண்டது.

இஸ்ரேல் அப்பாவிப் பொதுமக்களை கொலைசெய்யும் இராணுவ நடவடிக்கையை நிறுத்தவேண்டும் என அது வேண்டுகோள் விடுக்கவில்லை. மாறாக யுத்தநிறுத்தம், நிரந்தர அமைதி என வலியுறுத்தியது. ஜனாதிபதி புஷ் தனது ஆட்சிக்காலத்தின் இறுதிநாட்களிலும் இஸ்ரேலுக்கான ஆதரவைக் குறைத்துக்கொள்ளாததை இது புலப்படுத்துகின்றது.

ஜனாதிபதி புஷ்ஷோ அவரது வெளிவிவ கார அமைச்சரோ இதுவரை எதனையும் தெரிவிக்கவில்லை.

புஷ் நிர்வாகம் தனது இரண்டாவது பகுதியில் இஸ்ரேலுக்கு முன்னரை விட அதிகளவு ஆதரவை வழங்கியிருந்தது.

அமெரிக்காவில் புதிய நிர்வாகம் பொறுப் பேற்பதற்கு முன்னர் ஹமாஸ் மீது தாக்கு தலை மேற்கொள்ளவேண்டுமென இஸ் ரேல் எதிர்பார்க்கின்றது.

புஷ் நிர்வாகம் தனக்கு ஆதரவளிக்கும் என உறுதியாக நம்பும் இஸ்ரேல், ஒபாமா குறித்து நம்பிக்கையற்ற நிலையில் காணப்படுகின்றது.


ஸ்ரீ ராம ஜெயம்

## நினைவு அஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி
## இராசம்மா சிவப்பிரகாசம்



தோற்றம்
02.10.1916

மறைவு
15.12.2008

அழகக்கோன் சரவணமுத்து முதலியார் பரம்பரையில் அவதரித்த பொன்னாலை கிருஸ்ணன் ஆலயம், வழக்கம்பரை அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் முன்னாள் தர்மகர்த்தாவும் மனேச்சருமான கயிலாயர் இராமலிங்கம் சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவி திருமதி இரா சம்மா சிவப்பிரகாசம் 15.12.2008இல் சிவபதம் அடைந்தார்.

இவர் திருமதி அமரர் பரமேஸ்வரி அம்பலவாணர், திருமதி அமரர் இராசலட்சுமி அம்பலவாணர், சிவப்பிரகாசம் கைலாயநாதன், சிவப்பிர காசம் ஜெகநாதன், அமரர் சாந்தகுணதேவி ஆகியோரின் அன்புத் தாயும் மனுநீதி முதலியார் பரம்பரையில் உதித்த சின்னையா அப்புத்துரை விதா னையார், சின்னையா முத்துக்குமாரசாமி ஆகியோரின் பாசமிகு சகோத ரியும் திருமதி ரதிதேவி லோகேந்திரன், திருமதி ஸ்ரீரஞ்சினி சரவணபவன், திருமதி தாட்சாயினி அருள்நேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்சிகா, மோகனப்பிரியன், மதுரா, வித்தியா, பிரிதினி, பிறேமிகா ஆகியோ ரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் 04.01.2009 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குகொண்டு அமரரை நினைவு கூர்வதோடு அன்று நடைபெறும் மதியபோசனத்தி லும் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம். (சி/556465)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து வருடங்களின் பின் கைமாறிய கிளிநொச்சி!



எண்பதுகளின் நடுவில் இருந்தே அடிக்கடி கைமாறும் பிரதேசமாக இருந்து வந்த கிளிநொச்சி, இப்போது மீண்டும் அரசுப்படைகளிடம் வீழ்ந்திருக்கின்றது.

1990இன் முற்பகுதியில் இந்திய அமைதிப்படைகளின் வெளியேற்றத்துடன் கிளிநொச்சி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வந்ததாயினும், அந்த நகரம் அதற்குப் பின்னர் முழுமையாக அரசுப்படைகளின் கட்டுப்பாட்டில் வரவேயில்லை.

1996 இன் பின்னர் 'சத்ஜெய' மற்றும் 'ஜெயசிக்குறு' படைநடவடிக்கைகளை ஒட்டி கிளிநொச்சி நகரப்பகுதியில் படையினர் ஆழக்கால் பதித்தனராயினும், கிளிநொச்சி நகரத்தின் ஒரு பகுதியே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. ஆனையிறவு, பரந்தனில் இருந்து தென்புறமாக முன்னேறிய படைகள் கிளிநொச்சி மகா வித்தியாலயப் பிரதேசம் வரையே தமது கட்டுப்பாட்டை விஸ்தரித்திருந்தன.

கிளிநொச்சியைப் பரந்தன் ஊடாக ஆனையிறவுப் பெருந்தளத்துடன் இணைத்துக்கொண்ட படைகள், கிளிநொச்சியில், பரந்தன் - கிளிநொச்சி பிரிகேட் தலைமையகம், பதினைந்து உபமுகாம்கள், பதினாறு கிலோமீற்றர் சுற்றுவட்டத்திலான முன்னரங்கக் காவலரண்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெருந்தளமாக அதனை அப்போது மேம்படுத்தின.

வவுனியாவையும் வடக்கையும் தரைவழியாக இணைக்கும் எண்ணத்துடன் அச்சமயம் அரசுப்படைகளால் ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிக்குறு' நடவடிக்கையின் பிரதான இலக்கும் கிளிநொச்சி படைமுகாம் ஊடாக அந்த உத்தேச பாதையை உருவாக்குவதாகத்தான் இருந்தது.

'ஜெயசிக்குறு' படைநடவடிக்கைகளுக்கு எதிரான புலிகளின் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையின் முக்கிய மையமாகக் கிளிநொச்சியே அமைந்தது.

1998 ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி அதிகாலை 1.20 மணியளவில் கிளிநொச்சி பெரும் படைத்தளம் மீது தான் ஆரம்பித்த 'ஓயாத அலைகள் - 2' நடவடிக்கை மூலம் - நாற்பதுமணி நேர சமரின் பின்னர் - கிளிநொச்சியைப் புலிகள் கைப்பற்றினர்.

சுமார் ஆயிரத்து இருநூற்றியைம்பது படையினரைப் பலியெடுத்து, சுமார் நானூறு புலிகளைப் பலி கொடுத்து, 1998 ஒக்ரோபர் கடைசியில் தாம் கைப்பற்றிய கிளிநொச்சியைச் சரியாக பத்து ஆண்டுகள் கழித்து இப்போது அரசுப் படைகளிடம் மீண்டும் பறிகொடுத்திருக்கின்றது புலிகள் அமைப்பு.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கண்டி வீதியில் - கிளிநொச்சி நகரின்ஒரு பகுதியை மட்டுமே அரசுப் படைகள் வைத்திருந்தன.

**- வி.சிவராம் -**

ஆனால், இன்றோ கண்டி வீதியில் கொக்காவிலில் தொடங்கி வடக்காக இரணைமடு, கிளிநொச்சி நகரம் ஆகியவற்றைத் தாண்டி, பரந்தன் சந்தி வரை படைகள் முன்னேறியிருக்கின்றன.

இப்பிரதேசத்தில் கண்டி வீதிக்கு மேற்குப் புறத்திலிருந்து முன்னேறி, கண்டி வீதியைக் கைப்பற்றியுள்ள அரசுப் படைகள் இனி, கண்டி வீதிக்குக் கிழக்காக முல்லைத்தீவு மாவட்டத்தை இலக்கு வைத்து நகரத் தொடங்குமா? அல்லது பரந்தன் சந்தியிலிருந்து ஆனையிறவுப் பக்கமாக நகர்ந்து ஆனையிறவு, பளை, முகமாலை போன்றவற்றைக் கைப்பற்றி, குடாநாட்டில் உள்ள படையுடன் கைகுலுக்கி இணைய முயலுமா? - என்பதே இப்போதைய கேள்விகளாகும்.



எது, எப்படியென்றாலும் கடந்த ஒரு தசாப்த காலமாகப் புலிகளின் அரசியல் தலைநகரமாக விளங்கிய கிளிநொச்சியை எப்படியும் கைப்பற்றியே தீருவோம் என்ற சந்தத்துடன் தாம் ஆரம்பித்த பெரும் படை நடவடிக்கையில் தொடர்ந்து அரசுப் படைகள் வெற்றி நடைபோட்டு வருகின்றமை மஹிந்த அரசுக்குக் கிடைத்த மிகப் பெரிய அரசியல், இராணுவ வெற்றி என்றால் அது மிகையாகாது.

அதேபோல, 1996 இல் யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறிய சமயம், அதனால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பெரும் அரசியல் - இராணுவத் தோல்விக்கும் பின்னடைவுக்கும் ஒப்பானது இப்போது கிளிநொச்சி நகரத்தை கோட்டைவிட்ட அவர்களது இழப்பாகும்.

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவிருக்கையில் அரசுத் தரப்புக்குக் கிடைத்த இந்தப் பெரிய இராணுவ வெற்றி, தேர்தல் வாக்களிப்பில் பெரும் அரசியல் வெற்றியாகவும் பரிணமிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கிளிநொச்சி வெற்றியை அடுத்து, தென்னிலங்கையில் தமது அரசுக்குக் கிளம்பப் போகும் பெரும் அரசியல் செல்வாக்கு, ஆதரவு ஆகியவற்றை அரசியல் இலாபமாக மாற்றும் எண்ணத்துடன் உடனடிப் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழர்களின் ஒரு பிரதான நகரம், அதைக் கைப்பற்றும் அரசுப் படைகளின் போர் வெறித் தீவிரத்தில் இன்று ஆள்கள் இல்லாத சுடுகாடாக மாற, அதை அரசுப் படைகள் ஆக்கிரமித்திருக்கின்றன.

இந்த வெற்றியைத் தென்னிலங்கை ஆரவாரமாகக் கொண்டாடத் தொடங்கிவிட்டது. உரிமைகோரி கிளர்ந்தெழுந்த ஈழத் தமிழர்களின் எழுச்சியை - முதுகை - முறித்து அடக்கிய வெற்றியாக 'ஜெயவேவா' கோஷத்துடன் வெடிகொளுத்தி ஆர்ப்பாட்டமாகச் சிங்களம் கொண்டாடுகிறது.

இந்த ஆரவாரத்தில், வன்னிப் பெரு நிலப்பரப்பில் கிளிநொச்சி உட்பட்ட பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து காடுகளிலும் மரநிழல்களிலும் பற்றைகளிலும், புதர்களிலும் தங்கியிருந்து அல்லற்படும் பல லட்சம் தமிழர்களின் - அகதிகளின் - பேரவலம் அடங்கி, அமுங்கிப்போய் விட்டமைதான் பெரும் துரதிஷ்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

University of Jaffna will entertain applications upto 19.01.2009 from suitably qualified persons for the under mentioned posts on contract basis

## FACULTY OF ARTS

**Assistant Lecturer / Tutor in**

Archaeology / Christian Civilization / Drama & Theatre Arts / Economics / Education / English Literature / Fine Arts (Art History) / Geography / Hindu Civilization / Hindu Philosophy / History / Linguistics / Museum Studies / Planning / Philosophy / Psychology / Political Science / Sociology / Sanskrit / Tamil / Media Studies.

**Assistant Lecturer / Instructor in**

Art & Design / Dance (Bharathanatiyam) / (Kathakali) / Music (Viocal / Violin / Pannisai) / Home Economics

## FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

**Asst. Lecturer / Tutor in**

Commerce (Accounting / Marketing) and Management Studies (Human Resource Management / Financial Managemment)

## UNIT OF SIDDHA MEDICINE

**Asst. Lecturer (On Contract) / Demonstrator (On Contract) in Siddha Medicine**

**Note: Candidates awaiting the results of the final degree examination may also apply.**

| POST | SALARY SCALE |
|---|---|
| Asst Lecturer | Rs.25,145/- (Fixed) per month |
| Tutor/Demonstrator/Instructor | Rs.20,755/-(Fixed) per month |

In addition to the above salary the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on payment of Rs.100/ per application form, Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self-addressed stamped envelop 23x30 cm.in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Oniy short listed applicants will be called for an interview.

**ACTG.REGISTRAR,**
University of Jaffna.
Jaffna
2009.01.02

# சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கக் கிளைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.5

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23 கிளைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் அந்தந்தக் கிளைகளில் நடைபெற்றன.

கைதடி - நுணாவில் கிளை (இல.5) தவிர்ந்த ஏனைய கிளைகளுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். கைதடி - நுணாவில் கிளை உறுப்பினர் தெரிவுக்குப் போதிய உறுப்பினர்கள் சமுக மளிக்காததால் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்கள் தெரிவு இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)


# திருமண சேவை

மணமக்களே! இதோ ஓர் அரியவாய்ப்பு. கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யைத் தேடி அலையாதீர்கள் www.thaalee.com என்னும் இணையத்தை (website) ஐ நாடுங்கள். இதில் 5500 மணமக்களுடைய படம், ஜாதகம் மற்றும் சகல விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் உங்களுடைய விவரங்களையும் நீங்களே பதித்து கொள்ளலாம். உங்களுக்கு விருப்பமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 2523127, 2520619


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மாணிக்கம் சாம்பசிவம்**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர், நயினாதீவு)

தோற்றம்: 26.03.1944
மறைவு: 17.12.2007

தங்கள் பிரிவு உணர்வுக்கு உரைக்கப்பட
முடியாமல் உள்ளத்தை உருக்குகிறதே!
எமது வாழ்விற்கு வழிகாட்டிவிட்டு
சடுதியில் எமைப் பிரிந்தீர்
என்றென்றும் தங்கள் நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கும்.

35, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(81460)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 28 11 1954 — உதிர்வு 28 12 2006



**அமரர் சி.பேரானந்தம் சிவானந்தன்**

இதயத்தில் கனக்கும் நினைவுகள்
இமைகளில் ஈரமாய்க் கசிகின்றன
உங்கள் பயணமோ பாதி வழிதனிலே
பாதை ஓரத்தில் முடிந்து விட்டது
சொல்லாமல் எங்கு சென்றீர்கள்
ஏங்குகின்றோம் உங்களைக் காண
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

41/9, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்:
மனைவி, மகள்.

(81469)

# International Federation of Red Cross and Red Crescent Societies

**NOTICE OF VACANCY**

**The Sri Lanka Delegation, Colombo of the International Federation of Red Cross and Red Crescent Societies seeks condidates for the following position:**

| | |
|---|---|
| **Position -** | Constrution Engineer |
| **Based station-** | Jaffna |
| **Contract-** | This position will be under a project based contract. |

**Qualifications & Experience:**

Minimum Bachelor in Civil Engineering with three years experience * Master of civil Engineering with 2 years experience * Experience of Supervision of Building Construction (minimum 2 years) *Experience in planning and management of construction work * Previous experience in Red Cross or humanitarian aid organisation in a developing country would be an added advantage.

**Key Responsibilities:**

1. Liaise with the Ministry of Health (MoH) Technical Officer/MoH Project engineer/ MoH consulting engineer, MoH Contractor, Deputy Provincial Director of Health and Service (DPDHS), District Medical Officer (DMO) and SLRCS district / local branches in overall implementation of construction/reconstruction program.
2. Take care of daily office work and maintain regular and structured up.date on progress of construction to construction delegate.
3. Work together with MoH Technical Officer/MoH Project engineer/MoH consulting engineer, DPDHS and DMO during the survey, design and construction of the projects
4. Check drawings, cost estimates, site layout plans, specifications prepared by MoH Technical Officers/MoH Project Engineers/MoH consulting engineer.
5. Prepare work plan in MS Project, together with the DPDHS, MoH Technical Officers/ project Engineer/ MoH Consulting engineer and the contractor.
6. Monitor the progress of construction/ reconstruction work as per work plan and take timely action if the progress is not on schedule.
7. Check the reinforcement steel as per design and drawing and agree on before starting of concreting work together with the DPDHS and MoH Technical Officer/ MoH Project engineer/MoH consulting engineer.
8. Check the quality of concreting work and witness the taking of test cubes.
9. Initiate material testing together with DPDHS, MoH technical Officer/ MoH Projet engineer/ MoH consulting engineer and obtain results. Check the test results and keep a record of the entire test.
10. Inform to the DPDHS, MoH Technical Officer/ MoH Project engineer/ MoH consulting engineer in writing if the quality of work is not as per specifications and report to construction delegate.
11. Monitor the quality of the workmanship together with the DMO, MoH Technical Officer/ MoH Project engineer/MoH consulting engineer.
12. Check the [illegible]der specifications and ensure that all the specifications are adhered to.
13. Initiate joint measurement of completed work together with the DMO, MoH Technical Officer/MoH Project engineer/MoH consulting engineer and Contractor.
14. Check the measurement sheet and abstract of cost as per tender document and endorse it.
15. Attend the progress meeting at site and maintain the minutes of meeting.
16. Check the final defect list prepared by with the DPDHS, MoH Technical Officer, / MoH Project engineer/MoH consulting engineer.
17. Update status of comtruction activities and the corresponding tables.
18. Prepare ISR (Interim Short Report) and data collection for Quarterly Report.
19. Prepare timely monthly progress report and submit to Construction Delegate for perusal.
20. Take full responsibility in verification of the BOQ and recommendation for payment.

**Skills & Competencies:**

* Self - supporting in computers (Windows, spreadsheets, Word processing) * Language - English (fluent spoken and written) * Establish and ensure effective working relationship * Ability to advise and support * Able to prioritize and meet deadlines * sensitivity to diversity; flexibility & adaptability; pro - activity; solution focused; decisiveness; accountability; teamwork; interpersonal skills; resilience.

Interested candidates are requested to send in their resumes along with a covering letter stating '*why you are suitable for this position*' by post to:
Branch Executive Officer
**Sri Lanka Red Cross**
**No. 73, Kandy Road**
**Jaffna**
Sri Lanka.
**Fax No. 0212229792**
E-mail to: kanishka.peiris @ ifrc.org

**The last date for receiving applications will be 13th January 2009 for the above post, Please indicate the relevant post on the envelope. Only short-listed candidates will be notified.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியமும் இந்தியத்தேசியமும்: மும்பைத் தாக்குதலினூடாக ஒரு பயணம்

'பயங்கரவாதம் கிலோ என்ன விலை? மும்பைத் தாக்குதலை வைத்து ஒரு விலை நிர்ணயம்' இப்படித்தான் உண்மையிலேயே இந்தக் கட்டுரைக்கு தலைப்பிட வேண்டும். ஏனெனில் அந்தளவுக்கு 'பயங்கரவாதம்' பெரும் சந்தைப் பொருளாக மாற்றம் கண்டு வருகிறது. 2001 செப்டம்பர் 11இல் நியூயோர்க்கில் நடந்த தாக்குதலுடன் சூடுபிடிக்கத் தொடங்கிய இந்த வியாபாரம் அண்மையில் மும்பையில் நடந்த தாக்குதலுடன் மேற்படி மாற்றத்தை அடைந்துள்ளதாகவே படுகிறது.

ஏனெனில் இத்தாக்குதல் நடந்ததிலிருந்து இந்திய அதிகாரவர்க்கத்தை தாங்கிப் பிடிக்கும் ஊடகங்கள் இப்புற நிலையை உருவாக்க பெரும் பாடுபடுகின்றன. ஆனால் மும்பைத்தாக்குதல் உலக அளவில் உடனடியாக சில எதிர் வினைகளை தோற்றுவித்த போதும் ஒரு சில நாள்களிலேயே அது பெரிய வட்டத்திலிருந்து ஒரு புள்ளியாகத் தேய்ந்து வருகிறது. இந்தப் புள்ளியும் நாளை நிலைத்திருக்குமா என்பது சந்தேகமே! இதில் ஆச்சரியப்படக் கூடிய மற்றொரு விடயம் என்ன வெனில் இந்திய அதிகார வர்க்கத்தைச் சார்ந்த ஊடகங்கள் இவ்வளவு முக்கு முக்கியும் இந்திய உப கண்டத்திலேயே மேற்படி எதிர்வினை ஒரு தேய்மானத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருப்பதுதான். மக்களால் மறக்கப்பட்டுக்கொண்டிருக்கிற விடயத்தை ஊடகங்கள்தான் தூக்கி நிறுத்துகின்றனவோ என்று எண்ணுமளவுக்கு இந்திய மக்களின் எதிர்வினை இருப்பதை கண்கூடாகப் பார்க்கக்கூடியதாகவிருக்கின்றது.

**பெரும் எழுச்சியின் பின் தேக்கம் ஏன்?**

உடனடியாகப் பெரும் எழுச்சியைத் தோற்றுவித்த இத்தாக்குதல் ஏன் ஒரு சில வாரங்களிலேயே பெரும் தேக்கத்தைச் சந்தித்திருக்கின்றது என்பதைத்தான் நாம் தற்போது சற்று ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஆய்வு ஒரு வகையில் ஈழப்பிரச்சினையில் இரட்டை வேடம் போடும் இந் திய ஆளும் வர்க்கத்தின் நிலைப்பாட்டில் உள்ள அபத்தக்கூறுகளை அடையாளம் காட்டும் விதத்தில் அமைந்திருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். ஏனெனில் மேற்படி தாக்குதலும் அதையொட்டிய இந்திய அரசின் நடவடிக்கைகளும் ஏற்கனவே இந்திய உபகண்டத்தின் 'விளைவுகளுக்குள்' சிக்குண்டுள்ள எமக்கு சில பாதகமான அம்சங்களை தோற்றுவிப்பதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றன. எனவே இத் தாக்குதலின் 'விளைவை' நாமும் ஒரு வகையில் அனுபவிப்பவர்களாகவே இருக்கிறோம்.

இந்திய ஊடகங்கள் பெரும் பிரயத்தனப்பட்டு இத்தாக்குதலை 'செப்டம்பர் 11' இற்கு நிகராக வர்ணிக்கத் தொடங்கியிருந்தன. உள்ளூர் மக்களை ஒருங்கிணைப்பது மட்டுமல்லாமல் உலக கவனத்தையும் தம்மீது திருப்பும் நோக்குடன் ஊடகங்கள் செயற்படத் தொடங்கியிருந்தன. ஆனால் இரண்டுமே நடைபெறவில்லை என்பது இந்திய ஆளும் வர்க்கத்தையும் அதனைத் தாங்கும் ஆதிக்க ஊடகங்களையும் அதிர்ச்சிக்குள் தள்ளியிருக்கிறது. இந்திய மட்டத்திலேயே மேற்படி ஊடகங்களின் அபத்தக் கூத்தை மறுதலித்து பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது இந்திய ஆளும் வர்க்கத்தை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. மனித உரிமைப் போராளியும் எழுத்தாளருமான அருந்ததி ராய் "9 is not 11 and November isn't September" என்ற தலைப்பில் 'Out Look' சஞ்சிகையில் தனது கருத்தை உடனடியாகவே முன்வைத்தமை நல்லதொரு உதாரணம். (அந்த ஆய்விலும் சில குளறுபடிகள் இருந்த போதிலும்)

**இந்தியா ஒன்றும் அமெரிக்கா அல்ல**

நாம் முதலில், உலக அளவில் இந்திய அரசு கைவிடப்பட்டிருக்கிற சங்கதியைக் சிறிது ஆராய்வோம். உண்மையைக் கூறப்போனால் இதில் ஆய்வுக்குரிய எந்த விடயமோ பரம இரகசியமோ ஒன்றும் இல்லை. வெளிப்படையான விடயம் உலகின் மீதுள்ள மேற்குலக - குறிப்பாக அமெரிக்காவின் ஆதிக்கம். அதன் வழிதான் உலகின் கூட்டணிகள் உருவாகின்றன. மும்பைத் தாக்குதலை அடுத்து இந்தியாவும் தெற்காசிப்பிராந்தியத்தில் ஒரு புதிய கூட்டணியை உருவாக்க பெரும் பிரயத்தனப் படுகிறது. ஆனால் மேற்குலகின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரும்' இந்தியா வின் 'பயங்கரவாதத்திற்கெதிரான போரும்' ஒன்றல்ல. இதை நாம் சொல்லவில்லை. மேற்குலகின் 'இராஜதந்திரம்' இதுதான். இந்திய ஊடகங்களுக்கு இது புரியாமல் போனது ஆச்சரியமளிக்கிறது.

செப்டம்பர் 11 தாக்குதலை அடுத்து எந்தவித பேச்சுக்கும் இடம் வைக்காமல்




மேற்குலகம் ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்தது போல் தாமும் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க முடியும்; அதற்கு மேற்குலகம் ஆதரவளிக்கும் என்று இந்திய ஊடகங்கள் முட்டாள்தனமாக நம்பின - ஒரு வகையில் உளறின என்று கூட சொல்லலாம். இப்போது நாம் இந்த கட்டுரைக்கு அருந்ததிராயின் பாணியில் இப்படி தலைப்பு வைக்கலாம் 'இந்தியா ஒன்றும் அமெரிக்கா அல்ல.'

ஆனால் இந்திய அரசியல்வாதிகள் கெட்டிக்காரர்கள். தாம் ஒன்றும் கிழிக்க

**உடனே பெரிய வட்டமாகத் தெரிந்தது இப்போது சிறு புள்ளியாகத் தேய்கிறது**

முடியாது என்பதை தெளிவாக உணர்ந்து மௌனம் காத்தார்கள். வழக்கம் போலவே முன்னுக்குப் பின் முரண்டு பேசினார்கள். (ஈழப் பிரச்சினை தொடர்பாக ஆளும் தி.மு.க. அரசும் இந்திய மத்திய அரசும் பேசியதை இதனுடன் ஒப்பிடலாம். இதைத்தான் நாம் பின்னுக்கு தெளிவாகப் பார்க்கப்போகிறோம்) அவர்களுக்கு தெரியும் சுடுகஞ்சி ஆறி பழசாகும் என்பது. ஆனால் அவர்களே ஆச்சரியப்படும் வகையில் கஞ்சி ஆறினது மட்டுமல்ல புளித்தும் விட்டது. அதிகார ஊடகங்கள் மூக்குடைபட்டதுதான் மிச்சம்.

War and Terror என்ற பல்லவியுடன் ஆப்கானை ஆக்கிரமித்துள்ள மேற்குலகத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஓர் இஸ்லாமிய நாடாக - ஆப்கானிஸ்தானின் எல்லை நாடாக - ஆயிரம் முரண்பாடு களைக் கடந்தும் சில இராஜதந்திர உடன் பாடுகள் இருக்கின்றன. இந்த 'இராஜதந்திரத்தை' இந்தியாவுக்காக இழக்கவோ ஏன் சிறிது தளர்த்தவோ மேற்குலகம்; குறிப்பாக அமெரிக்கா விரும்பாது. எனவே இவற்றை மீறி பாகிஸ்தான் மீது போர் தொடுப்பது என்பது வெறும் பூச்சாண்டிதான். "நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறன், நீ அழுகிற மாதிரி அழு" என்பது போல், பாகிஸ்தானிலுள்ள சில குழுக்களை முன்னிறுத்தி கொண்டலீஸா அம்மையார் வைத்த குற்றச்சாட்டும் அதனை அடுத்து அவர்களில் சிலரை பாகிஸ்தான் அரசு கைது செய்த செய்கையும் இருக்கின்றன. இதுதான் இந்தப் பிரச்சினையில் உள்ள அதிகூடிய எல்லை. இதற்கு மேல் எதிர்பார்ப்பவர்கள் முட்டாள்கள். இன்னும் கொஞ்சம் நீட்டிப் பார்த்தால் இன்னொரு 'கார்க்கில் போர்' அவ்வளவுதான். திரும்பவும் நாம் ஒரு முறை சொல்லிக்கொள்ளலாம்."இந்தியா ஒன்றும் அமெரிக்கா அல்ல." இந்த இராஜதந்திரத்தின் பின்னணியில்தான் இந்தியா உலகத்தால் கைவிடப்பட்டிருக்கிறது.

அத்தோடு இத்தாக்குதல் யாரால் நடத்தப்பட்டது என்பது இன்னும் தெளிவாகக்கண்டு பிடிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் எல்லாம் வெறும் ஊகங்கள் மட்டுமே. ஆப்கான் எல்லையில் பாகிஸ்தான் சற்று அமெரிக்காவுடன் முரண்டு பிடிக்கத் தொடங்கியிருப்பதால் பாகிஸ்தானை தனது கைக்குள் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்காவின் பின்புலம் இதில் இருப்பதாகக் கூட சில ஆய்வுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல புகழ்பெற்ற பாகிஸ்தான் ஏடான 'dawn' இதழில், இத் தாக்குதலின் பின்னணியில் இந்திய உளவுத்துறையினரின் தொடர்பு இருப்பதாக சில ஆய்வுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எல்லாம் ஊகங்கள் தான். ஒன்றும் நிருபிக் கப்படாதவை. அவை என்றுமே நிரூபிக்கப்படப்போவதில்லை என்பது வேறு கதை. எனவே இந்த முன் மாதிரிகளின் அடிப்படை யில் பாகிஸ்தானை முழுக் குற்றவாளிகளாக்கி போர் தொடுப்பது என்பது சாத்தியமில்லாதது. பாழாய்ப்போன வாசகம் ஒன்று திரும்பவும் ஞாபகத்திற்கு வருகிறது. "இந்தியா ஒன்றும் அமெரிக்கா அல்ல."

**யார் சூத்திரதாரி?**

அண்மையில் தெற்காசியாவை மையப் படுத்திய அரசியல் ஆய்வாளர் ஒருவருடன் மும்பைத்தாக்குதல் குறித்து உரையாடிக்கொண்டிருந்தபோது, ஒரு முக்கியமான தகவலை அவர் கூறினார். தாக்குதல் நடத்தியவர்கள் யார்? அவர்களின் நோக்கம் என்ன? என்பவற்றை எல்லாம் தாண்டி இந்திய அதிகார வர்க்கம் லஸ்கர் - இ- தொய்பா மீதே குற்றஞ்சாட்டுகிறது. தென்இந்தியாவைச் சேர்ந்த ஓர் அமைப்பு உரிமைகோரி இருந்தபோதும் லஸ்கர் -இ-தொய்பா மீது குற்றம் சுமத்தப்பட்டது. லஸ்கர் - இ - தொய்பா இந்தியா உட்பட சில நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ள போதும் அது காஷ்மீரின் சுதந்திரத்துக்காகப் போராடுகிற ஓர் அமைப்பு.

பராக் ஒபாமா அமெரிக்க அதிபராக பதவியேற்கவுள்ள நிலையில் அவர் வரும் காலங் களில் காஷ்மீர் பிரச்சினையை கையில் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(இதுவும் அமெரிக்காவின் உள்ளார்ந்த அரசியல்களில் ஒன்று).

கிளின்டன் பதவியில் இருந்த காலத்தில் இந்தியாவுக்கு இது பெரும் தலையிடியாக இருந்தது. பராக் ஒபாமாவும் கிளின்டனின் வெளிவிவகாரக் கொள்கைகளையே கடைப்பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிற நிலையில் இந்தியாவுக்கு மீண்டும் இப்புதிய நெருக்கடி. எனவே மும்பைத் தாக்குதலை வைத்து காஷ்மீர் பிரச்சினை யில் ஓர் ஆதாயம் தேடும் படலத்தில் இந்தியா இறங்கி இருப்பதாக அவரது வாதம். உலக பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்ட அல்குவைதாவே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று எல்லோரும் நம்பும் வண்ணம் இருக்க இந்தியாவின் காஷ்மீர் பிரிவினைக் குழுக்கள் மீதான உடனடிக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்குரியது.

எனவே பாகிஸ்தான் மீதும், காஷ்மீர் பிரிவினை வாதக் குழுக்கள் மீதும், தனிப்பட்ட முறையில் இயங்கும் தாவூத் இப்ராகிம் போன்றவர்கள் மீதும் ஒரேயடியாகக் குற்றத்தைச் சுமத்தி தனக்கு எதிரான முழு இஸ்லாமியச் சக்திகள் அனைத்தையும் மும்பைத்தாக்குதலை வைத்து தனது பிடிக்குள் கொண்டு வரலாம் என்று நினைத்த இந்திய அதிகார வர்க்கத்தின் வேகம் ஒரு தமிழ்சினிமா நகைச்சுவை நடிகர் ஒருவரின் பாத்திரத்துக்கு இணையாகச் சுருங்கிப்போனது ஒரு வரலாற்றுச் சோகம்தான்.

**கைநழுவிப்போன தேசியம்**

இனி நாம் உள்ளுக்குள்ளேயே இந்தியாவின் தேசியம் கைநழுவியிருப்பதை ஆராய்வோம்.

கடந்த நவம்பர் 26. நான் நின்ற இடத்தில் வழக்கத்துக்கு மாறாக மாலையிலேயே இருளடைந்து கொண்டிருந்தது அந்த சூழல். உலகத் தமிழினமே ஒருவிதமான பதற்றத்தில் உறைந்திருந்த நாள் அது. அடுத்த நாள் தேசியத்தலைவரின் உரையை ஒட்டிய பதற்றம் அது. மோசமான கள நிலவரங்களால் சோர்ந்திருந்த ஈழத் தமிழினத்திடம்; இயல்பாகவே அந்தப் பதற்றம் தொற்றிக்கொண்டது.

என்னிடம் கூடுதலாக வேறொரு பதற்றமும் சேர்ந்து கொண்டது. தென்னிந்திய திரைப்படத்துறையைச் சேர்ந்த எனது தோழி ஒருத்தியிடம் இருந்து வரவேண்டிய முக்கியமான தொலைபேசி அழைப்பு அது. அந்த அழைப்பிலுள்ள சில சாத்தியங்களை பொறுத்து நீண்ட நாள்களாக இழுபறிப்படும் எனது திரைப்பட முயற்சி ஒன்றுக்காக நான் அடுத்த நாளே அவரைச் சந்திக்க பெங்களூர் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் எனது தொலைபேசிக்கு வந்ததோ ஒரு குறுஞ் செய்தி மட்டுமே. அது "Mumbai under attack". ஏனெனில் அவர் அப்போது மும்பையிலேயே தங்கியிருந்தார்.

அதிர்ந்து போய் தொலைக்காட்சியை முடுக்கியபோது சர்வதேச செய்தி ஊடகங்கள் நேரடியாகவே மும்பைத்தாக்குதலை அஞ்சல் செய்துகொண்டிருந்தன. உடனடியாக அத் தாக்குதலின் வீரியத்தை அப்போது உணர முடியவில்லை. அடுத்த நாள்தான் அதன் விளைவை முழுமையாக அனுபவிக்கக்கூடியதாகவிருந்தது.

தலைவர் பிரபாகரன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது இந்திய ஊடகங்களின் 'பயங்கரவாதம்' குறித்த அரற்றல் அப்பேச்சை இடைவெட்டிக் கொண்டிருந்தது. இதனால் தலைவரின் உரையின் உள்ளடக்கம் லேசாக அதன் முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியிருந்தது. நட்புடனும் தோழமையுடனும் பாரத தேசத்தை விளித்து முன்வைக்கப்பட்ட அந்த உரையை, செவிமடுக்கும் நிலையில் அன்று இந்திய தேசம் இருக்கவில்லை.

இயற்கை உட்பட எல்லாவற்றாலும் வஞ்சிக்கப்பட்ட ஈழத்தமிழினத்தின் மீதி வஞ்சனையை அன்று காலமும் சூழலும் தம் பங்கிற்குத் தின்று தீர்த்தன. அதற்காக மும்பையில் தாக்குதல் நடைபெற்றிருக்கா விட்டால் முதல் வேலையாக தலைவரின் உரையை

பிரான்சிலிருந்து
பரணிகிருஸ்ணரஜனி

இந்திய அதிகார வர்க்கம் கவனத் தில் எடுத்திருக்கும் என்று இதற்கு பொருள் கொள்ளக்கூடாது. உரையை அடுத்து இரு தரப்புக்குமிடையே நடைபெறவேண்டிய கருத்து பரிமாற்றங்கள், எதிர்வினைகள் ஒரு தேக்கத்தைச் சந்தித்துவிட்டன. இது உடனடியாக தம்மை ஓர் இன அழிப்பில் இருந்து காப்பாற்றத் துடிக்கும் ஒரு இனத்துக்கு சாதகமான அம்சம் அல்ல.

நான் மேற்குறிப்பிட்ட திரைப்படத்துறையைச் சேர்ந்த தோழி, நடிகை என்பதையும் தாண்டி நட்புடனும் தோழமையுடனும் பழகக்கூடியவர். நடிகைகள் குறித்த எனது மதிப்பீட்டையே கலைத்துப் போட்டவர் அவர். சிறந்த நடிகை - நல்ல உழைப்பாளி. கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக தனிப்பட்ட விடயங்களைக்கூட மனம் விட்டுப் பேசக்கூடிய அளவுக்கு எமக்கிடையிலான நட்பு வளர்ந்திருந்தது. ஆனால் மும்பைத் தாக்குதலுக்கு அடுத்த நாள் எனது சந்திப்பு தொடர்பாக தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது பேசினார் என்பதை விட அப்பளமாகப் பொரிந்தார் என்பதுதான் சரியாக இருக்கும்.

(மிகுதி நாளை வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக*

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 14 . 01 . 1924

மறைவு 27 . 12 . 2006

திதி: அட்டமி (04.01.2009)

அரியாலையூர் விஸ்வகுலதிலகர்

## அமரர் கலாபூசணம் வல்லிபுரம் கந்தையா

(மணியம்மாஸ்ரர்)

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது

40/1, கலைமகள் வீதி,
அரியாலை.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(80381)

## மரண அறிவித்தல்

## S.K.தியாகராசா

*பிரபல புகையிலை வர்த்தகர்*

*[உரிமையாளர் - லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், கல்கமுவ]*



காரைநகர், களபூமி, தன்னையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை தியாகராசா கடந்த 01.01.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், மா/ரந்தெனிகம முஸ்லிம் வித்தியாலயம், மாகோ), ஜெயரூபன், ஜெயக்குமார், ஜெகமோகன் (லட்சுமி ஸ்ரோர்ஸ், கல்கமுவ), திருச்சாந்தி, ஞானதர்சினி (A/L 2008 கணிதப்பிரிவு, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), விசயரூபி (A/L 2010 கலைப்பிரிவு, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற க.பீதாம்பரம் மற்றும் பரிமளம் ஆகியோரின் சகோதரரும் S.ஆறுமுகம் (பிரபல வர்த்தகர் - பாலாவோடை), பீ.தங்கம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.01.2009) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் காரைநகர், களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

*மானிப்பாய் வீதி,*
*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.*

*(81365)*

## வீட்டுத் திட்டக் கொடுப்பனவு

நவாலி,ஜன.4

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அங்கவீன முற்றவர்களுக்கு வீட்டுத் திட்டத்திற்கென ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டக் கொடுப்பனவாக 60 ஆயிரம் ரூபா வந்து சேர்ந்துள்ளது.

ஆனந்தராசா சுதா (பிரான்பற்று, பண்டத்தரிப்பு), இ.பத்திநாதர் (பெரியவிளான், பண்டத்தரிப்பு), மகாலிங்கம் செல்வராசா (இளவாலை) ஆகியோருக்கு இக் கொடுப்பனவு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(203-100)

## பாடசாலை சேவை

*நவாலி, மானிப்பாய், சுதுமலை, தாவடி, பொற்பதி வீதி, சம்பியன் வீதி, கொக்குவில் ஊடாகப் பல வருடங்களாகச் சேவையில் ஈடுபடும் எமக்கு மாணவர்கள் தேவைப்படுகின்றார்கள்.*

★ (தரம் 1, தரம் 2 மட்டும்)

★ யாழ்.இந்து, பிரிட்டிஸ் (BIS), பொஸ்கோ, சுண்டுக்குளி பாடசாலை மாணவர் விரும்பத்தக்கது.

★ நாம் இருக்கைகளுக்கு அளவாகவே பிள்ளைகளை ஏற்றிச் சேவையில் ஈடுபடுகின்றோம்.

தொடர்பு: செ.சுஜிதரன்

*சின்னப்பா வீதி அருகில், நவாலி.*

தொ.பே: 0778470808, 021 222 7066, 021 4591052.

## தவறிவிட்டது

சோமசுந்தரப் புலவர் வீதி, நவாலி வடக்கு என்னும் முகவரியில் வசிக்கும் பிரபாகரன் பாமினி என்பவரது தேசிய அடையாள அட்டையின் விண்ணப்பத்தின் அத்தாட்சிப் பத்திரம், விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்னும் பல ஆவணங்கள் அடங்கிய கைப்பை கடந்த புதன்கிழமை நவாலியில் இருந்து தாவடிக்குச் செல்லும் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 5133 என்னும் தொலைபேசிக்குத் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## ஒத்துமாறல்

பலாங்கொட தமிழ் மகாவித்தியாலய தமிழ்.இந்து நாகரிக பாடநெறி ஆசிரியரும் நீர்கொழும்பு முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் அரசியல் பாடநெறி ஆசிரியரும் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைக்கு ஒத்து மாற விரும்புவதால் மேற்படி பாடசாலைகளில் ஒத்துமாற விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே: 0718045288, 0718144629

**கணனி வகுப்புக்கள்** London (O/L) க்கான IT (தகவல் தொழில்நுட்பம்) வகுப்புக்கள் குழுக்களாகவோ, தனியாகவோ, தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கான GIT வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்பு: திரு.முகுந்தன், மீனாட்சி அம்மன் கோயிலடி சங்கத்தானை சாவகச்சேரி.

## முன்பள்ளி ஆசிரி[illegible]ர் பயிற்சி

திறந்த பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

காலம்: 6 மாதம்

இடம்: **Holy Cross Pre School,**
**102 A, Main St. Jaffna.**

O/L சித்தி பெற்றவர்கள் எதிர்வரும் 05.01.2009 தொடக்கம் உங்கள் விண்ணப்பப்படிவத்தையும் கைநூலையும் ரூபா 200 செலுத்தி மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

*(81309)*

நிர்வாகிகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: *15.01.1934*

மறைவு: *30.12.2003*

## அமரர் கந்தசாமி குழந்தைவேலு

(தம்பியண்ணா)

(வாணி சவுண்ட் உரிமையாளர்)

*திதி:அட்டமி (04.01.2009) ஞாயிற்றுக்கிழமை*

பாசம் சொரிந்து பாரினிலே எம்மை உயர்த்தி
துன்பம் தெரியாமல் துணையாய் இருந்தீர்கள் உம்
அன்பை இழந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும் நாம்
வாழும் காலமெல்லாம் நீளும் ஐயா நினைவலைகள்
ஆத்மா சாந்திபெற அனுதினமும் வேண்டுகின்றோம்

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

*(81338)*

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

## வெளிநாடுகளில் உயர்கல்வி

**ரஷ்யா (Russia), பெலாரூஸ் (Belarus), போலந்து (Poland), உக்ரைன் (Ukraine), மலேசியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore)**

### ★ MBBS/MD ஆங்கில மொழி மூலம் (6 வருடங்கள்)

- உலகத்தரம் வாய்ந்த பிரபல பல்கலைக்கழகங்களில் (Russia, Belarus) படித்து டாக்டராகுங்கள்.
- இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC), WHO, Educational Commission for foreign Medical Graduates (ECFMC-USA) போன்ற உலக மருத்துவ நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள்.

### ★ சகல துறைக் கற்கை நெறிகள்

- கலை, வர்த்தகம், சட்டம், முகாமைத்துவம், உளவியல், மனித உரிமைகள், உயிரியல், உடற்கூற்றியல் இன்னும் பல கற்கை நெறிகள்.
- Full time - 5 Years
  Post Graduate Studies - 3 Years
  Master Programme - 1 Year

### ★ DIPLOMA கற்கைநெறிகள் (3 வருடங்கள்- Malaysia)

- Diploma in Nursing
  Diploma in Pharmacy
  Diploma in Physiotheraphy
  Diploma in Medical Imaging
  Diploma in Dental Surgery assistant
  Diploma in Medical Laboratory Technology
- கற்கைநெறி பூர்த்தியானவுடன் மலேசியாவில் தொடர்ந்து வேலைசெய்யவும், ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்படிப்புகளுக்குச் செல்லவும் மேலதிக ஒழுங்குகள்.

- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்
- 14-21 நாள்களுக்குள் விசா - 100% உத்தரவாதம்
- வங்கி நிலுவை, ஸ்பொன்சர் தேவையில்லை
- விடுமுறைகளுக்கு Germany, Poland சென்றுவர விசேட ஒழுங்குகள்
- பெண்களுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள்
- யாழ். மாணவர்கள் குழுவாகப் பயணம் செய்ய ஏற்பாடுகள்
- பாஸ்போட் விரைவில் பெறுவதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள்
- கொழும்பு சென்று அடுத்த நாளே பயணம் செய்வதற்கான ஒழுங்குகள்

(81183)

*விசேட சலுகை*
ஜனவரி 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிப்பவர்களுக்கு 50% அனுமதிக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

## OVERSEAS STUDENT PROGRAMME

*இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

*தொ.பே.:* **0777 250555, 021 222 9042, 0115669571**




## Science students, soar with a career in Biotechnology!

Spectrum Institute of Science & Technology, the Outreach Campus of the University of Mysore, India now provides cutting edge technology and world class training here in Sri Lanka. The University is world renowned for its numerous innovations and offers higher education to over 40,000 students every academic year.

Spectrum Campus is the only institution in Sri Lanka to offer an internationally recognised and fully accredited Bachelor's Degree programme in Biotechnology. Armed with the degree you qualify for a master's, doctoral studies or research in Biotechnology.

Other subjects offered with **value added** content:

- **Bachelor of Science in Mathematics / Statistics and Computer Science**
  Plus (Microsoft Certified Systems Engineer Certification, Cisco Certified Network Associate, Sun Certified Java and Project Management)
- **Bachelor of Business Management.**
  Plus (Project Management and Six Sigma Green Belt)

Reasons why you should join Spectrum

- Qualified and experienced lecture panel
- Enhance your employment opportunity
- Quality education at an affordable fee

Armed with a degree in Biotechnology, a whole new world of opportunities awaits!

**Spectrum welcomes students awaiting their A/L results.**

Hotlines: 2504742 / 2554848 / 0773763245


**www.spectrumcampus.com**

SPECTRUM Human Capital Development

No:190, Galle Road, Next to HFC, Colombo 04. Outreach Campus of the University of Mysore in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் கோமாளிகள்?



ஆங்கில இலக்கிய மேதையான சேக்ஸ்பியர் உலகமே நாடகமேடை என்றார். கோமாளிகள் இல்லாத நாடகம் சப்பென்று சுவையற்றுப் போய்விடும். இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இன்று பழ.நெடுமாறன் போன்றவர்களைக் கோமாளிகள் எனக்,கூறிப் பலரின் கண்டனத்தையும் வயிற்றெரிச்சலையும் கிளப்பி விட்டுள்ளார்.

தமிழகச் சட்ட சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதே இமாலய சாதனை என்பது சட்ட சபையின் நாளாந்த நடவடிக்கைகளை கவனிப்பவருக்கு நன்றாகவே விளங்கும். அதுவும் எதிர்ப்பே இல்லாது ஒருமன தாக அனைத்துக் கட்சிகளாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மிகச் சிலவே.

அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு எதுவுமே செய்யாது உதாசீனம் செய்தால் அந்த சட்ட சபைக்கும் அதில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள மதிப்பு என்ன ?

ஈழத் தமிழர் பிரச்சினையில் கடந்த மோதங்களில் இரண்டு தடவைகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் கதி என்ன ஆயிற்று என்று கேட்டால் பதில் இல்லை. இவர்களின் இத்தகைய தீர்மானங்களுக்கே எதுவித நடவடிக்கையும் எடுக்காது மகிந்தவும் பசிலும் சொல்லும் வெறும் வாய்ச் சொல்லை ஏற்று நடக்கும் மத்திய அரசால் தமிழக அரசியல்வாதிகள் கோமாளிகள் ஆக்கப்பட்டு வருவதை யாரால் மறைக்க முடியும்?

ஈழத்தமிழர் பிரச்சினைக்கும் அப்பால் தமிழகத் தமிழர் விடயத்தில் காவேரி நதி நீர்ப் பங்கீடு, ஒகனேக்கல் குடிதண்ணீர் திட்டம் போன்றவற்றில் என்னதான் நடந்துவிட்டது? உச்ச நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயம் வழங்கிய தீர்வுகளுக்கு அமைய முடிவுகாண முடியாத தமிழகத் தமிழ் அரசியல்வாதிகளை பிறர் எப்படி எடை போடுவர் ?

சிங்களக் கடற்படையால் தமிழக மீனவர் சுடப்படும் நிலையிலும் இந்திய மைய அரசு இலங்கை அரசுக்கு கொத்தடிமை போல் நடந்து கொள்கிறது: அதன் அமைச்சர் அவையில் தமிழகத் தமிழ் அரசியல்வாதிகள் அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்றால், இவை போன்ற விமர்சனங்கள் வெளியாவதில் வியப்பு என்ன இருக்க முடியும்?

இந்தியப் பிரதமரை வாயே திறக்க முடியாத நிலையில் இலங்கை ஜனாதிபதியும் இலங்கை அரசும் வைத்துள்ள நிலையே தெரிகிறது. பலதடவைகள் பலரும் பகிரங்கமாகத் தெரிந்து கொண்ட உண்மை நிலைதான் இது.

இத்தகைய நிலையில் இராணுவத் தளபதியும் இலங்கை ஜனாதிபதியும் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் எனத் தமிழக அரசியல்வாதிகள் பத்திரிகை அறிக்கைகளை விடுவதைப் படிப்பவருக்கு என்ன தோன்றும் ?

சிங்களத்தின் தமிழின அழிப்புத் திருப்பணி எப்போ முடியும் என இந்திய மத்திய அரசு தவம் இருக்கிறது. அதற்குச் சாம்பிராணிப் புகை போட்டு சங்கு ஊதும் பணியில் தமிழக முதல்வர் இருக்கிறார்.

தமிழக முதல்வரின் 'டயலக்'குகள் எவரையும் மிஞ்சும் வகையில் உள்ளன. ஒக்கனேக்கல் குடிதண்ணீர் திட்டம் எலும்பை ஒடித்தாலும் நிறைவேற்றப் படும் என்றார். எலும்பு முறியாமலே குடிதண்ணீர் திட்டம் முறிந்து போய்க் கிடக்கிறது.மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் என்ற கடலில் தமது ஆட்சியைக் காப்பாற்றத் தத்தளிக்கும் அவரால் எவரைத்தான் காப்பாற்ற முடியும்? இந்த நிலையில், 'தமிழர்களே! தமிழர்களே!! என்னைக் கடலில் தூக்கிப் போட்டாலும் தெப்பமாக மிதந்து உங்களைக் காப்பாற்றுவேன்' என்ற அவர் குரலில் வரும் 'டயலக்' சொல்லும் சேதி என்ன? ஈழத் தமிழரைக் காப்பாற்றியே தீருவேன் எனச் சவால்விடும் இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை



செய்யப்பட்டுள்ளது அதனை எவரும் ஆதரித்தால் சட்டம் பாயும் என மிரட்டுகிறார்.

ஈழத் தமிழரின் ஒரே உரிமைக் குரலாக விளங்கும் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு இவர் யாரை எப்படிக் காப்பாற்றப் போகிறார்? இந்தத் தடைக்கும் அவருக்கும் உள்ள உறவை, இந்த ஆண்டில் மேலும் இரண்டு

**பத்மா**

ஆண்டுகளுக்கு புலிகள் இயக்கத்தைத் தடைசெய்த நீதிமன்ற விசாரணையில் வெளியான செய்தி அம்பலப்படுத்துவதாய் உள்ளது.

இதுவரை எந்த ஒரு கட்டத்திலும் புலிகளையோ அவர்கள் தரப்பான எதிர்வாதங்களையோ கேட்க வேண்டும் என்ற கண்ணியமான உணர்வு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கூப்பாடு போடும் தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சியில் உள்ள தமிழ் மாநில அரசுகளுக்கு தோன்றவில்லை.1980 முதல் இலங்கை அரசு ஈழத் தமிழரைத் தாக்கும் போது இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் கவலையும் கண்டனமும் தெரிவித்த போதெல்லாம் இலங்கை அரசு தனது தாக்குதலை அதிகரித்தே வந்துள்ளது.

இன்றும் போர் நிறுத்தம் என்று இந்தியா பொய்க் கூச்சல் போட்டுக்கொண்டிருக்க எம் மக்கள் மீது உலகால் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை இலங்கை அரசு வீசுகிறது இந்திய அரசுகள் மௌனமாக இருக்கின்றன.

தமிழ் மக்களைக் காக்கும் ஒரே இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளே உள்ளனர். கொசுவை ஒழிக்கக் குடிசையைக் கொழுத்துவது போலத் தமிழரின் வீடுகளையும், வளர்ப்புப் பிராணிகளையும், தேவாலயங்கள், வைத்தியசாலைகளையும் பல்குழல் எறிகணைத் தாக்குதல், கொத்துக் குண்டுகளால் சிங்கள அரசு தினமும்



அழித்து வருகிறது.

ஈழத் தமிழர் மீது ஒரு பினாமிப் போரை நடத்திக் கொண்டு போர் நிறுத்தம் என்றும் பிரணாப் முகர்ஜி கொழும்பு போய் அமைதி கொடுப்பார் என்றும் தமிழக மக்களுக்கு தண்ணி காட்டும் வேலையில் தமிழக முதல்வரும் தங்கபாலு போன்ற காங்கிரஸ் கூலிகளும் ஈடுபடுவது வேடிக்கைதான்.

1991இல் ஸ்ரீபெரும்புதூரில் நடந்த தேர்தல் கூட்டத்தில் காங்கிரஸின் சில முக்கிய பிரபலங்களும் கூட்டணிக் கட்சியான அ.இ.தி.மு.க. புள்ளிகளும் பிரதமர் ராஜீவ் காந்தி மிகப் பெரும் முக்கிய பிரமுகராக இருந்தும் கூட அங்கே இவர்கள் செல்லாமல் விட்ட காரணம் என்ன ? அந்தக் கொலையால் பெரும் பயன் அடைந்த அ.இ.தி.மு.க., சந்திரா சுவாமி, சுப்பிரமணியசுவாமி ஆகியோரின் அரசியல் தொடர்புகள் என்ன?

இந்த வழக்கின் முக்கிய சாட்சியாகவும் 26ஆவது எதிரியாக மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் விடுதலையானவருமான பெங்களூர் ரங்கநாத் அண்மையில் இப்படிக் கூறியுள்ளார்.

"நான் இந்த விஷயங்களையெல்லாம் சி.பி.ஐ. இயக்குனர் கார்த்திகேயனிடம் கூறியபோது அவர் அதிர்ச்சியாக என்னிடம் 'சந்திராசாமியின் தொடர்பு பற்றி உனக்கு எப்படித் தகவல் தெரியும்? இனி இதைப் பற்றி யாரிடமாவது கூறினால் கோடியக் கரை சண்முகத்தின் கதிதான் உனக்கும் ஏற் படும். ஞாபகத்தில் வைத்துக் கொள்' என மிரட்டியவர் கொஞ்சமும் தாமதிக்காமல் பேப்பர் வெயிட் ஒன்றை எடுத்து என் வாயில் பலமாக அடித்தார். அதில் ஒரு பல் உடைந்துவிட்டது-" என்றார்.

வழக்காளி, எதிரி என இரு தரப்புவாதப் பிரதி வாதங்களையும் கேட்டு ஆய்ந்து அறிந்த பின் நடுநிலையில் தீர்ப்பு வழங்குவதே உண்மையான நீதியாகும். உளவுப் பிரிவால் தவறாகக் குற்றம்சாட்டப்பட்டும், தமது தரப்பு வாதத்தை எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் இல்லாதபடி தடை செய்யப் பட்டும் உள்ளது புலிகள் இயக்கம். எந்த ஒரு சட்டவாளரும் புலிகளுக்காக வாதாட முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, ஒரு பக்கச்சார்பான தீர்ப்பை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வழங்கி அதனை நீதி என்பதும் அதை மீறுவோரைப் பயங்கரவாதிகள் என்பதும் கோமாளிகளால் மட்டுமே முடியும்.

*(நன்றி: முரசம்)*

## உதயதாரகை – உலகில் முதன்முதல் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை

**1841 ஜனவரி 07**

உதயதாரகை பத்திரிகை ஆரம்பம்

1841ஆம் ஆண்டு ஜனவரி ஏழாம் திகதி உதயதாரகை பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. உலகிலேயே தமிழில் வெளிவந்த முதலாவது பத்திரிகை 'உதயதாரகையே'. தென்னிந்திய திருச்சபையால் வட்டுக்கோட்டையில் வைத்து வெளியிடப்பட்ட உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக திரு.ஹென்றி மார்ட்டின் நியமிக்கப்பட்டார்.

**கத்தோலிக்க பாதுகாவலன், இந்துசாதனம் முதலியவை தொடர்ந்து வந்தவை**

இலங்கையில் பத்திரிகை ஆசிரியராகப் பதவியேற்ற முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் திரு.ஹென்றி மார்ட்டின் பெறுகிறார். இலங்கையின் முதலாவது புகைப்படக் கலைஞர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

இவரது தந்தையான ஜோன் மார்ட்டினின் ஞாபகார்த்தமாகவே மார்ட்டின் வீதிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஹென்றி மார்ட்டினுடன் இணைந்து செத் பேசன் (Seth Payson) என்பவரும் இணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம் .. இங்கே!**

உதயதாரகை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழி ஆக்கங்களையும் தாங்கி (Bylingual) பத்திரிகையாக வெளிவந்தது. தென்னிந்திய திருச்சபை உதயதாரகை என்ற பெயரில்பத்திரிகை வெளியிடத் தொடங்கியதும் கத்தோலிக்க திருச்சபை கத்தோலிக்க பாதுகாவலன் என்ற பெயரிலும் மெதடிஸ்த திருச்சபை தேசாபிமானீ (Patriot) என்ற பெயரிலும் இந்து போர்ட் இந்துசாதனம் என்ற பெயரிலும் பத்திரிகைகளை வெளியிடத் தொடங்கின.

கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், விவசாயம், அரசாங்கச் செய்திகள், முக்கிய செய்திகள், பஞ்சதந்திரக் கதைகள் என்பவற்றைத் தாங்கி உதயதாரகை வெளிவந்தது. உதயதாரகை இலங்கையில் வெளிவந்த இரண்டாவது பத்திரிகை என்ற பெருமையையும் பெறுகிறது. உதயதாரகைக்கு முன்னர் 1831ஆம் ஆண்டு கொழும்பு ஜோர்னல் என்ற பத்திரிகை கொழும்பிலிருந்து வெளிவந்தது.

-தாண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னி டெஸ்டில் முதலிடம் பறிபோகுமா?





சிட்னியில் தென்னாபிரிக்காவுடனான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி தோல்வியை சந்தித்தால் அது டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை இழந்துவிடும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் அணிகள் நிலையை அறிவிக்கும் தரவரிசைப் பட்டியல் ஒரு தொடர் முடிவடைந்த நிலையிலேயே புதுப்பிக்கப்பட்டு வருகிறது. த ற்போது ஐ.சி.சி அணிகளின் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலியா 130 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இந்தியா 118 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்கா 117 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணி சிட்னி டெஸ்டிலும் வெற்றிபெற்று அவுஸ்திரேலியாவை 3:0 என்ற கணக்கில் வீழ்த்தினால் இரண்டு அணிகளின் புள்ளிகளும் 123 ஆக சமநிலையில் நீடிக்கும். அப்போது தசமப் புள்ளிகளின் அடிப்படையில் மிகக் குறைந்த புள்ளி வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி முதலிடத்தைத் தட்டிச்செல்லும்.

மாறாக அவுஸ்திரேலியா வெற்றிபெற்றால் அது தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கும். ஆனால் அதன் புள்ளிகளின் எண்ணிக்கை 126 ஆகக் குறைந்துவிடும். இந்நிலையில் தென்னாபிரிக்கா 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை வகிக்கும். அதேபோன்று ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தாலும் அவுஸ்திரேலியா 124 புள்ளிகளுடன் முதலிடத்திலேயே இருக்கும். தென்னாபிரிக்கா 122 புள்ளிகளுடன் அந்த அணியை நெருங்கி இருக்கும்.

ஐ.சி.சி டெஸ்ட் அணிகளின் தரவரிசை பட்டியல் இன்னும் புதுப்பிக்கப்படாத நிலையில், அவுஸ்திரேலிய தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் தற்போது 13 புள்ளிகள் இடைவெளி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணி கடந்த 2001ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை டெஸ்ட் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதோடு, கடந்த 13 ஆண்டுகளில் அது 8 மாதங்கள் மாத்திரமே முதலிடத்தை இழந்துள்ளது.

## ஒருநாள் தரவரிசையில் டோனி முதலிடம்



ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்ட ஒருநாள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் 779 புள்ளிகளுடன் அணித் தலைவர் டோனி தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலிய வீரர் மைக்ஹஸி உள்ளார். இந்திய வீரர் யுவராஜ் சிங்கிற்கு, இப்பட்டியலில் 6ஆவது இடம் (744 புள்ளிகள்) கிடைத்துள்ளது. சச்சின் டெண்டுல்கருக்கு 12ஆவது இடம் கிடைத்துள்ளது. பந்து வீச்சாளர்களில் சகிர்கான் 660 புள்ளிகளைப் பெற்று 11ஆவது இடத்திலும், ஹார்பஜன்சிங் 617 புள்ளிகளுடன் 20ஆவது இடத்திலும் உள்ளனர். ஒருநாள் அணிக்கான தரவரிசைப் பட்டியலில் 119 புள்ளிகளுடன் இந்திய அணி 3ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இப்பட்டியலில் அவுஸ்திரேலியா முதலிடத்திலும், தென்னாபிரிக்கா 2ஆவது இடத்திலும் உள்ளன.

## 2008 இன் சிறந்த அணி இந்தியா



கிரிக்கெட் உலகில் இந்த ஆண்டின் சிறந்த அணியாக டோனி தலைமையிலான இந்திய அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த சாதனையாளராக சச்சின் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து பத்திரிகையான 'சண்டே ரெலிகிராப்' இது தொடர்பாக வெளியிட்டுள்ள கணிப்பில் சிறந்த அணியாக இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மகேந்திரசிங் டோனி தலைமையிலான இந்திய அணி அனைத்து துறைகளிலும் சிறப்பாக உள்ளதாகவும் அவுஸ்திரேலியாவின் ஆதிக்கத்துக்கு அது முற்றுப்புள்ளி வைத்துள்ளதாகவும் அந்த பத்திரிகை புகழாரம் சூட்டியுள்ளது.

இதேபோல் இவ்வாண்டின் சாதனையாளராக, லாராவின் சாதனையை முறியடித்த சச்சினை அந்த பத்திரிகை தெரிவு செய்துள்ளது. சிறந்த வீரராக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் தெரிவாகியுள்ளார். மற்றொரு இங்கிலாந்து பத்திரிகையான 'தி கார்டியன்' வெளியிட்டுள்ள சிறந்த டெஸ்ட் அணியில் சச்சின், டோனி, சேவாக், ஹர்பஜன், கிர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த அணியில் அவுஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் நியூசிலாந்து வீரர்கள் ஒருவர்கூட இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## வேகமாக விற்பனையாகும் லீலாவின் சித்திர, பஞ்சாங்க கலண்டர்கள், டயறிகள்

ஆண்டு ஒன்று பிறந்துவிட்டால் ஒவ்வொரு வீட்டிலும் அலுவலகத்திலும் கட்டாயமாக அந்த ஆண்டுக்குரிய கலண்டர் தேவைப்படுகிறது. அந்தத் தேவையை லீலா சித்திர பஞ்சாங்கக் கலண்டர்கள் பூர்த்திசெய்கின்றன.

கலண்டர்கள் டயறிகள் வெளியீட்டில் லீலா வெளியீட்டகம் முன்னிலை வகிக்கிறது. அந்த வெளியீட்டகத்தின் 2009ஆம் ஆண்டிற்கான சித்திரக் கலண்டர்கள், மாதக் கலண்டர்கள், டயறிகள் முதலானவை இப்போது வேகமாக விற்பனையாகி வருகின்றன. இவற்றிற்கு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பெரும் கிராக்கி இருந்து வருகிறது.

லீலா வெளியீட்டகத்தினர் இம்முறையும் பஞ்சாங்க, சித்திரக் கலண்டர்கள், பஞ்சாங்க மாதக் கலண்டர்கள், பேர்ஸ் டயறிகள், பிளாஸ்டிக் டயறிகள் போன்றவற்றை கண்ணைக் கவரும் வர்ணங்களிலும் மனதை பூரணப்படுத்தும் விவரங்களை உள்ளடக்கியும் அனைவருக்கும் ஏற்றவகையில் வெளியிட்டுள்ளனர்.




லீலா தினக்கலண்டரில் இராகுகாலம் சுபநேரங்கள், எமகண்டங்கள், திதிகள், நட்சத்திரங்கள், ஆலய விழாக்கள், பொதுத் தகவல்கள், பிரபல்யங்களின் நினைவுக் குறிப்புகள், நினைவு தினங்கள், சாதனைகள், சர்வதேச தினங்கள், வியத்தகு தகவல்கள், முக்கிய நிகழ்வுகள் எனப் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தினத்திற்கும் ஒவ்வொரு குறளும் வெளியிடப்பட்டுள்ளது.

பல வர்ணங்களில் மிகவும் தரமான முறையில் அச்சிடப்பட்டுள்ள இத்தினக் கலண்டர்களின் முகப்பு அட்டையை மும்மதங்களையும் சேர்ந்த கடவுள்களின் அழகிய படங்கள் அழகுபடுத்துகின்றன். மனதைக் கவரும் வகையிலான காட்சிகளைக் கொண்ட படங்களையும் கலண்டர்கள் தாங்கியுள்ளன.

இதேபோன்று லீலா பஞ்சாங்க மாதக் கலண்டர்களும் கொக்குவில் பிரம்ம ஸ்ரீ இ.வெங்கடேசையராலும் சிரேஷ்ட, புத்திரன் வெ.இரகுநாத ஐயராலும் கணிக்கப் பெற்ற பஞ்சாங்க கணிதத்தின்படி வெளியிடப்பட்டுள்ளன.

இக்கலண்டர்களில் விரதங்கள், விசேட தினங்கள், குரு பூஜைகள், சுபநேரங்கள், இராகுகாலங்கள் உள்ளிட்ட பல விவரங்கள் அழகுற அச்சிடப்பட்டுள்ளன.

லீலா தயாரிப்பு டயறிகள் கடந்த வருடத்தைவிடவும் இம்முறை காத்திரமாகவும் கச்சிதமாகவும் வெளிவந்துள்ளன. பல அளவுகள், வர்ணங்களைக் கொண்ட இந்த டயறிகள், அவசர தொலைபேசி இலக்கங்கள் முதல் ஒவ்வொருவருக்கும் தேவையான - ஒவ்வொருவரும் அவசியம் வைத்திருக்க வேண்டிய தொலை பேசி இலக்கங்கள், விவரங்கள், முகவரிகள், தரவுகள் கணித அளவு முறைகள் ஆகியவற்றையும் தாங்கியுள்ளன. லீலா கலண்டர்கள் டயறிகள் ஆகியவற்றை எல்லாப் பெரிய கடைகளிலும் கொழும்பு 13, ஞே.சிறில் சீ.பெரேரா மாவத்தை இலக்கம் 400 இல் அமைந்துள்ள லீலா அச்சகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்: 2325930, 2325933.


## 'சுப்பர் ஓவர்' முறைக்கு வெற்றோரி எதிர்ப்பு

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''சுப்பர் ஓவர்'' முறைக்கு நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் வெற்றோரி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட இருபது 20 தொடரில் பங்கேற்றது.



முதல் போட்டியில் ''சுப்பர் ஓவர்'' முறையில் மேற்கிந்திய அணி வென்றது. சர்வதேசக் கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) விதிகளின்படி இருபது-20 ஆட்டம் 'டை'யில் முடிந்தால் 'போல் அவுட்' முறையில் வெற்றியாளர் யாரென்பது முடிவு செய்யப்படும். இதற்கு மாற்றாக 'போல் அவுட்' முறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒரே ஓவரில் வெற்றிபெறும் அணி நிர்ணயிக்கப்படும்.

இது குறித்து வெற்றோரி கூறுகையில், போட்டியின் முடிவு ''டை'' ஆனதில் தவறு என்ன இருக்கிறது. இந்த முடிவை நீக்க வேண்டும் என புதிய முறை கொண்டு வரப்பட்டுள்ளது. ஒருவேளை வெற்றிபெற்ற அணியின் பக்கம் இருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். இது இருபது 20 கிரிக்கெட், ஒரு ஓவர் போட்டி அல்ல. இதற்கு மேலும் இந்த ஆட்டத்தை மோசமாக்க வேண்டாம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# அபியும் நானும்

## திரைவிமர்சனம்

தந்தை-மகள் இருவருக் குமிடையிலான உறவினை ஒரு கவிதைபோல வெள்ளித்திரையில் சொல்லியிருக் கிறது 'அபியும் நானும்' திரைப்படம்.

அபியாக திரிஷாவும் தந்தையாக பிரகாஷ்ராஜும் இத்திரைப்படத்தில் நடித்திருக்கிறார்கள் என்பதனை விடவும் வாழ்ந்திருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும். சிறுவயதில் தன் மகளை தந்தை ஒருவர் பாடசாலைக்குச் சேர்ப்பதில் இருந்து அவளது திரு மணம் வரையும் நடைபெறும் நிகழ்வுகளை வைத்து, நகைச்சுவை கலந்த தன்மையோடு இப்படத்தின் கதைப்பின்னல் நகர்ந்துள்ளது. தன்னுடைய தந்தையை ஒரு நல்ல நண்பனாகவே கருதும் த்ரிஷா, தன்னுடைய காதலனை பிரகாஷ்ராஜுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறார். ஆனால் காரணமே இல்லாமல் த்ரிஷா வின் காதலனை பிரகாஷ்ராஜுக்குப் பிடிக்காமல்போக, பிறகு என்ன நடக்கிறது என்பதை தன்னுடைய வித்தியாசமான இயக்கத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார் இயக்குநர் ராதா மோகன்.

ஐஸ்வர்யா, குமாரவேல், தலைவாசல் விஜய் என்போரும் தமது பணியினைச் சிறப்பாகவே செய்துள்ளார்கள்.


படத்தின் பலங்களில் ஒளிப்பதிவு மிக முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. மலைச்சாரலின் வனப்பும், தந்தை-மகள் இருவருக்கும் இடையிலான உறவுப் பிணைப்பை பெரும்பாலான நேரங்களில் வார்த்தைகளை விடவும் வெகு அழகாக ஒளிப்பதிவின் மூலம் வெளிப் படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் ப்ரீத்தி. வைரமுத்துவின் பாடல் வரிகளும் அதை மனதைத் தாலாட்டும் இசையோடு பாடலாக்கிய இசையமைப் பாளர் வித்தியாசாகரும் பார்ப்போரின் நெஞ்சில் நிறைகின்றனர். குடும்பப் பாங்கான நல்லபடத்தைப் பார்க்க விரும்புபவர்கள் அனைவரும் பார்க்கவேண்டிய ஒரு படமாக அமைந்திருக்கின்றது ராதா மோகனின் 'அபியும் நானும்'.

# பல்வாணமாகும் வைகைப்புயல்

வைகைப்புயலாக மாறி, தன் நகைச்சுவையால் ரசிகர்களைச் சிரிப்பலைக்குள் மூழ்க வைப்பதில் வடிவேலு கெட்டிக்காரர் இன்றைய தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத நகைச்சுவை நடிகர் அவர்தான். ஆனால் இப்போது கொஞ்சக்காலமாய் நடிகர் வடிவேலுவின் போக்கில் பெரும் மாற்றம் தெரிகின்றது. குருவி தலையில் பனங்காய் வைத்ததுபோல தலையில் தலைக்கனத்தால் பெரும் கெடுபிடி செய்து வருவதாகத் தகவல்கள் வருகின்றன.

தன்னுடைய சம்பளத்தையும் வடிவேலு தாறுமாறாக உயர்த்தியிருக்கிறார். ஒருபடத்துக்கு 3கோடி ரூபா வரை வாங்குகிறார் வடிவேலு. அதேவேளை கதாநாயகனாக நடிப்பதென்றால் 5 கோடி ரூபா கேட்கிறார். இதனால் பல தயாரிப்பாளர்கள் விவேக், கருணாஸ், சந்தானம், கஞ்சா, கருப்பு போன்ற நகைச்சுவை நடிகர்களை நாடிச் செல்கின்றனர். இதனால் இப்போது வடிவேலுவின் கையில் 'வில்லு' படம் மட்டுமே உள்ளது. இனியாவது வடிவேலு திருந்துவாரா?

# கலக்கும் கஜினி



தமிழில் வெளியாகி சக்கை போடுபோட்ட 'கஜினி' திரைப்படம் இப்போது ஹிந்திப் படவுலகையும் கலக்கிக் கொண்டிருக்கிறது. தமிழில் சூர்யா ஏற்றிருந்த வேடத்தை ஹிந்தியில் அமீர்கான் செய்திருக்கிறார்.

தமிழ்ப்படத்தின் இறுதிக்காட்சியில் மாற்றம் செய்யப்பட்டுப் புதுமெருகுடன் வந்திருக்கிறது ஹிந்தி 'கஜினி!'

இத்திரைப்படம் டிசெம்பர் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அன்றுமட்டும் 7 கோடி ரூபாய்களை அள்ளியிருக்கிறது 'கஜினி! ஏறக்குறைய 22 நாடுகளில் வெளியாகி வெற்றிக்கொடி நாட்டிவரும் 'கஜினி' படம், இதுவரை வெளிவந்த இந்தியத் திரைப்படங்களின் வசூல் சாதனையை முறியடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்மொழியில் கஜினியை இயக்கிய ஏ.ஆர்.முருகதாஸே ஹிந்தி மொழியில் உருவாகிய கஜினியையும் இயக்கியுள்ளார்.


# 'வருகிறது நான் கடவுள்'

நீண்டகால இழுபறிக்குப் பின்னர் ஒரு வழியாக பாலாவின் இயக்கத்தில், ஆர்யா நடிப்பில் உருவான 'நான் கடவுள்' தைமாத இறுதியில் வெளிவரத் தயாராகிவிட்டது.

ஏறக்குறைய இந்தப்படம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களாகி விட்டன. படம் ஆரம்பித்ததில் இருந்தே ஏகப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்ட 'நான் கடவுள்' இப்போது வெளியீட்டுக்குத் தயாராகி விட்டதில் படப்பிடிப்புக் குழுவினர் சந்தோசத்தில் மிதக்கின்றனர்.

அண்மையில் இப்படத்தின் பாடல் வெளியீட்டில் "தமிழ் சினிமாவில் இதுவரை பார்த்திராத ஒரு புதிய பரிமாணத்தை பாலா 'நான் கடவுள்' படத்தில் படைத்துள்ளார்" என இசைஞானி இளையராஜா பாலாவைப் புகழ்ந்துள்ளார்.

நான் கடவுள் திரைப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் சம காலத்தில் வெளியாகவுள்ளது.



# அனுஷ்காவின் அதிர்ஷ்டம்



கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். இது நடிகை அனுஷ்கா விடயத்தில் அச்சொட்டாகப் பொருந்தியிருக்கிறது.


'ரெண்டு' என்ற படத்தில் மாதவனுக்கு ஜோடியாக வந்த இரு கதாநாயகிகளில் ஒருவர் நடிகை அனுஷ்கா. அதன்பிறகு தமிழில் வாய்ப்புகள் சரிவர அமையாததால், தெலுங்குப் படவுலகுப் பக்கமாக ஒதுங்கிவிட்டார். இப்போது மீண்டும் தமிழில் காலடி பதிக்கிறார் அனுஷ்கா. அதுவும் இளையதளபதி விஜய்யின் ஜோடியாக வழமையாக தமிழின் முன்னணி நடிகைகளை மட்டுமே தன்னுடைய படங்களில் கதாநாயகியாக்கும் விஜய், இம்முறை 'வேட்டைக்காரன்' படத்துக்காக அனுஷ்காவைத் தெரிவு செய்துள்ளார். எனவே வேட்டைக்காரன் படத்தோடு தமிழின் முன்னணி நடிகைகளில் ஒருவராக அனுஷ்காவும் மாறிவிடுவார். இதுதவிர பருத்திவீரன் கார்த்தியின் ஜோடியாக 'சிறுத்தை' என்ற படத்திலும் நடிக்க அனுஷ்கா ஒப்பந்தமாகி இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர்
## சுப்பையா தட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் ம.கல்லூரி)



தோற்றம்:
01.08.1933

மறைவு:
07.12.2008

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி, பிணம் என்று பெயரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நாம் நினைப்பொழியவில்லை!
எம்குலத் தெய்வமே!
சூரையங்காட்டிலே சிதைமூட்டியது
உங்களின் வெறுமையான கூட்டை மட்டும் தான்
ஆனால் நீங்கள் என்றென்றுமே எங்களுடன்;
அன்பிற்கு ஓர் அப்பாவாய்
ஆசைக்கு ஓர் ஆசானாய்
பண்பின் ஓர் இலக்கணமாய்
பாசத்தின் ஓர் உறைவிடமாய்
எங்கள் குடும்பத்தின் ஓர் ஒளிவிளக்காய்
ஏற்றம்பெற ஒரு வழிகாட்டியாய்
இருப்பீர்கள் என்ற நம்பிக்கையினால்...
தங்களின் பசுமையான நினைவுகளுடன்...
உங்களின் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் இணுவைப் பரராஜசேகரனை
பணிவுடன் வேண்டுகின்றோம்.

**எமது அன்புத் தெய்வம் (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலமாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளின் போதும் அதனைத் தொடர்ந்து பல்வேறு வழிகளிலும் எமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (04.01.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர்.**

சிவன்கோயிலடி,
இணுவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகச் சிறுகதைத்துறையின் முன்னோடிகளில் ஒருவர் என். எஸ்.எம்.ராமையா. 1960களில் எழுதத் தொடங்கிய இவர் ஆரம்பத் தில் வானொலி நாடகத்தின் மூலமே தமது இலக்கியப் பணியை ஆரம்பித்தார்.

1961 இல் தினகரனில் வெளியான இவரது 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைத்துறையில் இவரைப் பிரபல்யப்படுத்த அடித்தளமிட்டது. 1980 இல் வெளி யான இவரது 12 சிறுகதைகள் அடங்கிய 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைத்தொகுதி, அந்த ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசையும் இவருக்குப் பெற்றுக்கொடுத்தது.

பிற மொழிகளிலும் இவரது பல சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரசுரமாகியுள்ளன.

தோட்டக் கணக்குப்பிள்ளையாகத் தொழில் பார்த்ததால், இவரது சிறுகதைகள் தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்தன. இவர் 1990 இல் அமரராகிவிட்டார்.

# தீக்குளிப்பு

## என்.எஸ்.எம்.ராமையா

ரஞ்சிதம் சோர்வாக நடந்து கொண்டிருந்தாள். ஏறிக்கொண்டுவரும் வெப்பத்தால் முகம் கன்றிப் போயிருந்தது. நெற்றியில் கசிந்து, பரவியிருந்த வியர்வையில், தலைத்துண்டையும் தாண்டி இரண்டொரு மயிர்க்கற்றைகள் 'சப்'பென்று ஒட்டிப் போயிருந்தன. அவளுக்குப் பின்னால், இனிப்பு விழுந்த இடத்தில் மொய்த்துப் பிரியும் எறும்புக் கூட்டம்போல் கொழுந்து நிறுக்கும் இடத்தில் கூட்டம் திமுதிமுத்துக் கொண்டிருந்தது. அங்கு போனதையோ போய்த்திரும்பியதையோ உணரும் சொரணையற்று ரஞ்சிதம் நடந்து கொண்டிருந்தாள். எண்ணங்கள் முதல்நாள் நடைபெற்ற நிகழ்ச்சியின் அதிர்ச்சியில் மோதிக்கிறங்கிப் போயிருந்தன. இப்போதுங்கூட நினைக்கும்போது உடலே தகிக்கிறது!

ஓராண்டு காலமாக அவள் ஆவலுடன் எதிர்பார்த்த நிகழ்ச்சி, கோட்டையின் மீது கோட்டையாக வானளாவ எழுப்பியிருந்த மனக்கோட்டையின் அடித்தளம் நேற்றைய நிகழ்ச்சியில் நொறுங்கிவிட்டது. இதற்கு முன்பு பல தடவை பல இடங்களிலிருந்து அவளைப் 'பெண்' கேட்டு வந்த எல்லோருக்கும் 'இல்லை' என்று கையை விரித்திருக்கிறான் ரஞ்சிதத்தின் தகப்பன். அப்போதெல்லாம் ரஞ்சிதம் இவ்வளவு அதிர்ச்சி அடையவில்லை. மாறாக தப்பினோம் என்றே இருந்தாள். அவள் வேண்டிக்கொண்ட கடவுள்தான் அப்பன் மனதில் புகுந்து அபயம் அளித்து விட்டதாகக் கூட நினைப்பு. நேற்று அந்தச் சாமியும் ஏமாற்றிவிட்டது.

அவளும் முத்தையாவும் 'ஒரு மாதிரி'. ஒரு வருடமாகவே அவர்களுக்குள் பழக்கம். அதன் விளைவாக அவனைத்தவிர வேறுயாருக்கும் கழுத்தை நீட்டுவதில்லை என்று சங்கற்பம் செய்து கொள்ளும் அளவுக்கு அவள் உறுதியாயிருந்தாள். நேற்று முத்தையா வீட்டார்தான் 'பெண்' கேட்டு வந்து வெறுங்கையுடன் திரும்பியிருந்தார்கள். இனி என்ன என்ற கேள்வி மனதில் எழும்பி, பின்னால் அகன்ற இருள் வெளியைக்காட்டிக் கொண்டிருந்தது. மனதில் பசுமையாகிப் போயிருந்த நினைவு ஒரு இதழ் விரித்து மணம் பரப்பியது.

நல்ல வெயில் வேளை. மண்ரோட்டில் பரவியிருந்த மணல் காற்றை அக்கினி மூச்சாக்கிக் கொண்டிருந்தது. தன் நிழல் கால்களுக்குள் பதுங்க ரஞ்சிதம் வேகமாக நடந்து கொண்டிருந்தாள். இரண்டு கைகளிலும் இரண்டு 'டிபன் கரியர்' இரண்டு தோள்களிலும் கங்காருக்குட்டி 'பிளாஸ்குகள்' கொழுந்து எடுக்கும் மலை 'லைன்'களில் இருந்து தூரம் என்றால் கங்காணிமார்களுக்கு மதிய உணவு எடுத்துவர யாராவது போக வேண்டும்.

அன்று அவள்....!

தூரத்தில் முத்தையா சவுக்குமர நிழலில் உட்கார்ந்து உலக்கைப் பருமனுள்ளகட்டை ஒன்றில் கத்தி தீட்டிக் கொண்டிருந்தான். மாக்கல் துகளில் தீட்டப்பட்ட கத்தி வெள்ளியாகிக் கொண்டிருந்தது. அன்று அந்த மலையில் கவாத்து வேலை. சக தொழிலாளர்கள் எல்லோரும் ஏறக்குறைய் நிறையை முடித்துக் கொண்டிருக்கும் நேரம். அவனைத் தவிர வேறு குஞ்சு குருவியைக்கூட காணவில்லை. மலை பூராவும் ஒட்ட முடிவெட்டிய நரைத் தலைமாதிரி 'ஹோ'வென்று கிடந்தது. அதற்கு மத்தியில் அவனுடைய நிரை மட்டும் பாதி முடியாமல், வெறும் வயலில் ஒரு வரிசை நட்ட நாற்றுக்கள் மாதிரித் தலை தூக்கி நின்றன. 'சரியான சோம்பேறி' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் ரஞ்சிதம்.

ஆளரவம் கேட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தான் முத்தையா. அவன் யாரென்று தெரிந்ததும் அவளுக்குக் கொஞ்சம் வியப்பாகவும் இருந்தது. கவாத்து வேலையில் முதல் 'நம்பர்' ஆள் என்று பெயரெடுத்தவன்.

நெற்றியில் முத்தாகத் துளிர்த்து நின்ற வியர்வையை, ஆள்காட்டி விரலால் வழித்தான். விரலை வாய்க்காலாகக் கொண்டு வியர்வை 'சொள சொள' வென்று கொட்டியது. இரண்டு மூன்று தரம் விரலைச் சுண்டிவிட்டு ''இஞ்சரு! ஒன்னைத்தானே'' என்றான். ரஞ்சிதத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவளுடைய தம்பி கந்தனுக்கு இவன் நண்பன் தான். அவனுடன் பேச இரண்டொருமுறை தன் வீட்டுக்கு வந்திருக்கிறான் தான். என்றாலும்......

அவனைத் தாண்டி இரண்டடி வைத்தவள் நின்ற நிலையிலே பாதி திரும்பி ''என்ன?'' என்றாள். பூனையின் பார்வை போல அவள் கண்களில் தேங்கி நின்ற மிரட்சியைப்பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''தேத்தண்ணி இருந்தா கொஞ்சம் குடுத்துட்டு போவே'' என்றான். பேச்சில் தொனித்த மென்மை அவளுக்குத் தைரியத்தைத் தந்திருக்க வேண்டும்.

''ஐய!'' என்றாள் ஏளனத்தோடு. ''பெரிய வேலை செஞ்சு களைச்சவுக மாதிரிதான். இன்னம் பாதி நெரை கூட முடியல்லே'' என்று சொல்லும்போதே சிரித்து விட்டாள். முத்தையா அமைதியாக ''என்ன சொன்னே. பாதி நெரை......'' என்று இழுத்தான். பாதி வாக்கியத்தை அவளும் தொடரவில்லை; அவனும் முடிக்கவில்லை. ரஞ்சிதம் நடக்கத் துவங்கினாள்.

''இது யாரு நெரை தெரியுமா?'' என்றான் முத்தையா கொஞ்சம் ஓங்கிய குரலில். ''ஒங்கதம்பி இருக்காகளே, அவுக நெரை தான்'' என்றான். ரஞ்சிதத்தின் நடைவேகம் குறைந்தது. நின்று திரும்பி அவனைப் பார்த்தாள். முத்தையா தலை குனிந்து கத்தியின் கூர்மையில் கட்டை விரலை வைத்து வைத்துப் பார்த்தவாறு ''பாவம்னு வெட்டிக் கொடுத்தா இப்படித் தான். நல்லதுக்கு காலமில்லே'' என்றவாறு மீண்டும் கத்தியைத் தீட்டத் துவங்கினான்.

அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஓர் ஆண்பிள்ளை வாய்விட்டுத் தவித்த வாய்க்குத் தண்ணீர் கேட்கிறான். இப்படி சண்டி மாடாக திமிறிவிட்டு வருகிறோமே என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள். கைகளில் இருந்த 'டிபன்கரியர்'களை கீழே இறக்கிவைத்து விட்டு வலது புறத்தோளில் தொங்கிக் கொண்டிருந்த பிளாஸ்குகளில் ஒன்றை- அவளுடைய நீலநிற பிளாஸ்க்கை- எடுத்துத் தரையில் வைத்தாள். உடம்பெல்லாம் கூசியது. இருந்தாலும் மெல்லிய குரலில் 'தேத்தண்ணி வேணுமா?'

முத்தையா தலையைத் தூக்கிப் பார்த்தான். ஆளையே காணவில்லை! துருவிப் பார்த்தபோது, ஒரு பெரிய சவுக்கு மரத்துக்குப் பின்னால் முழு உருவையும் மறைத்துக் கொண்டு ஒரு பக்கத்துக் கண் மட்டும் தெரிந்தது.

முத்தையா குறும்பாகச் சிரித்தான். அந்த ஒற்றைக் கண்ணும் மரத்துக்குப் பின்னால் மறைந்தது. முழங்கால்களில் கையை ஊன்றி எழும்பி அவளிடம் வந்தான். தரையில் இருந்த பிளாஸ்க்கைத் தூக்கி கொஞ்சம் தள்ளி மீண்டும் தரையில் வைத்தாள் பொறுப்பை ஒப்படைப்பது போல். அதை எடுத்துத் திறந்து மடமட வென்று வாயில் ஊற்றிக் கொண்டான். முகம் எட்டுக் கோணலாக வளைந்தது.

''ஐய! சீனி இல்லே......'' என்றான்.

ரஞ்சிதம் சிரிப்பை அடக்க கீழுதட்டை உள்ளிழுத்துக் கடித்தவாறு மடியிலிருந்த ஒரு காகிதப்பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்த சீனியில் கொஞ்சம் அள்ளினாள். முத்தையா வலது உள்ளங்கையை இடுப்புத்துணியில் துடைத்து விட்டு நீட்டினான். உள்ளங்கையில் வெண்குன்றாகச் சீனி குவிந்தது. அதைப் பார்த்துவிட்டு ''உங்க வீட்டில இப்படித் தான் குடிப்பீங்களா?'' என்று அவள் முகத்தைப் பார்த்து விட்டு ''நாங்களெல்லாம் கலக்கித்தான் குடிப்பம்'' என்றான்.

ரஞ்சிதம் முகத்தை நொடித்துக் கொண்டாள். ''நீங்கல்லாம் தொரை வீடு. கலக்கிக் குடிப்பீங்க. எல்லோருக்கும் முடியுமா?'' என்றாள். இந்த நாலு வார்த்தைகள் பேசுவதற்குள் கண்கள் வெட்கத்துடன் நாலு திசைகளிலும் சுழன்று பாத்துக்கொண்டன. கால் கட்டை விரல் ரோட்டு மணலில் குழிபறித்தது.

கையிலிருந்த சீனியை நக்கி ''கர்முர்'' என்று கடித்தவாறு ஒரு வாய்த் தேநீரை வாயில் ஊற்றிக் கொண்டான். தேநீரில் கொஞ்சம் தாடையில் கொட்டி வளைத்து இறங்கி தொண்டை முடிச்சில் வந்து சொட்டியது.

பிளாஸ்க்கில் பாதித் தேநீரை மீதம் வைத்து நீட்டினான். ''அதை எங்க தம்பிக்கிட்ட குடுத்துடுங்க'' என்றவாறு தோள்களைக் குலுக்கி பிளாஸ்க் குவியல்களை சரிசெய்தவாறு 'டிபன் கரியர்'களைத் தூக்கினாள். ''கொஞ்சம் இரு வர்றேன்'' என்ற முத்தையா கத்தி தீட்டிய இடத்துக்குத் திரும்பி வந்தான். அங்கு நின்ற முருங்கை மரத்தின் தாழ்ந்த கிளை ஒன்றில் பிளாஸ்கைத் தொங்கவிட்டு, ஒரு தேயிலைச் செடியின் அடியில் உட்கார்ந்து, தலைத்துண்டை விரித்தான். செடியின் அடியில் நிழலுக்கு மறைவாக இரண்டு மூன்று றாத்தல் தேறும் கொழுந்து அம்பாரமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அதை அள்ளிவைத்துப் பெரிய மூடையாகக் கட்டிக் கொண்டு ரஞ்சிதம் அருகில் வந்தான். மூடையைத் தரையில் வைத்து அது விரிந்தபோது ரஞ்சிதத்தின் முகமும் கண்களும் இலேசாக இதழ்களும் விரிந்து மலர்ந்தன. 'எம்பூட்டுக் கொழுந்து!' என்று மனம் கூவியது.

''எடுத்துக்க'' என்றான். 'கொழுந்தோட கவாத்து வெட்ட மனசே இல்லை, எடுத்துக்கிட்டே வெட்டினேன். எடுக்கலாம்னு நெனைச்சிருந்தா, இன்னம் நிறைய எடுத்திருக்கலாம்'' என்றான்.

''லேஞ்சோடே கொண்டு போறியா?''

''வேண்டாம்''

(14 ஆம் பக்கம் பார்க்க....)

# அடைத்து வைத்துத் தடை போட இயலாதது அன்பு: அதனை அள்ளிச் சொரிந்து ஆனந்தம் காண்போம்!

இவ்வுலக வாழ்வில், பதினாறு பேறுகளும் அமைவதற்கு மனித வாழ்வில் சால்பு அடிப்படையாக இருக்க வேண்டும். அதாவது சான்றாண்மை நிறைந்த வாழ்க்கை வேண்டும். சான்றாண்மையாவது, பல நற்குணங்களும் நிறைந்து, அவற்றை வாழ்க்கையின் துறைதோறும் ஆளுமையுடன் செயற்படுத்துதல். இத்தகு சான்றாண்மை வளமான வாழ்க்கைக்குச் சான்றாக அமையும். இத்தகைய சான்றாண்மைக்கு அடித்தளமாக அமைவது அன்பு.

''அன்பின் வழியது உயர்நிலை'' என்றும் ''அன்போ டியைந்த வழக் கென்ப ஆருயிர்க்கு என் போடியைந்த தொடர்பு'' என்றும் வள்ளுவம் கூறும். ஒருவர் உயிருடையவரா என்பதை அறிவதற்கு அவர் தம் நடமாட்டங்கள் அளவுகோலல்ல., அவர்தம் வாழ்க்கை யில் அன்பு நிறைந்த செயல்கள் காணப் படின் அவர் உயிருடையவர் என்று



எடுத்துக்கொள்ளப் பெறுவார். உயிருக்கும் உடம்புக்கும் உறவு ஏற்பட்டதனுடைய நோக்கம் அன்பாக இருப்பதுதான். கடவுள், மனிதனுக்கு வழங்கிய ஒரேஅரும் பொருள் அன்பேயாம். அன்பு, பொறிகளைக் கடந்தது; புலன்களைக் கடந்தது; பல சமயங்களில் அன்பே மொழியாகி விடுவதுண்டு. ஊமையும் அன்பு மொழி பேச இயலும். செவிடரும் அன்பு மொழி கேட்க இயலும். அன்பு விரிந்தது. அன்பு, உலகம் தழுவியது. அன்புக்கு எல்லைகள் இல்லை; பிரிவினைகள் இல்லை; உயர்ந்தா ரில்லை; தாழ்ந்தா ரில்லை; வேண்டியவர் இல்லை; வேண்டாதார் இல்லை. அன்பு மிக உயர்ந்தது என்பதைக் காட் டவே திருமூலர் ''அன்பே சிவம்'' என்றார். அன்பின் ஆற்றல் பெரிது. ''ஆற் றல் மிக்க அன்பு'' என்பார் அப்பரடிகள். அன்பு இருக்கும் இடத்தில் உறவு இருக்கும். வாழ்வு இருக்கும். வலிமையான வற்றிலெல்லாம் வலிமையானது அன்பேயாம். அன்பு, வற்றக்கூடியதன்று. தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருப் பது அன்பு. பிறை நிலா வளர்வதுபோல நல்லவர் அன்பு வளரும்,

**''ஒருவர் செல்லலம்; இருநாள் செல்லலம்;**
**பலநாள் பயின்று பலரொடு செலலினும்**
**தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ''**

என்று புறநானூறு பேசும்.



வாழ்க்கையில் போற்ற வேண்டிய தலையாய செல்வம் அன்பு. உலக மொழிகள் அனைத்தும், உலக மதங்கள் அனைத்தும் ஒருசேர மாறுபாடின்றி உரத்த குரலில் கூறுவது 'அன்பு செய்' என்பதேயாம்! அன்பின் மூலம் மண்ணகத்தில் விண்ண கத்தையே காணமுடியும். பல்வேறு வகைப் பட்ட மனிதகுலத்தை இணைத்தற்குரிய ஒரே கருவி அன்புதான்! அன்பு, மனிதரை ஒழுக்கமுடையவராக ஆக்கும். அன்பிற்கு இணை அன்பே! அன்பிற்கு விலை அன்பே! இத்தகைய உயர்ந்த அன்பை நிறையப் பெறுவதன்மூலம் வளமான வாழ்க்கையைப் பெறலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந் தில் பிரதமராயிருந்த ல்ாட்டு பாமர்க்ஸ் டன் என்பவர், ''கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்வதிலும் உங்களைச் சுற்றுப் புறத்திலுள்ள அழுக்குகளை யெல்லாம் அப்புறப்படுத்துங்கள்'' என்று கூறினார். கடவுளின் படைப்புகளுக்கு நன்மை செய்யாமல், இவ்வுலகத்தை இயக்கும் கடவுளின் குறிக்கோளுக்கு அரணாக இல்லாமல், அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்வதன் அறியாமையை இந்த உரை புலப்படுத்துகிறது. நமது திருமூலரும்,

**''நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றியில்**
**படமாடுங் கோயில் பகவற்கங்காமே''**

என்று கூறியதையும் எண்ணுக. ஆதலால், உள்ளத்தில் அன்பை நிறைந்திடுக! யார் மாட்டும் அன்பு காட்டுக! அன்பெனும் புனலால் வளமான வாழ்க்கையைப் படைத்திடுக!

அன்பு, செயற்பாட்டுத் தன்மையுடையது. அன்பினால் விளையும் செயற்பாடுகள் ஈதல், ஒப்புரவறிதல் முதலியன. ஈதல் முதல்நிலை. ஒப்புரவறிதல் ஈதலின் முதிர்ச்சி நிலை. வான்மழை வையகத்தை வளப்படுத்துவதுபோல, ஒப்புரவறிதல் மனித குலத்தைத் தழைத்து வளரச் செய்யும். ஒப்புரவறிதல் போலப் பிறிதொரு கோட்பாட்டை வானவர் உலகத்திலும் காண்பதரிது; இந்த மண்ணிலும் காண்பதரிது. தன்னோடு சார்ந்து வாழ்வாரின் நலமறிந்து அவர்தம் இயல்புகளோடு ஒத்து நின்று ஒழுகுபவரே வாழும் இயல்பினர்; ஊருணி நிறைந்த தண்ணீர் போலவும், பழுத்த பயன்மரம் போலவும், நோய் நீக்கும் மருந்து மரம் போலவும் மற்றவர்க்குப் பயன்படுதல் ஒப்புரவறிதலின் சிறந்த செயற்பாடு. மற்றவர்களுக்கு உளம் நிறைந்த உணர்வில் கைம்மாறு கருதாது உதவி செய்தவனே உண்மையில் வாழ்கின்றான். பிறர்க்கு உதவி செய்யும் நாளே பிறந்த நாளினும் பெருவாழ்வுக்குரிய நாள். ஒப்புரவறிதலில் இன்றைய கூட்டுறவு வாழ்க்கை அமைந்து கிடக்கிறது.

ஒப்புரவறிதல் மூலம் ஒருவரின் ஆன்மா வளர்கிறது; உலகம் தழீஇய ஒட் பம் பெறுகிறது. வளமான வாழ்க்கைப் படைப்பிற்கு ஒப்புரவுதான் மிகச்சிறந்த கொள்கை. வாழ்க்கை வளமாக அமைய வேண்டுமென்றால் ஒப்புரவு நெறி நின்று ஒழுகுதல் வேண்டும்.

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

# கிட்டாதா நம் காதில்?

நேற்றுவரை
உழைத்துக் களைத்த
உள்ளங்களுக்கு
இதமான தென்றலாய் இருந்த உனக்கு
இன்று என்ன நடந்தது?
யார்மீது உனக்கிந்தக் கோபம்?

இயற்கையே! உனை மறந்த
நெறிகெட்ட மாந்தரின்
மதிகெட்ட செய்கையால்தானோ
உனக்கு இந்தச் சீற்றம்?

எங்கும் வெள்ளக் காடாய்
ஏழை பணக்காரர் பேதமின்றி
ஓடவும் வழியின்றி
ஒதுங்கவும் இடமின்றி
அல்லற்பட வைத்த உன்னை
எப்படி மறக்கமுடியும்?

கட்டுண்ட நிலையில்
சிக்குண்டு மடிந்த கால்நடைகளையும்...
வேரோடு சாய்த்த
பாரிய மரங்களையும்...

நொந்துபோன உள்ளங்களை
மேன்மேலும் நோகடித்ததில்
அப்படியென்ன சந்தோசம் உனக்கு!

உன்னோடு வந்த மழைவெள்ளமோ
வற்றிவிட்டது. ஆனால்
நாம் வடிக்கும் கண்ணீர்வெள்ளமோ
காய்வது எப்போது?

நிஷா!
உன்னை உச்சரிக்கும்போது
அழகாய் இருந்தாலும்,
உன்னால் அழிந்தவையை எண்ணியெண்ணிக்
கல்லாய்க் கனக்கிறது நெஞ்சம்

நித்தமும் வீடுகளில்
செத்தல் மிளகாய்ச் சொதியும்
சோயா மீற் கறியும் உள்ளவரை
நீடூழி காலம் வாழ்வாய் நீ!

அல்லற்பட்டு
ஆற்றாது அழுதழுதே
கழிகிறது நம் காலம்
புத்தாண்டிலேனும்
பூரிப்பான சேதி
கிட்டாதா நம் காதில்?

-சீ.டி.குருகுமார்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீக்குளிப்பு........................

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இடுப்புப் படங்கு முழங்காலுக்கு மேல் தொட்டியாக மடித்துக் கிடந்தது. அதற்குள் அள்ளிக் கொட்டிக் கொண்டாள். கண்கள் இரண்டொருமுறை முத்தையா மேல் படர்ந்தது. நன்றியைத் தெரிவித்துக் கொள்ளத் தவறவில்லை. இப்படி ஆரம்பித்த நட்புத்தான், இன்று கேள்விக் குறியாகி நின்றது. தூரத்தில் கூடையைத் தரையில் வைத்துவிட்டு முத்தையாவின் தங்கை வள்ளி, ரஞ்சிதத்துக்காகக் காத்துக்கொண்டு நின்றாள். நேற்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு இருவருக்கும் இதுதான் முதல் சந்திப்பு. எனவே பேசுவதற்குக் கூடை கூடையாக விஷயம் இருந்தது வள்ளிக்கு. இவர்கள் விவகாரம் அவளுக்கும் இலேசாகத் தெரியும். நேற்றைய நிகழ்ச்சி அவளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது.

ரஞ்சிதம் அருகில் வந்ததும் வள்ளியை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்தவாறு நடக்கத் துவங்கினாள். வள்ளியும் அவளுடன் தொடர்ந்தாள். கொஞ்சநேரம் இறுக்கமான மௌனம் நிலவியது. அதற்கு மேலும் பேசாவிட்டால் தலையே வெடித்துவிடும். பரபரப்புடன் வள்ளி, ரஞ்சிதத்தின் கையை அசைத்து 'என்னது?' என்றாள். ரஞ்சிதம் அவளைப் பார்த்துச் சிரித்தாள். உயிரில்லாத சிரிப்பு.

இருவரும் நிழலுள்ள இடமாகப் பார்த்து உட்கார்ந்தார்கள். தேநீர் குடிக்கக் கூடைக்குள் உருண்டு கொண்டிருந்த பிளாஸ்க்கை எடுத்து, மூடியைத் திறந்து, சேலைத் தலைப்பால் மூடிக்குவளையைச் சுற்றித் துடைத்துவிட்டு, தேநீர் ஊற்றி ரஞ்சிதத்திடம் நீட்டினாள் வள்ளி. ரஞ்சிதம் வாங்கிக் கொண்டாள்.

''என்ன ஒங்க அப்பன் அப்படிச் சொல்லிட்டுதாம்?'' என்றாள் வள்ளி. தேநீர்க் குவளையையே உற்றுப் பார்த்தவாறு மௌனமாக இருந்தாள் ரஞ்சிதம்.

''வயது இருபத்தஞ்சு ஆகுதே ஒனக்கு! பத்தாதா? இன்னம் எவ்வளவு காலத்துக்கு இப்பிடியே இருக்கிறதாம்?'' என்றாள் தொடர்ந்து. ரஞ்சிதத்துக்குக் கண்கள் குளமாகி நீர் பொல பொலவென்று உதிர்ந்தது. தலைத்துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஒங்க அப்பனுக்கு பண ஆசை!'' என்று முத்தாய்ப்பு வைத்தாள். ''ஒன்னைக் கட்டிக் குடுத்துட்டா எம்பது தொண்ணூறுன்னு ஒன் சம்பளம் இல்லாம போகுமில்ல!'' உணர்வுக் கொந்தளிப்பில் சில நிமிஷங்கள் மௌனமாகக் கழிந்தன.

''அண்ணனுக்குச் சரியான வருத்தம்'' என்றாள் வள்ளி. ''என்னமும் சொன்னாகளா?'' ரஞ்சிதத்தின் குரல் ஈனமாக ஒலித்தது.

''ஒண்ணும் சொல்லல்லே!'' என்றவாறு எதிரேயிருந்த தேயிலைச் செடியையே அர்த்தமற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, திரும்பி, அடங்கிய குரலில் ''ராத்திரி சாப்பிடக் கூட இல்லை'' என்றாள். சொல்லும்போது குரல் தழதழத்தது. ரஞ்சிதம் நீண்ட பெருமூச்செறிந்தாள்.

''நான் ஒண்ணு சொல்றேன். கேக்கிறியா?'' ரஞ்சிதம் தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

''அழுகிற புள்ளைதான் பால் குடிக்கும். பேசாமே இப்பிடியே எங்க வீட்டுக்கு வந்துடேன்.''

ரஞ்சிதத்தின் விழிகள் கூர்மையாகின!

''பின்னே என்ன? ஒங்க அப்பனை நம்புறதிலே வேலையே இல்லை. இன்னம் அஞ்சு வருஷமானாலும் இப்பிடியே இருக்க வேண்டியது தான்.''

அவள் சொல்வதில் உண்மை இருப்பதாக நினைத்தாள் ரஞ்சிதம்.

''நீ மட்டும் எங்க வீட்டுக்கு வந்துடு, நாங்கல்லாம் ஒன்னைத் தங்கம் தங்கமா வச்சக்குவோம்'' என்ற வள்ளியை ஊடுருவிப் பார்த்துவிட்டுத் தலைகுனிந்து கொண்டாள். மனதுக்குள் ஆயிரம் எண்ணங்கள், முள்ளை மண்ணில் அழுத்திப் புரட்டியதும் புரண்டு விழும் மண்பாளங்கள் மாதிரி புரண்டு விழுந்தன.

போகலாமா?

போனால்?

போவதைத் தவிர வேறுவழி?

பெண்கேட்டு ஏமாந்து, இரவு சாப்பிடக்கூட முடியாமல் தவிக்கும் முத்தையாவின் முகம் அவள் மனதில் நிழலாடியது. இப்படியே இப்பொழுது அவர்கள் வீட்டுக்கு ஓடலாமா என்று மனதில் ஓர் அசுர வேகம் ஏற்பட்டது. அவள் முதுகில் கையை வைத்து ''என்ன நாள் நட்சத்திரம் பார்க்கிறியா, என்ன யோசனை?'' என்றாள் வள்ளி.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள் ரஞ்சிதம், போவதென்று!

அவளுக்கு மனு தர்மம் தெரியாது. இன்றைய சட்ட திட்டங்களும் தெரியாது. ஆனால்..... இருபத்தைந்து வருட வாழ்வுக்குப் பிறகு, அதிலும் உணர்வு புரிந்த பிறகு தனக்குள்ளே போராடிப் போராடிக் களைத்துக் கிடந்த நெஞ்சு சுகத்துக்காக ஏங்கியது. இனியும் பழைய வாழ்வுதான் என்றால் அதைவிட பேசாமல் மண்ணெண்ணெயில் குளித்து நெருப்பை வைத்துக் கொள்ளலாம். உணர்வும் அக்கினியாகத்தானே தகிக்கிறது!

அன்று மாலையில் வள்ளியின் கையைப் பிடித்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குள் நுழையும் போது கொன்டவனைக் காணப் பள்ளியறைக்குள் நுழைவது போல மனம் படபடத்தது. எத்தனையோ முறை வந்து பார்த்த வீடுதான். ஆனால் இன்று என்னவோ ஒரு மாற்றம். கூடையை இறக்கித் திண்ணைக்கு மேல் சுவரில் அடித்திருந்த ஆணியில் மாட்டி உள்ளே நுழைந்தார்கள். உள்ளே இலேசான இருள்.

அது வெளித் திண்ணையும், உள்ளே ஓர் அறையுமாக உள்ள பழைய மோஸ்தர் லயம். முன்பக்கம் மட்டும் தான் வாசல். உள்ளே அறைக்குள் ஆள் உயரத்துக்கு மேல் கம்பி வைத்த ஜன்னல் ஜெயில் மாதிரி. அடுப்பருகில் பலகையைப்போட்டு உட்கார்ந்தவாறு சமையலில் மூழ்கியிருந்தாள் வள்ளியின் தாய். மேலே ரவிக்கை இல்லாமல் சேலைமட்டும் பாதி முதுகையும் பாதி வயிற்றையும் அம்பலப்படுத்திக் கொண்டிருந்தது. வாசலில் நிழல் தெரிந்து திரும்பிப் பார்த்தாள். ரஞ்சிதத்தைப் பார்த்ததும் திகைப்பு சிரிப்பாக மாறியது. எழும்பி ரஞ்சிதம் அருகில் வந்து ''எம்மவன்தான் பெரிசுன்ன வந்துட்டியா வாம்மா வா......'' என்று அவள் கன்னத்தை உருவி நெற்றிப் பொட்டில் அழுத்திக் கொண்டாள். விரல்கள் சடசடத்தன. வள்ளிக்கு ஏக உற்சாகம்.

ரஞ்சிதத்தை உட்கார விடாமல் தோட்டத்துக்கும் 'பீலி'யடிக்கும் இழுத்து அலைந்து கொண்டிருந்தாள். இருவரும் கை கால் அலம்பிக்கொண்டு வந்தபோது வள்ளியின் தாய் தேநீர் ஊற்றி வைத்துக் காத்துக் கொண்டிருந்தாள். தேநீரைக் குடிக்கும்போது இந்நேரம் தன் வீட்டிலும் வெள்ளைநிற 'ஜக்'கில் தேநீர் ஆறிப்போய் அடுப்புக்குப் பக்கத்தில் தூசி படர்ந்து கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் ரஞ்சிதம். வள்ளியின் தம்பிப்பயல் ஒருவன் நடுவிரலையும் மோதிர விரலையும் சோத்துச் சூப்பியவாறு உடம்பில் துணியில்லாமல் அம்மணமாக வந்து நின்று ரஞ்சிதத்தை விழித்துப் பார்த்தான். அவனை இழுத்து அணைத்து தலைமயிரைக் கோதிவிட்டு ''ஐய! இது என்ன அசிங்கம். நல்ல பிள்ளையாம். எங்கே சட்டை போட்டுக்கிட்டு வா பாப்பம்'' என்றாள். அவன் திமிறி குடுகுடுவென்று வெளியே ஓடினான். மூவரும் சிரித்தார்கள்.

அவன் வயதேயுடைய தன் தம்பி ஒருவனின் நினைவு வந்தது. அவள்தான் சோறூட்ட வேண்டும். அவளருகில் படுத்துக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் முரண்டு பண்ணுபவன் இன்று என்ன செய்வான் என்று நினைத்தபோது மனம் கலங்கியது. 'எவ்வளவு காலத்துக்கு ஒரு பெண்ணுக்குத்தாய் வீடு?' என்று தன்னையே மடக்கிக் கொண்டாள்.

வந்து அரைமணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் முத்தையாவைக் காணவில்லை. வந்து தன்னைக் கண்டவுடன் என்ன செய்வான் என்று கற்பனை பண்ணிக்கொண்டாள். கற்பனை சுகமாக இருக்கவில்லை! உள்ளத்தின் ஒரு பகுதி இருண்டு போய் அதற்குள்ளிருந்து நான்கைந்து அழுகுரல்கள் கேட்பது போலிருந்தது. தராசுப் படிக்கல் மாதிரி இருக்கும் தன் தம்பி, தங்கைகளின் நினைவே மனதுக்குள் சுழன்றது.

ரஞ்சிதத்தின் குடும்பம் பெரியது. உருப்படியாக மூன்று பேருடைய உழைப்பில் ஒன்பது வயிறுகள் பசியாற வேண்டும். இதுவரையுமே அது ஒழுங்காக நடைபெறவில்லையென்றால் இனி.....?

குழந்தைகளில் ஒருவரையாவது அவளுடைய தாயினால் சமாளிக்க முடியாது. குழந்தைகளின் குறும்பு தாங்க முடியாவிட்டால் 'பட்பட்'டென்று தன் தலையில் அடித்துக் கொண்டு ''என்னைக் கொல்லாதீங்க சனியங்களா!'' என்று அழத்தான் தெரியும். அடுத்தடுத்த பிரசவத்தால் நித்திய நோயாளியாகி, ரஞ்சிதத்துக்கு அவளும் ஒரு குழந்தை. தலையில் தான் சுமத்தியிருக்கும் பாரத்தை எண்ணுகையில் தான் செய்வது பெரிய அநியாயம் என்று தோன்றியது. உடம்பு கொஞ்சம் தெம்பாக இருக்கும் நாளில் மட்டும் ஏதோ 'பெயர்' பண்ணுகிறவள் இனிக்கட்டாயம் வேலைக்குப் போகவேண்டிவரும்.

கறுத்து, இளைத்து நடக்கவே ஜீவனில்லாத தன் தாய் வேலைக்குப் போவதைக் கற்பனை பண்ணவே சிரமமாக இருந்தது ரஞ்சிதத்துக்கு.

வெளியே அந்திமயங்கி அழுக்குப் போல இருள் பரவத் தொடங்கியது. வள்ளி, ரஞ்சிதத்தைத் தனிமையில் விட்டுவிட்டு இரண்டு லாந்தர்களை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். அவைகளைக் கழற்றி கண்ணாடியைத் துடைத்து மண்ணெண்ணெய் ஊற்றி விளக்கை ஏற்றினாள். வள்ளியின் தாயும் சமையலை முடித்துவிட்டு அடுத்த வீட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கப் போய் விட்டாள். நெடுநேரமாகத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ரஞ்சிதம் எழும்பி உள்ளே வள்ளி அருகில் வந்து நின்றாள். கண்கள் ஈரமாகி, உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. மெதுவாக 'வள்ளி' என்றாள். அதுவுங்கூட அழுகையாகத்தான் வெளிவந்தது. சேலை முந்தானையில் மூக்கைச் சீறிக் கொண்டாள்.

நிமிர்ந்து அவளைப் பார்த்த வள்ளிக்கு அவள் வெகுநேரமாக அழுதிருக்க வேண்டும் என்று தோன்றியது. ''என்னது?'' என்றாள்.

''நான் வீட்டுக்குப் போகிறேன்''

''என்னது?''

ரஞ்சிதம் மீண்டும் மூக்கைத் துடைத்து கண்களையும்துடைத்துக் கொண்டாள். வள்ளி அவள் தோளைக் குலுக்கி ''என்ன ரஞ்சி ஒனக்கு?'' என்றாள்.

ரஞ்சிதம் அமைதியாகக் கொடியில் கிடந்த துண்டையும், படங்குச் சாக்கையும் உருவி எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள், பின்னாலே வந்த வள்ளி அவள் கையைப் பிடித்து ''ரஞ்சி! எங்கே போறே? வா உள்ளுக்கு'' என்றாள்.

ரஞ்சிதத்தின் கண்கள் கலங்கி மிளகாய்ப் பழமாக சிவந்திருந்தன. ''இல்லே வள்ளி! நான் போறேன் விடு'' என்று நழுவித் திண்ணை அருகில் வந்தாள். ''நான் இப்படி வாறது சரியே இல்லை. எங்க அப்பனும் தம்பியும் சம்பாதிச்சா அந்தக் குடும்பத்துக்கு போதும்னா நினைக்கிறே?'' என்று சொல்லும்போதே அவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. ''சின்னதுகளை நெனைச்சா எனக்கு வயித்தைக் கலக்குது!'' என்று சொல்லிவிட்டு குலுங்கி அழுதாள். வள்ளிக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

திண்ணைக்கு மேல் தொங்கிய கூடை கீழே இறங்கியது. அதற்குள் துண்டையும் படங்கையும் போட்டு, கயிற்றைத் தலையில் மாட்டிக் கொண்டுவிட்டுக் கீழே இறங்கினாள்.

தன் தாயைக் கூப்பிட்டுச் சொல்லக்கூட முடியாமல் திகைத்து நின்ற வள்ளியிடம் சொல்லவும் இல்லை. அவளைப் பார்க்கவும் இல்லை.

இருளுக்குள் கலந்த ரஞ்சிதம் ஓடத் துவங்கினாள். வாழ்க்கையும் தான்!

*(நன்றி: சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள் தொகுப்பு)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 42

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | | | | ■ | |
| 10 | 11 | | ■ | 12 | | | |
| 13 | | ■ | 14 | | | ■ | |
| | ■ | 15 | | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | ■ |
| 19 | | | | | ■ | 20 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

1. என்று தணியும் இந்தத் தாகம்.
2. உடற்கட்டு/ அழகு.
3. பிட்டு, இடியப்பம், தோசை இவற்றுக்குப் பக்கஉணவு.
4. மடம்/ அன்னசாலை.
5. பெண்மணி.
6. மார்கழித் திங்கள் நாள்களில் அதிகாலையில் இந்துக்கள் இதனைப் படிப்பர்.
8. உண்மை/மெய்.
11. வாதிடுபவன்.
14. உணர்ச்சியுடன் தொடர்புடைய உடற்தொகுதி.
15. மணம்.
16. பல பொருள்களால் உருவானது.
17. சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமர்

### இடமிருந்து வலம்

1. மூச்சுவிடும் செயன்முறை
4. மரணத்தின் பின்னர் அமைதி அடையும் இடம்.
7. பொருந்தும்.
8. பகைவன்.
9. பஞ்சு தரும் மரம்.
10. கடனை இறுக்க முடியாத நிலை.
12. நீர்த்தன்மை உடையவை.
13. மன்மதனின் மனம் கவர்ந்தவள்.
14. இலாபம்.
15. ஏழு நாள்கள் கொண்டது.
16. பணி.
17. அன்பு/ நட்பு.
18. விவசாயியின் ஆயுதம்.
19. தற்கொலைப் போராளி.
20. எதிரி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 42
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (14.01.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 42 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 18.01.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 40 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1) அப்பாவி (4) அமுது (7) ரதம் (8) கரு (9) தாமதம் (11) சதாம் (12) திடம் (13) தம் (14) தருமதி (16) பாகுபாடு (18) தரிசு (20) கப்பம் (22) கரும்புலி (23) விடு

மேலிருந்து கீழ்
(1) அந்தாதி (2) பாரதம் (3) விதம் (5) முகதா (6) துரும்பு (10) மடங்கு (11)சம்மதம் (13) தரு (14) தடுப்பு (15) திரி (16) பாடுக (17) பாகம் (19) சுண்டு (21) பலி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 40 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — இ.அரன், இல:140, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** — செல்வி காயத்திரி ஜெயக்கொடி, சவன்னா, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** — திருமதி சிவநேசன் சுகிர்தா, 'மக்லியோட்' வைத்தியசாலை, இணுவில்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.அரசரத்தினம், ராஜா மருந்தகம், [illegible] வீதி, சுன்னாகம்.

(2) செல்வன் சிவஞானம் ராகுலன், சக்கலாவோடை, காரைநகர்.

(3) மு.ஹேமசாலினி, [illegible] பலாலி வீதி, [illegible]ராய்


(4) திருமதி ஆ.வரதலட்சுமி, இல: 78, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(5) செல்வி சின்னத்துரை காஞ்சனா, பண்ணாகம், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த கடிகாரத்தின் சுயசரிதை

அன்று ஒரு சனிக்கிழமை குமார் தனது அறையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது குப்பைத் தொட்டியில் யாரோ அழும் சத்தம் கேட்டது. உடனே அவன் குப்பைத் தொட்டியைப் பார்க்கும்போது ஒரு கடிகாரம் அழுதுகொண்டிருந்தது. ''ஏன் அழுகிறாய்'' என குமார் கடிகாரத்தைப் பார்த்துக் கேட்டான். அது தனது சோகக் கதையைக் கூற ஆரம்பித்தது. நீங்களும் அதன் சோகக் கதையைக் கேளுங்கள். ''நான் யார் தெரியுமா? என் கதை உங்களுக்குப் புரிகிறதா? அழகு இழந்து, பொலிவு இழந்து, வலுவிழந்து, உருக்குலைந்து நிற்கும் நான் பிரபல்யமான தொழிற்சாலையில் உருவானேன். இன்றோ இந்தக் குப்பை மேட்டில் என்னைக் கவனிப்பார் யாருமில்லை இனி என்ன! என் முடிவுக் காலம் கிட்டி விட்டதென எண்ணுகிறேன். வெள்ளம் அடித்து என்னை உடைய வைக்கிறது. வெயில் தகிக்க வைக்கிறது. என் இதயம் வெடித்துவிடும் போல இருக்கிறது. அமெரிக்காவில் நியூயோர்க் எனும் இடத்தில் உள்ள கடிகார இயந்திர சாலையில் நானும் எனது நண்பர்களும் உருவானோம். என்னையும் என் நண்பர்களையும் கப்பலில் ஏற்றிச் சென்றார்கள். நாமும் குதூகலமாய் கப்பலில் சென்றோம். காங்கேசன் துறைமுகத்திற்கு வரும் வரைக்கும் எனக்கு இது யாழ்ப்பாணம் என்று தெரியாது. ஒரு போதும் நானும் நண்பர்களும் யாழ்ப்பாணத்திற்கு வந்ததே இல்லை. மிகவும் குதூகலமாய் இருந்தது. பின் ஒரு பெரிய தொழிற்சாலைக்கு கொண்டுவரப்பட்டு ஒரு கண்ணாடிப் பெட்டியில் அடுக்கப்பட்டோம். ஒருநாள் ஒரு பெண்மணி வந்து என்னைக் காட்டி ஏதோ கூறினார். என்னைத் தூக்கிக் கொடுத்தார்கள். நானும் அந்த பெண்மணியோடு சென்றேன். வீடு சென்றபோது அவர் தனது மகளது அறையில் என்னை வைத்தார். என்னை அவள் பார்த்து நேரத்தைத் தெரிந்துகொள்வாள். 25.11.2008 அன்று பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நான் உடைந்து நொருங்கிவிட்டேன். என் முடிவு நாளும் நெருங்கிவிட்டது. என் வாழ்வு வீழ்ந்து போனாலும் என் எசமான் குடும்பம் சுகத்தோடு வாழ வேண்டும். அதுவே எனது விருப்பம்''. கடிகாரத்தின் சோகக் கதையைக் கேட்ட குமார் கண்கலங்கியவாறு தன் அறையை விட்டுச் சென்றான்.




ஜெ.ஜெனாசியாநிஜானி, தரம் 8D, யாழ்/திருக்குடும்ப கன்னியர்மடம்.




குகையின் சில பகுதிகள் மஞ்சளாவும், சில பகுதிகள் சிவப்பாகவும், சிலபகுதிகள் நீலமாகவும், பச்சையாகவும் வெவ்வேறான நிறங்களில் காட்சியளித்தன. ''சந்திரா! குருநாதர் நமக்கு இந்த அதிசயக்கல்லைத் தரும்போது என்ன சொன்னார் என்று உனக்கு நினைவிருக்கின்றதா?'' என்று இந்திரவர்மன் கேட்டான்.

''நன்றாக நினைவிருக்கின்றது. வெவ்வேறான சக்தி நிலைகளைத் தரம்பிரித்து, அவற்றை வித்தியாசமான வர்ணங்களில் காட்டக்கூடிய சக்தி இந்த அதிசயக்கல்லுக்கு உண்டு என்று குருநாதர் கூறியிருக்கிறார்'' என்றான் சந்திரவர்மன்.

''ஆமாம். இப்போது இந்தக் குகையில் உள்ள சக்திநிலைகளைப் பிரித்துக் காட்டியிருக்கிறது இந்தக்கல். இந்தச் சக்தி நிலைகள் கொண்ட மண்ணைப் பயன்படுத்தி மந்திரக்கிழவியை மடக்க வேண்டும்'' என்றான் இந்திரவர்மன்.



''பிள்ளைகளே! என்னை மீண்டும் அழைத்தமைக்கான காரணத்தை அறியலாமா?'' என்றார் குருநாதர்.

''அப்படியானால் கிழவியின் கண்ணில் மண்ணைத் தூவப்போகின்றோம்!'' என்று கூறிச் சிரித்தான் சந்திரவர்மன்.

அதன் பின்னர் இருவரும் ஒவ்வொரு வர்ண மண்ணையும் தனித்தனியாக எடுத் துப் பரிசோதித்துப் பார்த்தார்கள். அவற்றுள் சிவப்புநிற வர்ணமாய் காட்சி தந்த மண் சற்று வித்தியாசமானதன்மை கொண்டதாக இருந்தது. தம்மிடம் உள்ள மாயக் கண்ணாடியை மீண்டும் வெளியே இளவரசர்கள் எடுத்தார்கள். திரும்பவும் மாயக் கண்ணாடியில் குருநாதரின் உருவம் தோன்றியது. இளவரசர்கள் இருவரும் குருநாதரை வணங்கி நின்றனர்.

''குருநாதரே! இதோ எமது கையில் உள்ள வித்தியாசமான சக்தி கொண்ட மண்தான், மாயக்கிழவியின் மந்திரசக்திக்கு அப்பாற்பட்டது என நம்புகிறோம்'' என்றான் இந்திரவர்மன். குருநாதர் ஒருகணம் இளவரசர்களின் கையில் இருந்த மண்ணை உற்றுப்பார்த்தார். அவரது முகத்தில் திருப்தி தெரிந்தது. (தொடரும்)






# விடுகதை சொல்லப்போறோம்...

1. இவன் அழுதால் உலகம் சிரிக்கும். அவன் யார்?
   வானம்
2. ஆயிரம்பேர் அணிவகுத்தாலும் தூசி கிளம்பாது, அவர்கள் யாவர்?
   எறும்பு
3. மேலே பறப்பவனுக்குக் கீழே கூடிவாலாம். அது என்ன?
   பட்டம்
4. அரிசி போலப் பூப்பூக்கும். அம்மாடி என்று காய்காய்க்கும். அது என்ன?
   மிளகாய்
5. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?
   மண்புழு
6. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?
   வியர்வை
7. கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்?
   ஆமை
8. மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
   தவளை
9. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார். அவர் யார்?
   நுளம்பு
10. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர். அவர் யார்?
   செங்கல்

க.தர்ஷன் தரம்-5F யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.

## இறந்துபோன பின்பும் உயிருடன் இருக்கும் சில உறுப்புகள்

| | |
|---|---|
| 1. கண் | - 31 நிமிடம் |
| 2. மூளை | - 10 நிமிடம் |
| 3. கால் | - 4 மணிநேரம் |
| 4. தோல் | - 5 நாள்கள் |
| 5. இதயம் | - 10 நிமிடம் |
| 6. காது | - 1 மணிநேரம் |
| 7. தோல்பட்டை | - 4 மணிநேரம் |
| 8. எலும்பு | - 30 நாள்கள் |

சு.மதீசன்,
தரம் 8, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

## என் அன்னை

உதிரத்தை உயிராக்கி
உருவாக்கினாள் - என் அன்னை
பத்துத் திங்கள் சுமந்து என்னைப்
பாரினுக்காய் பரிசளித்தாள் என் அன்னை

கருவிற்குள் மூடினாள்
கண்ணிமைபோல் காத்தாள்- என் அன்னை
கண்ணைக் காக்கும்- இமை போலும்

மடியினிலே தாங்கினாள் - என் அன்னை
நல்லதொரு பிரஜையாக - நாட்டிற்கு
உவந்தளித்தாள் - என் அன்னை
இரத்தத்தையே பாலாக்கித் தந்து
என்னை உருவக்கினாள்- என் அன்னை

பா.ஆதிரை தரம்- 5.
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.



## நலமாய் வாழ

நன்மை செய்யக் கற்றுக்கொள்
★நலமாய் வாழக் கற்றுக்கொள்
உண்மை பேசக் கற்றுக்கொள்
★உயர்வாய் வாழக் கற்றுக்கொள்
துயரைப் போக்கக் கற்றுக்கொள்
★துணிந்து செயற்படக் கற்றுக்கொள்
உழைத்து வாழக் கற்றுக்கொள்
★உள்ளத் தூய்மையைக் கற்றுக்கொள்
இன்மொழி பேசக் கற்றுக்கொள்
★இறை பக்தி வளர்க்கக் கற்றுக் கொள்
அன்பாய் வாழக் கற்றுக்கொள்
★பண்பாய்ப் பழகக் கற்றுக்கொள்
அழியாக் கலைகளைக் கற்றுக்கொள்
★ஐயம் திரிபுறக் கற்றுக்கொள்

வி.கல்பனா,
தரம் - 8C, இந்து மகளிர் கல்லூரி.

## இலங்கை



இலங்கை நாடு எம் நாடு.
இதுவே எங்கள் தாய் நாடு.
இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தீவாகும்.
இதனை ஸ்ரீலங்கா, ஈழம், இரத்தினதுவீபம், தப்பிரபேன் என்றும் அழைப்பர்.
இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப் பல இனத்தவர்கள் வாழ்கின்றனர்.
சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பேசுவோர் இங்குள்ளனர்.
பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தோர் இங்குள்ளனர்.
எமது நாடு இயற்கை வளங்கள் பலகொண்டது.
இலங்கையில் உயர்ந்த மலைகள் உள்ளன.
இலங்கை - இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப்படுகின்றது.

ம.ஆரணி,
தரம்-6, உடுவில் மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

..................... ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை

வ.ஜேன்சலா
தரம்-6A,
யா/குடத்தனை கரையூர் R.C.T.M.S.



க.நிரோசன்
தரம்-8A,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி.ம.வி.



சி.கோகுலக்கண்ணன்
தரம்-9B,
யா/இணுவில் மத்திய கல்லூரி.



வி.திவாகரன்
தரம்-8A,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தேவகுமாரி நவரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு
அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி!*

யா/குடமியன் அ.த.க. பாடசாலை. பாடசாலைச் சமூகம். (81459)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 30*06*1942
உதிர்வு: 05*12*2008

**அமரர் சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்**
(வருமான வரி முன்னாள் அலுவலரும்,
பிரபல வெற்றிலை வியாபாரியும்)

ஆலயத்து ஆலமென
அனைவருக்கும் அணை தந்தீர்
பாரதக் கர்ணனென
பாரினிலே பணிசெய்தீர்
சமவுடமை சமவாயத்தை
சாகும்வரை சாதித்தீர்
சிறுவருக்கு சிறுவராகி
சிறந்த நல்ல கதைசொல்வீர்
இன்னுமொரு ஜன்மமெனில் -
எங்கள் குலவிளக்காய்
இங்கு வந்து ஒளிர்ந்திடுவீர்
அதுவரை பொறுத்திருப்போம்.
*ஓம் சாந்தி!*

58, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (81452)


## மலேசியன் C.Dக்கள் மலிவு விற்பனை

V.C.D
Audio C.D
MP3
~~150~~ தற்போது = 75/= மட்டுமே

தமிழ் ஆங்கில D.V.D க்கள்
~~250~~ தற்போது = 150/= மட்டுமே

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு: **ஹரி வீடியோ சென்ரர்**
இல.61, இராம்நாதன் வீதி, (மல்ரிபாம்).


## முக்கிய கலந்துரையாடல்

மீன் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டு இதுவரையும் நியமனம் கிடைக்காதவர்கள் கௌரவ அமைச்சரைச் சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதால் நியமனம்கிடைக்காத அனைவரையும்நாளை (05.01.2009) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.பெருமாள் கோயிலில் ஒன்றுகூடுமாறு பட்டதாரி செயற்குழு கேட்டுக்கொள்கிறது. (81464)

## தவறிவிட்டது

49, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியையுடைய ஜெகசீலன் திலக்ஸன் என்பவரது அடையாள அட்டை (871072809V) 31.12.2008 புதன்கிழமை யாழ். நகர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலே குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது T.P.: 0602216580 தொடர்புகொள்ளவும்.தகுந்த சன்மானம் வழங்கப்படும். (81454)


## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலைவேளைகளில் மூத்த புகழ்பூத்த-சுயதெரிவுமுறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்- சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.


## தேவை

வீட்டில் தங்கி வயோதிபத் தம்பதிகளைப் பராமரிக்க ஆண், பெண் உதவியாளர்கள் தேவை.
வயது எல்லை: 40-60

தொடர்பு: T.சங்கரப்பிள்ளை,
209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 4590690 (81467)

## தவறிவிட்டது

பொன்னாலை தெற்கு, சுழிபுரம் என்னும் முகவரியுடைய ஆண்டிஐயா நற்குணலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (551461424V) யாழ். பஸ் நிலையத்திற்கும் பண்ணைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.100, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (81456)

## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது
கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி
அம்பாள் ஆலய வழிபடுவோர் மகாசபை
உறுப்பினர்களான ச.கதிர்காமதம்பி அவர்களின்
அன்பு மனைவியும் சே.வேல்முருகன் அவர்களின்
அன்புச் சகோதரியுமான
**திருமதி இந்திராணி கதிர்காமதம்பி**
அவர்களின் மறைவினால் துயருறும்
அவர்களின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு
அன்னாரின் ஆத்மா அம்பாளின் பாதார விந்தங்களை
அடையப் பிரார்த்திக்கின்றோம்

அம்பிகை அடியார்கள்,
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம். (81465)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 27.07.1979
மறைவு 04.01.2005

**அமரர் கருணாநிதி கஜன்**

கள்ளமில்லா புன்சிரிப்பும் கனிவான பார்வையும்
விகடப் பேச்சும் உருவெனக் கொண்ட ஐயனே!
காலன் கவர்ந்தானோ உன்னுயிரை
கண்ணீரில் கரைந்து விடை தந்தோம்
ஆண்டுகள் நான்கு சென்றாலும் – எங்கள்
உயிருள்ள வரை உன் நினைவு அழியாது.

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்றும் உன் நினைவுடன்:
குடும்பத்தினர். (81463)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 05 |
| 12 | 12 |
| 1940 | 2008 |

**அமரர் செல்லையா சிவபாலன்**
(தொலைத் தொடர்பு பரிசோதகர்-கொழும்பு)
தொலைத்தொடர்பு அத்தியட்சகர்-அபுதாபி

நருவூரிற் பழுத்த நற்கனிமரமாய்
நம்மவர்க் கெல்லாம் நயந்தனை ஐய!
எடுத்தஎக் கருமமும் இனிதே நிறைவுறும்
எவற்றிலும் அதீத முயற்சியும் முனைப்பும்
கொடுத்தனை எமக்குக் கல்வியும் செல்வமும்
கோடான கோடி குவித்தனை வளமாய்
கொடுதனன் இறைவன் எடுத்திடல் நியதினும்
ஆத்மா சாந்திக்கு அிரனடி தொழுதோம்

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (06.01.2009) நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
பன்னாலை,
தெல்லிப்பளை.
-குடும்பத்தினர்

## கலப்பின கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலி பிராந்திய கால்நடைப் பண்ணையில் கலப்பின கொல்லைப் புற கோழிக்குஞ்சுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனைக்குள்ளன.

இந்தக் கோழிக் குஞ்சுகள் தேவையான பண்ணையாளர்கள்கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள திணைக்களப் பண்ணையில்நேரடியாகவோ அல்லது 060 221 1366 இலக்க தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களஉதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

ஒரு நாள் குஞ்சுகள் 60 ரூபா, ஒரு கிழமைக் குஞ்சுகள் 70 ரூபா,இருகிழமைக் குஞ்சுகள் 80 ரூபா, மூன்று கிழமைக் குஞ்சுகள் 100 ரூபா, நான்கு கிழமைக் குஞ்சுகள் 130 ரூபா, ஐந்துகிழமைக்குஞ்சுகள் 160 ரூபா, ஆறு கிழமைக் குஞ்சுகள் 190ரூபா,ஏழுகிழமைக் குஞ்சுகள் 220 ரூபா 8 கிழமைக் குஞ்சுகள் 26[illegible] தளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணேஸ் நல்லம்மா (இராசமணி)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமாகிய கணேஸ் நல்லம்மா (இராசமணி) 30.12.2008 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கணேஸ் (தரணியக்கலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமரேசு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும் மகாலிங்கம் (ஜேர்மனி), மல்லிகாதேவி (கனடா), காலஞ்சென்ற சரவணபவன் (பிரான்ஸ்), மகாலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காறின், சொக்கலிங்கம் (ஆசிரியர்), சகுந்தலாதேவி, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் கிருஸ்ணபிள்ளை, துரையப்பா, பாக்கியம் (பிள்ளையம்மா), நாகரத்தினம், கணேசமூர்த்தி, சிரோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகம்மா மற்றும் செல்லம்மா, கணபதிப்பிள்ளை, நீலாம்பிகை, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நல்லையா மற்றும் சுபத்திரை, தங்கமணி, ஏகாம்பரம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பராசக்தியின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.01.2009 புதன்கிழமை பரிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.பாக்கியம்
(பிள்ளையம்மா - சகோதரி).

1ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (81476)

### திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி 01.01.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சரவணபவனின் (கனடா) அன்புச் சகோதரியும் முரளீதரன் (கனடா), காலஞ்சென்ற பவித்தா ஆகியோரின் அன்புத் தாயும் துஷ்யந்தினி (கனடா), சப்தகரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் விஷ்ணாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2009) ஞாயிற்றுக்கிமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி தெற்கு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெ.சப்தகரன்
(மருமகன்).


பூதர்மடம் சந்தி,
நீர்வேலி. (81474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியான வழிபாட்டுக்குப் பொருத்தமான வகையில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாலயம்



உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவாக துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில், ஆலய மேற்கு வீதியில் நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது. தன் வாழ்வை சைவசமயத்திற்கும் ஆதரவற்ற மக்களுக்கும் அர்ப்பணித்த தெய்வீகத் தாயின் அஸ்தி ஒன்பது செம்புகளில் நவகோண அமைப்பில் பிரதிட்டை செய்யப்பட்டு இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்துமதப் பெரியார்களின் சமாதிகள் பல்வேறு தத்துவ அடிப்படையில் அமைக்கப்படுவது வழக்கம். அவ்வகையில் சக்தி உபாசகராக விளங்கிய அன்னையின் நினைவாலயம் நவகோணத்தில் அமைதல் பொருத்தமென இந்தியாவிலுள்ள ஆன்மீக அறிஞர்களின் கருத்துக்கு ஏற்ப பிரமாண்டமான முறையில் நவகோணத்தில் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அஸ்தி



பீடத்தின் மேல் அணையா விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது. எந்தவித உருவ அமைப்புமின்றிக் குத்துவிளக்கே தீப ஒளியாக இந்த நினைவாலயத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. தியான வழிபாட்டுக்குப் பொருத்தமான வகையில், தியான வழிபாட்டுக்குரிய நினைவாலயமாக அன்னையின் ஆலயம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலய தென்திசையில் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களால் அமைக்கப்பெற்ற திருமுறை மடத்துக்கு அருகில் அன்னை அவர்களின் திருவுருவச் சிலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புகழ்பூத்த கலைஞர் சிற்பி ரமணி அவர்களின் கைவண்ணத்தில் சிலை உருவாக்கம்

## நவகோணமாக அமைக்கப்பட்டதற்கும் காரணம் உண்டு

பெற்றுள்ளது. அன்னையின் 84 ஆவது பிறந்தநாள் அறநிதிய விழா எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அத்திரு நாளில் சிவத்தமிழ்ச் செல்வியின் நினை வாலயம் திறக்கப்படுவது சிறப்புக்குரியது. அமெரிக்கா ஹவாஸ் சைவ ஆதீனத்தில் சுப்பிரமணியமுனி சுவாமி களின் சீடர்களில் ஒருவராக விளங்கிய ஆன்மீக அன்பர் ரிஷிதொண்டுநாதன் சுவாமிகள் நினைவாலயத்தைத் திறந்து வைக்கவுள்ளார். கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் யோகசுவாமிகளின் அடியவராகிய அமெரிக்காவைச் சேர்ந்த சுப்பிரமணிய முனி சுவாமிகளின் திருவருட் பார்வையில் அகப்பட்டு அவரைப் பின் தொடர்ந்து, பத்தொன்பது ஆண்டுகள் ஹவாஸ் ஆதீனத்தில் ஆன்மீகப் பணியாற்றி வருகிறார். அன்னைமீது மிகுந்த அபிமானம் கொண்ட ரிஷிதொண்டு நாதசுவாமிகள் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆன்மீகப் பெரியார் என்ற சர்வ தேச விருதினை அம்மாவுக்கு வழங்குவதற்குக் காரணமாக விளங்கியவர். அன்னையின் அஸ்தியைக் காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் கரைத்து வழிபாடு செய்துவிட்டு நினைவாலயத் திறப்பு விழாவுக்கு இவ்விடம் வந்துள்ளார்.

அன்னையின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச்செயலர் கந்தையா நீலகண்டன் அழைக்கப்பட்டுள்ளார். இந்து மக்களுக்காகக் குரல் கொடுக்கவல்ல பெருமைமிகு ஸ்தாபனத்தை வளர்த்தெடுத்த கந்தையா நீலகண்டன் அவர்களின் தொண்டுபற்றி அறியாதவர்களில்லை. கொழும்பில் ஆதரவற்ற சைவச்சிறுவர் இல்லத்தைத் தோற்றுவித்தவர்களில் இவர் முதன்மையானவர். பல்வேறு நெருக்கடியான காலகட்டத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு இந்து மாமன்றம் பேருதவி புரிவதற்கு இவர் முழுமுதற்காரணமாக விளங்கியவர். அன்னையின் நினைவாலயம் அருகே துர்க்காபுரம் மகளிர் மகிழ்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பூங்காவைத் திறப்பதற்கு வைபவரீதியாகத் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகவும் திருக்கேதீஸ்வரத் திருப்பணிகளில் பெரும் பங்கு கொண்டு உழைப்பவரும் மனித நேய அமைப்பின் தலைவருமாகிய வி.கைலாசபிள்ளை வருகை தரவுள்ளதும் சிறப்புக்குரியது. சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அறநிதியச்சபை வழமைபோல் அன்னையின் பெயரால் யாழ்.கல்வி வலயப் பகுதியிலுள்ள உச்சவறுமையும்-திறமையுமுடைய மாணவரைத் தேர்ந்தெடுத்து ரூபா இரண்டு லட்சம் நிதி வழங்க ஏற்பாடு செய்துள்ளது. மேலும் அன்னையின் இறுதிக்காலவேளை அவரைப்பராமரித்த யாழ்.போதனா வைத்தியசாலை தீவிரசிகிச்சைப் பிரிவுக்கென ரூபா ஒரு லட்சமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. சிவத்தமிழ்ச் செல்வி நினைவாக ஈழத்துப் பெண்களின் ஆன்மீக, கல்வி, அறப் பணி தொடர்பான ஆராய்ச்சி மலர் வெளியிடுவதற்கான பணி தற்போது நடைபெற்று வருகிறது. பல அறிஞர்களைக் கொண்ட மலர்க்குழு உருவாக்கப்பட்டு ஆய்வு மலர்ப்பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆய்வு மலர் அம்மையாரின் குருபூசையில் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ***

- ஆறு.திருமுருகன்

---

# மன அழுத்தத்தைப் போக்கி வியாதிகளை தூரத்தே வைக்கும் சுதர்ஸன கிரியா மூச்சுப் பயிற்சிக் கலை

ஸோ .... ஹம் ஸோ.... ஹம்.....
ஸோ .... ஹம் ஸோ.... ஹம்.....
ஸோ .... ஹம் ஸோ.... ஹம்.....

வெவ்வேறுகால இடைவெளிகளில் அமைந்த பயிற்சியாளரின் கட்டளை வேகத்திற்கேற்ப மூச்சை இழுத்துவிடும் நூற்றுக்காணக்கான பயிற்சியாளர்கள் கண்களை மூடிச் சம்மணமிட்டு அமர்ந்திருக்கின்றனர்.

சுதர்ஸன கிரியா(நேரான காட்சியைக் காண்பதற்காக நமக்குள் நடக்கும் சுத்திகரணம்) என்னும் பெயரில் அமைந்த இந்தச் சுவாசப் பயிற்சி நிறைவு பெற்றதன் பின்னர் பூ மலர்வதுபோல மெல்ல மெல்லக் கண்களைத் திறக்கும் பயிற்சியாளர்களின் முகங்களிற் புதிய மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் தென் படுகின்றன.

இப்பயிற்சியின் உச்சநிலையிலே தாம் இதுவரை காணாத புதிய காட்சிகளைக் கண்டதாகக் கூறும் இவர்கள் தமக்கு இதுவரை இருந்துவந்த மன அழுத்தங்களும் (Tension) விலகிவிட்டதாகக் கூறுகின்றனர். பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகளின் வாழுங்கலைப் பயிற்சி நிறுவனத்தின் (The Art Of living) சார்பில் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருக்கும் தமிழகம் திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கௌரி அருணாசலம் அவர்களை பயிற்சி இடம் பெற்றுக் கொண்டிருந்த நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் சந்தித்தோம்.

கே: உங்களது வாழும் கலைப் பயிற்சி நிறுவனம் பற்றிக் கூறுங்கள்?

ப:இந்நிறுவனம் பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகளால் பெங்களூரில் 1982 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது 150 நாடுகளில் இந்நிறுவனத்தின் கிளைகள் பரவியிருந்து பணியாற்றுகின்றன.

## எல்லா வயதினரும் செய்து பழகி சுகமாக வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது

கே:நீங்கள் எப்போது இந்த நிறுவனத்தில் இணைந்தீர்கள்?

எங்கெங்கு பயிற்சி வழங்கினீர்கள்?

ப: நான் 2003 ஆம் ஆண்டு ஆரம்பப் பயிற்சி எடுத்த பின் தொடர்ந்து ஒவ்வொரு பயிற்சியாக நிறைவு செய்து 2006 இலிருந்து பயிற்றுநராகச் செயற்படுகின்றேன். தமிழகத்திலும் கொழும்பிலும் பயிற்சி வழங்கியிருக்கிறேன். இப்போது யாழ்ப்பாணத்



திலும் பயிற்சிகள் வழங்கி வருகிறேன்.

இந்த ஒருமாத காலத்தில் நெல்லியடி, இணுவில் , கம்பன்கழகம், துர்க்கா மணிமண்டபம்என்பவற்றில் 800 இற்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

கே: நீங்கள் கடைப்பிடிக்கும் பயிற்சி நெறிமுறைகள் பற்றிக் கூறுங்கள்?

ப: சிறுவர் முதல் [illegible] அவரவர்களுக்குரிய [illegible] பயிற்சிகள் உண்டு. 7-13 வயது, 14-18 வயது அதற்குமேற்பட்டவர்கள் என இவர்களைப் பிரிந்துப் பயிற்சிகள் வழங்குகின்றோம்.

மூன்று பாகங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறியிற் பாகம் I உடலை உறுதி செய்யவும், பாகம் II மனத்தை உறுதிசெய்யவும் பயன்படுகின்றன. திவ்ய சமாஜ்கா நிர்மாண் (புதிய சமுதாய விழிப்புணர்வுப் பயிற்சி) எனப்படும். பாகம் III பயிற்சிகள் உடலையும் உள்ளத்தையும் ஒன்றாக உறுதிப் படுத்துபவை.

கே: இப்பயிற்சிநெறி எவ்வாறு வடிவமைக்கப்பட்டது?

ப: எமது குருஜி ரவிசங்கர் சுவாமிகள் தான் இதனை வடிவமைத்தார். மனிதர்களின் நோய்களுக்கெல்லாம் காரணம் அவர்களது மன அழுத்தந்தான் என்பதைப் புரிந்துகொண்ட சுவாமி அவர்கள் 10 நாள் தியானத்தில் இருந்து கண்டுகொண்ட அனுபவமே சுதர்ஸன கிரியா என்ற மூச்சுப் பயிற்சி. சு-நேரான,தர்ஸன- காட்சி,கிரியா- நமக்குள் நடக்கும் சுத்திகரணம், -என்பதும் சுதர் ஸன கிரியாயின் பொருள். அதாவது காட்சியைக் காண்பதற்காக நமக்குள் சுத்தி கரணம் செய்வதே சுதர்ஸனா கிரியா ஆகும். இதனையே முக்கியத்துவப்படுத்தி வழங்குகின்றோம். இப்பயிற்சி உடலையும் உள்ளத்தையும் வளப்படுத்துகின்றது.

கே: நீங்கள் வழங்கும் பயிற்சியின் பலன்கள் எவை?

ப: மன அழுத்தம் தான் எல்லா நோய்களுக்கும்காரணம். இங்கு சுவாசத்தை இழுத்து, விடுவதன் மூலம் மன அழுத்தம் போக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாகவும் கட்டுப்பாடுடனும் எவ்வித அழுத்தமும் இல்லாமல் எவ்வாறு வாழ்வது என்பதை இப்பயிற்சி சொல்லிக் கொடுக்கிறது. அத்துடன் நீரழிவு, இரத்த அழுத்தம், தொய்வு என்பவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் இப்பயிற்சி உதவுகிறது. எனவே முடிந்தவரை எல்லோரும் இப்பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வது அவரவருக்கு பல நன்மைகளைத் தரும்.

கே:உங்களது நிறுவனம்சமயம் சார்ந்த நிறுவனமா?

ப: இல்லை, இது சமய சார்பற்ற நிறுவனம். பயிற்சிபெறுபவர்கள் மட்டுமல்ல

செவ்வி : ம.பா.மகாலிங்கசிவம்.

பயிற்சி வழங்கும் ஆசிரியர்களிலும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள்.

### யாழ்ப்பாண மக்கள் நிகழ்காலத்திலேயே வாழ்கிறார்கள்

கே: இந்நிறுவனத்தில் எத்தனை தொண்டர்கள் பணியாற்றுகின்றனர்?

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.12.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் பரராசசிங்கம் சிறீகுமார்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.01.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நிகழவுள்ளமையால் அந்நிகழ்வில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இல.16/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (81481) - குடும்பத்தினர்.

## வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவிக்கின்றோம்

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த எமது பிரதேசத்திற்கான 986 இலக்க பேருந்தினை மீண்டும் போக்குவரத்திற்காக ஏற்படுத்திக் கொடுத்த பொது முகாமையாளர், கோண்டாவில் சாலை முகாமையாளர், பஸ் நிலையப் பொறுப்ப திகாரி மற்றும் பஸ் நிலைய நேரக் கணிப்பாளர்கள் ஆகியோருக்கு எமது பிரதேச மக்களின் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.-அச்சுவேலி பிரதேச மக்கள்.

(மேற்குறித்த 986 இல. பேருந்து காலை 8.50, மதியம் 11.50, பி.ப. 2.30, மாலை 4.45 ஆகிய நேர அட்டவணையின் பிரகாரம் பயணத்தினை யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மேற்கொள்கின்றது என்பதனை பயணிகளுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்).

(81477) யாழ்.-அச்சுவேலி பயணிகள் சார்பாக.

## வெளிவந்து விட்டது

PC World (தமிழ் கணனிச்சஞ்சிகை இதழ் 4) குடாநாட்டின் சகல இடங்களிலும் கிடைக்கும்.

## விற்பனைக்கு

டீசல் வான் (L-200) 325,000/=, P4 Computer (Full Set), டிஸ் அன்ரனா (8')+ரிசீவர், 5CD Set (Panasonic), கார் செற் (Pioneer) +Box+Stabilizer.
தொடர்பு: S.பிறேம், No.18, றக்கா றோட்,யாழ்.
தொ.பே.: 2229201 (8am - 6pm)

## வீடு வாடகைக்கு

இல.153, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. (லொறி யூனியன்)
தொடர்பு கொள்க: 222 7621. (81462)

## ஒத்துமாறல்

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றும் சித்திரபாட பட்டதாரி ஆசிரியர், யாழ்ப்பாண மாவட்டத்து சித்திரபாட ஆசிரியருடன் நிரந்தரமாக/தற்காலிகமாக ஒத்துமாற விரும்புகிறார். தொடர்பு:- 021 4590300, மே.பா. உதயன்:-3164

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் தெய்வானை என்பவரது தே.அ.அ. 445500100 பொன்னாலைக்கும் காரைநகருக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: உபதபால் அதிபர், உபதபால் கந்தோர், களபூமி, காரைநகர்.

## கழிவு விலையில்....!

அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(சனி, ஞாயிறு கிழமைகளிலும் இச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
No:212, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5542

## Personal Classes

உடன் அழையுங்கள். இந்த வாரத்திற்குள் தரம் 10, 11 இற்கான கணித பாடத்திற்கும் A/L இற்கு பொருளியல் பாடமும் தனிப்பட்ட முறையில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை, மாலை உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக் கப்படும்.

ஆசிரியர்: ஷாம்,
கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
தொடர்புகளுக்கு: தொ.பே.0771102916
(81472) முந்துபவர்களுக்கு மட்டும்.


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பொங்கல் விழாவினை முன்னிட்டு சிறப்பு விலைக் கழிவு விற்பனை

புதுவருட, தைப் பொங்கல் தினத்தை குடாநாட்டு மக்கள் இனிமையாகக் கொண்டாட வேண்டுமென்பதற்காக விசேட விலைக் கழிவுடன் விற்பனைக்கு விடப்பட்டுள்ள பொங்கல் பொதிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்.

1 கிலோ No. 1 தீட்டல் அரிசி, சக்கரை 500g, பயறு 100g, கற்கண்டு 100 g , கஜு 25g, பிளம்ஸ் 50 g, நெய், தேன் என்பன தேவையான அளவு, எசென்ஸ் ஒரு போத்தல் ஆகியனவும்,

மேலதிகமாக,
விபூதி, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, சூடம் என்பனவும் ஒவ்வொரு பொதியுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

வெளிச் சந்தை விலைப்படி ரூபா 510 என மதிப்பீடு செய்யப்பட்ட பொதியொன்று ரூபா 450 இற்கு மட்டும் எம்மால் விற்பனைக்குத் தரப்படுகின்றது.

எமது சங்கத்தின் கூட்டுறவு நகர் கிளைகளிலும், சகல நுகர்ச்சிக் கிளை நிலையங்களிலும் எதிர்வரும் 2009.01.07 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

- தலைவர், பணிப்பாளர்,
பொது முகாமையாளர்,
பணியாளர்கள்.


மன அழுத்தத்தை....
*(17ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ப: பல ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். இந்தியாவில் மட்டும் 2132 ஆசிரியர்கள் பயிற்சி வழங்குகின்றனர். எமது பணிகளில் முக்கியமானது சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி வழங்கி அவர்களைச் சீர்திருத்துவதாகும்.

அண்மையில் பி.பி.ஸி. வானொலி மூலம் தென்னாபிரிக்காவில் பயிற்சியால் சீர்திருத்தப்பட்ட சிறைக் கைதிகள் பற்றிய பெட்டகத்தைக் கேட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

கே: யாழ்ப்பாணத்து மக்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

ப: யாழ்ப்பாண மக்கள் Living in the Present Moment என்ற நிலையுடன், அதாவது நிகழ் காலம் தவிர்க்கப்படுவதில்லை என்பதை உணர்ந்து நிகழ் காலத்திலேயே வாழ்கின்றனர். எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்கள். இத்தனை அழுத்தங்களின் மத்தியிலும் அவர்கள் நிமிர்ந்து நிற்க அவர்களது பக்தியும் மன உறுதியும் தான் காரணம். அவர்களுக்குச் சாந்தியும் சமாதானமும் சீக்கிரம்வரவேண்டுமென்று குருஜியையும் எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன். ★

## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவன ஊழியரான N.நிதர்சன் அவர்களின் அன்புத் தந்தை

### தம்பு நடராசா

அவர்களின் மறைவு செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

Music World & Computers
தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (சி-556475) உரிமையாளரும், பணியாளர்களும்.

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் சின்னத்துரை நடராசா

தோற்றம்: 05 ★ 06 ★ 1929
மறைவு: 05 ★ 01 ★ 1998

திதி:பூர்வபக்க அட்டமி

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே - அப்பா
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
எங்கள் உயிர் இருக்கும் மட்டும் உங்கள் நினைவிருக்கும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்புள்ளங்கள்
மனைவி, மக்கள்,மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் தருமலிங்கம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, பழைய தபாற்கந்தோரடியை வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான சுப்பிரமணியம் தர்மலிங்கம் 02.01.2009 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (விதானையார்)- பறுபதபத்தினியம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகமலரின் அன்புக் கணவரும், சுஜீந்திரன் (லண்டன்), காந்திமதி (கனடா), காலஞ்சென்ற அனித்தாவின் அன்புத் தந்தையும் சிந்துயா (லண்டன்), மதிவதனன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆறுமுகசாமி (இளைப்பாறிய பொலிஸ் அலுவலர்), யோகலிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), காலஞ்சென்ற கனகலிங்கம், யாழ்ப்பாணத்திலுள்ள தையல்நாயகி அம்மா, நவமணி, கமலாதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற யோகநாதன் (ஜேர்மனி), சுசீலாதேவி (கனடா), தமயந்தி (ஜேர்மனி), பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும் ஆரணி, சாதுரியன், விகாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2009) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
97A 1/1, *அபேயசேகர வீதி, கல்கிசை.* மனைவி, பிள்ளைகள்.
T.P: 0112 723118,0776038712 (சி-556469)

### செல்லத்துரை மகேஸ்வரன்



மதவாச்சியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் தற்பொழுது 13A 2/2, பசல்ஸ் லேனில் வசித்தவருமாகிய செல்லத்துரை மகேஸ்வரன் (முன்னாள் உரிமையாளர், மங்களா ரேடர்ஸ்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மதவாச்சி செல்லத்துரை (பிரபல வர்த்தகர், வவுனியா) - செல்வநாச்சியார் தம்பதியரின் மூத்த மகனும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பூலோகலட்சுமி தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் (பபி) அன்புக் கணவரும் தனுஜா, தர்மஜா, மணிமாறன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவனேஸ்வரன், லக்கினேஸ்வரன், மங்களேஸ்வரன், மங்களேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஐங்கரன், ஜெயசேகரன் ஆகியோரின் மாமனும் தீபிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(04.01.2009)ஞாயிற்றுக் கிழமை மகிந்த மலர்ச்சாலை, 591 காலி வீதி, கல்கிசையில் காலை 7 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
13A 2/2, *பசல்ஸ் லேன்,*
*கொழும்பு -6.* (சி-556471) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இது ஜனநாயகத்தின் மீட்பா?

பத்து வருடங்களின் பின்னர் கிளிநொச்சி நகரம் அரசுப் படைகளிடம் வீழ்ந்தமை பல்வேறு உணர்வலைகளை எழுப்பியிருக்கின்றது.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் இருந்து கிளிநொச்சி நான்காவது தடவையாக ஆட்சியுரிமைக் கைமாற்றத்துக்கு உள்ளாகியிருந்தாலும் கூட, இம்முறை ஏற்பட்ட உணர்வுப் பாதிப்பு முன்னைய தடவைகளில் ஏற்படவில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தனி நிர்வாகத்தின் பிரகடனப்படுத்தப்படாத அரசியல் தலைநகராக கடந்த சுமார் எட்டு ஆண்டுகளாகக் கிளிநொச்சி விளங்கி வந்தமை இப்போது, அந்நகரம் கைமாறியமையை ஒட்டி எழுந்த உணர்ச்சிப் பிரவாகத்துக்கு காரணமாக இருக்கலாம்.

கிளிநொச்சியைப் படைகள் கைப்பற்றியமையை இலங்கையில் ஓர் இனம், நாட்டில் உள்ள மற்றோர் இனத்தின் மீது மேற்கொண்ட அடக்கு முறையாகவோ, வடக்கின் மீது தென்னிலங்கை கொண்ட வெற்றியாகவோ யாரும் பார்க்கக் கூடாது என, இந்த வெற்றியைப் பிரகடனப்படுத்தும் நிகழ்வில் இலங்கைத்தீவின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

இந்த வெற்றி இலங்கைத் தீவு எங்கும் எப்படி நோக்கப்படுகின்றதோ-எப்படி யதார்த்தத்தில் பார்க்கப்படுகின்றதோ-

எவ்வாறு நிஜத்தில் கருதப்படுகின்றதோ- அதையே அப்படிப் பார்க்காதீர்கள், நோக்காதீர்கள், கருதாதீர்கள் என்று வெளிப்பேச்சுக்கேனும் உரைக்க முற்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கிளிநொச்சி ஆக்கிரமிப்பை வெற்றிக் களிப்போடு வெடி கொளுத்தி, ஆரவாரித்துத் தென்னிலங்கைச் சிங்களம் கொண்டாடிய விதமும்-

சோகத்தோடு, இயலாமை மனதைத் தாளிட, உளம் வெதும்பித் தமிழ் பேசும் உலகம் அந்த இழப்பை சகிக்க முடியாமல் விழுங்கிக் கொண்ட போக்கும்-மறைக்கப் பாலவையல்ல; மறக்கப் பாலவையல்ல.

கிளிநொச்சியை அரசுப் படையினர் கைப்பற்றியமை 'பயங்கரவாதத்தின் பின்னடைவு' என்ற சாரப்பட விமர்சித்து, பேருவகையோடு அந்த வெற்றி அறிவிப்பை விடுத்தார் இலங்கை ஜனாதிபதி.

இலங்கைத் தீவிலே கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக பௌத்த-சிங்களப் பேரினவாதம் கொடூரமாகவும் குரூரமாகவும் கட்டவிழ்த்து விட்ட இன அடக்கு முறையின் பெறுபேறாக- விளைவாக -பிறப்பெடுத்ததே தமிழ்த் தேசியவாதமும் தீவிரவாதமும் ஆகும்.

நியாயமான உரிமைகளும் கௌரவ வாழ்வும் வேண்டி அகிம்சை வழியில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழினம் நடத்திய காந்தீய நெறியிலான அகிம்சைப் போராட்டங்கள், ஆயுதம் தாங்கிய அரச பயங்கரவாதத்தால்-பலாத்காரத்தால்-அடக்கி, ஒடுக்கப்பட்ட நிலையில், வரலாற்றுக் கட்டாயமாகத் தோன்றியதே ஆயுதம் தாங்கிய- வன்முறை வழியில் அமைந்த- தமிழரின் போராட்டம் ஆகும்.

கிளிநொச்சியைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டதன் மூலம் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், சமாதானத்தையும் மீட்டு விட்டதாக பீற்றிக் கொள்கிறார் இலங்கை ஜனாதிபதி.

உண்மையில் அரச பயங்கரவாதத்துக்கும், பலாத்கார முறையில் பேரினவாதம் இத்தீவில் வாழும் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்த விடுதலைப் போராட்டத்தில் கிளிநொச்சி இழப்பு ஒரு பின்னடைவே.

அதற்கு அப்பால், இது ஜனநாயத்தினதும், சுதந்திரத்தினதும் மீட்பு என்பது அப்பட்டமான பொய்யாகும்.

கிளிநொச்சியைக் கைப்பற்றியமையை ஆர்பாட்டமாக அறிவித்த இலங்கை ஜனாதிபதி, தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களை இலக்கு வைப்போம் என்று அறிவித்தாரே தவிர, தமிழர்களுக்கு நீதி, நியாயமான-தார்மீகச் சட்டங்களின் அடிப்படையிலான - தீர்வை இனியாவது தாம் முன் வைப்பார், நல்ல தீர்வு ஒன்றை வழங்குவார் என்று பிரகடனப்படுத்த முனவரவில்லை. நியாயமான அமை தித் தீர்வு ஒன்று வழங்கப்படும் என்று அந்நிகழ்வில் கோடி காட்டக்கூட அவர் தயாராக இருக்கவில்லை. அவ்வளவு தூரத்துக்கு பௌத்த-சிங்களப் பேரினவாதப் பிடிக்குள் அவர் சிக்குண்டு கிடக்கிறார் என்பது தெளிவு.

தமிழர்களுக்கு எதிரான தென்னிலங்கைச் சிங்களத்தின் பேரினவாத அடக்குமுறை முன் எப்போதும் இல்லாதவாறு பேயுருக்கொண்டு வெறிபிடித்து நிற்கும் போது-

தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்யும் மனப்பக்குவம் - மனமாற்றம் - சிங்கள ஆட்சிப் பீடத்துக்கு கிஞ்சித்தும் இல்லாத போது -

மிக மோசமான வன்முறை வடிவெடுத்துள்ள அரச பயங்கரவாதம், தடுப்பார், கட்டுப்படுத்துவார் இன்றி தமிழினத்தின் மீது ஏவிவிடப்பட்டிருக்கும்போது-

தமிழர் தரப்பின் கட்டுப்பாட்டில் இருந்த ஓர் அரசியல் நிர்வாக நகரம், முற்றும் முழுதாகச் சிங்களவர்களையே கொண்ட ஒரு படையின் கைகளில் விழுந்து அப்படை யினரால் ஆக்கிரமிக்கப்படும்போது-

இதனை ஓர் இனத்தின் மீதான மற்றோர் இனத்தின் ஆக்கிரமிப்பு எனக் கொள்ளாமல் வேறு எப்படித்தான் கருதுவதாம்.....?

கிளிநொச்சி வீழ்ச்சியை அடக்குமுறை ஆட்சியின் அதிகார ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பாகவே தமிழர்கள் மனம் கொதிக்கின்றனர்.

இது எங்கு போய் முடியும்? காலம்தான் பதில் சொல்லும்....!

# யாழ்ப்பாணத்தில் 'நொதேன் பவர்' நிறுவனத்தின் பரீட்சார்த்த மின் விநியோகம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணத்தில் 'நொதேன் பவர்' நிறுவனத்தின் பரீட்சார்த்த மின் விநியோகம் நாளை திங்கட்கிழமை ஆரம்ப மாகவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

கடந்த பல மாதங்களாக 'நொதேன் பவர்' நிறுவனம் சீனாவில் இருந்து தான் எடுத்து வந்த மின்பிறப்பாக்கிகளை சுன்னாகம் மின் நிலையத்தில் பொருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி முதல் அந்த நிறுவனம் தனது மின் விநியோகத்தை ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கடந்த நவம்பர் மாதம் யாழ்.குடா நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக அந்த நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளும் சேதமடைந்திருந்தன. இதனால் டிசெம்பர் மாதம் மின் வழங்கும் முயற்சி பயனளிக்கவில்லை. சேதமடைந்த மின் பிறப்பாக்கிகள் திருத்தியமைக்கப்பட்டதையடுத்து பரீட்சார்த்த மின் விநியோகத்தை அந்த நிறுவனம் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் யாழ்.குடாநாட்டுக்கு மின் விநியோகத்தை மேற்கொண்டு வரும் 'அக்றிக்கோ' நிறுவனத்தின் ஒப்பந்தம் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இதனையடுத்து 'நொதேன் பவர்' தனது மின் விநியோகப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளது.

இதன் முதற்கட்டமாக 'நொதேன் பவர்' நிறுவனத்தின் 6 மின் பிறப்பாக்கிகளில் 3 மின் பிறப்பாக்கிகள் மூலம் நாளை பரீட்சார்த்த மின் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். இந்த மின் விநியோக நடவடிக்கைகள் காரணமாக திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் பகல் வேளைகளில் முன்னறிவித்தல் இன்றி மின்வெட்டு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியடையும் பட்சத்தில் மின் வெட்டு நேரம் குறைவடையும் எனவும் அவர் கூறினார். முதல் மூன்று மின் பிறப்பாக் கிகள் மூலமான மின் விநியோகம் சீரமைக்கப்பட்டதும் அடுத்துள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளின் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது. 'நொதேன் பவர்' நிறுவனம் தனது மின் விநியோகப் பணிகளை சீரமைக்கும் பொருட்டு 'அக்றிக்கோ' நிறுவனம் ஜனவரி 31 ஆம் திகதி வரை தனது மின் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இரவு வேளைகளில் சுழற்சி முறையில் 1 மணித்தியாலம் முதல் 2 மணித்தியாலம் 20 நிமிடம் வரையான மின்வெட்டு அமுலில் உள்ள தாகவும் கூறப்பட்டது.

(50)

# கிளிநொச்சி மீட்பு தமிழ் மக்களின் விருப்பமாகும்; புலிகள் தமது பலத்தை அரசியல் உரிமையைத் தேட பயன்படுத்தவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன.4

கிளிநொச்சிப் பகுதி மீட்கப்பட்டது இலங்கையிலுள்ள அனைத்து மக்களினதும் விருப்பமாகும். குறிப்பாக தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பம் இதுவேயாகும்-

இவ்வாறு தெரிவித்துள் ளார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்தின் விசேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்மக்கள் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக ஜனநாயகமின்மை காரணமாக பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருப்பதற்கு புலிகளின் தலைமையே முக்கிய காரணம். புலிகள் தங்களது பலத்தை ஒரு போதும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுதேடி பயன்படுத்த முன்வந்த தில்லை.

சுயலாபம் கருதிய புலித்தலைமையின் பயங்கரவாதப் போக்குக் காரணமாக எமது மக்கள் பல்வேறு துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். இந்த அழிவு யுத்தம் காரணமாக புலித் தலைமை அப்பாவிப் பெற்றோர்களது பிள்ளை களையே பலிகொடுத்து வருகின்றது. புலித்தலைமையின் பயங்கரவாதம் உடைத்தெறியப்படும் போது தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அது வழிவகுக்கும்.

கிளிநொச்சி மீட்டெடுக்கப்பட்டதன் மூலம் இந்த அரசாங்கத்தின் ஒளிமயமான எதிர்காலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வெகு விரைவில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது- என்றுள்ளது. (அ)

# பல நாடுகளின் துணையோடு கிளிநொச்சியைக் கைப்பற்றியதால் போர் ஓய்ந்துவிட்டதாகக் கருத முடியாது

## திருமாவளவன் கருத்து

சென்னை, ஜன.4

தமிழீழ விடுதலைப்புலிகளோடு தனியாக மோதமுடியாத சிங்கள அரசு, இந்திய அரசு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் துணையோடு விடுதலைப் புலிகளை பின்வாங்கச் செய்திருப்பது பெரும் வெற்றியாகாது; வெட்கக் கேடாகும். இந் நிகழ்வால் புலிகள் வீழந்து விட்டதாகவும் போர் ஓய்ந்து விட்டதாகவும் கருத முடியாது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழீழத்தின் தலைநகராக இயங்கிய கிளிநொச்சியை சிங்களப்படை கைப்பற்றிவிட்டதென ராஜபக்ஷவும், தமிழின துரோகக் கும்பலும் கும்மாளம் அடிக்கின்றனர்.

ஆறேழு நாடுகளின் படைத்துணையோடு ஆறேழு மாதங்களாக பெரும் பாடுபட்டு தற்போது புலிகள் பின் வாங்கிய நிலையில் ஆயிரக்கணக்கான சிங்கள வீரர்களை பலி கொடுத்தும் அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்துவிட்டு கிளிநொச்சியைக் கைப்பற்றி விட்டோம் என்று கொக்கரிக்கின்றனர்.

இந்த நிகழ்வால் புலிகள் விழுந்து விட்டதாகவும் போர் ஓய்ந்து விட்டதாகவும் கருதி விட முடியாது.

சிங்களப் படையினரை விரட்டி அடித்து பல பகுதிகளைக் கைப்பற்றுவதும் பின்னர் கைவிடுவதும் புலிகளின் வரலாற்றில் அவ்வப்போது நடக்கும் நிகழ்வுகளே ஆகும். ஆகவே பின்வாங்கல் என்பது பின்னடைவாகாது.

### இந்திய அரசின் பச்சைத் துரோகமே காரணம்

சிங்கள இன வெறியர்களின் இந்தக் கும்மாளத்துக்கும் கொண்டாட்டத்துக்கும் தமிழ் இனத்துக்கு எதிரான இந்திய அரசின் பச்சைத் துரோகமே முதன்மைக் காரணமாகும்.

விடுதலைப்புலிகளோடு தனிய மோத வக்கில்லாத சிங்கள அரசு, இந்திய அரசு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் துணையோடு ஒற்றையாக எதிர்த்து நிற்கும் விடுதலைப் புலிகளை பின்வாங்கச் செய்திருப்பது பெரிய வெற்றியாகாது. வெட்கக் கேடாகும். தாம் எதிர்பார்த்தது நடந்து விட்டது எனவும் தமது கனவு பலித்து விட்டது எனவும் இந்திய அரசு மகிழ்சி அடையலாம்.

பத்துக்கோடி தமிழர்களின் உணர்வுகளை அவமதித்து விட்டு சிங்களவர்களுக்கு முட்டுக்கொடுத்துவிட்டு இந்திய அரசின் துரோகப் போக்கை எந்தக் காலத்திலும் தமிழ் சமூகத்தால் மன்னிக்க முடியாது.

தமிழினத்தின் முதுபெருந்தலைவரும் தமிழக முதலமைச்சருமான கருணாநிதியின் தலைமையில் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்கள் இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்து ஈழத்தில் நடக்கும் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்த முறையிட்டு ஒரு மாத காலம் உருண்டோடிவிட்டது.

வெளிவிவகாரத் துறை அமைச்சர் விரைவில் கொழும்பு சென்று அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவார் என்று உறுதியளித்தும் கூட இதுவரையில் அதற்கான முனைப்பு எதுவும் இல்லை என்பதில் இருந்து இந்திய அரசின் உள்நோக்கம் என்ன என்பது வெளிப்படுகின்றது.

இந்திய ஆட்சியாளர்களின் இத்தகைய தமிழினத் துரோகத்தை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சூழலில் விடுதலைச் சிறுத்தைகள் சுட்டிக்காட்டுகிறது.

# அரச சேவை அலுவலர்களுக்கு பிரதேச மட்டத்தில் மொழிக் கற்கை

யாழ்ப்பாணம், ஜன.4

அரச கரும மொழிகள் கொள்கையை உரியமுறையில் செயல்படுத்தும் நோக்குடன் அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மொழிப் பாடநெறிகள் பிரதேச மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

தேசிய மொழிகள் கல்வி மற்றும் மொழிப் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக இந்தப் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறிகளைக் கற் பிக்கக் கூடிய நிறுவனங்களிடமி ருந்து யாழ்.மாவட்ட செயலகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலரிடம் பெற்று எதிர்வரும் 9ஆம் திகதி 'பணிப்பாளர் நாயகம், மற்றும் மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கலேவத்தை, அகலவத்தை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

(202)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 21 | 05.01.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ.10.55வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | காலை 6.31 வரை |
| | அச்சுவினி |
| | பி.இ.5.42வரை |
| சுபநேரம்: | 12.31 - 02.01 |
| ராகுகாலம்: | 08.01 - 9.31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்: சில பாடசாலைகளில் 3 ஏ பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.4

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் இணையத்தளத்தில் நேற்றுக் காலை வெளியாகின.

இந்த முடிவுகள் நேற்றுமுன்தினம் இணையத்தளத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட போதிலும் தொழில் நுட் கோளாறு காரணமாக நேற்றுக் காலையே முடிவுகள் வெளியிடப்பட்டன என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இணையத்திளத்தில் இருந்து பெறப்பட்ட முடிவுகளை சில பாடசாலை அதிபர்கள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அந்த முடிவுகளின் விவரம் வருமாறு:-

வேம்படி மகளிர் பாடசாலை

* வர்த்தகம் - 3ஏ - அர்ச்சுதா திருஞான சம்பந்தர், பானதி கந்தசாமி, மேனுகா இராசேந்திரம்.

* கலை - 3ஏ - குயிந்தினி ஞான சேகரம், சிவை கஜேந்திரன், யாழினி சிவராஜா, பிரியதர்சினி காந்தி, சாளினி ஜெயபாலச்சந்திரன், துஷித்தா கமலநாதன், கமலாஜினி கேதாரநாதன், பிரியதர்சினி ராஜேந் திரம்.

மானிப்பாய் இந்து

* கலை - 3ஏ - சிவராசா சிவரூபன், அமலசிங்கம் றில்வன்.

தெல்லிப்பழை மகாஜனா

* கலை - 3ஏ - சி.ரஜீவன், மு.தயாபரன், செ.குகப்பிரியா, தே.திவ்வியா.

* வர்த்தகம் - எஸ். பிரியதர்சினி

சண்டிலிப்பாய் இந்து

* 3ஏ- ரி.சுதர்சன், ஆர்.ரஜீபரன், ஜி.மேரியூப்ரேசியா. (1)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் சிக்கி சின்னத்தம்பி ஐயாத்துரை (வயது 61) என்பவரும்-

முல்லைத்தீவில் நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சிக்கி பூலோகம் விமலதாஸ் (வயது 23) என்பவரும் காயமடைந்துள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு, முள்ளியவாய்க்கால் பகுதியில் 'மிக்' விமானங்கள் நடத்திய தாக்குதலில் 5வீடுகள் தரைமட்டமாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## பிரபாகரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரபாகரன் மறைந்திருக்கும் பதுங்குகுழிப் பிரதேசம் எனச் சந்தேகப்படும் இடத்தைச் சூழவர இராணுவத்தினர் வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியதாகவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

பிரபாகரனின் பதுங்குகுழி, நிலத்தின் கீழ் 30 அடி ஆழத்தில் பரந்து செல்கின்றது என்றும்-

பிரபாகரன் மறைந்திருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்களை இலக்கு வைத்து படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும்- இராணுவத் தளபதி மேலும் கூறினார். (அ-02)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்களில் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## புலிகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ச.சந்திர நேரு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

புலிகளிடமிருந்து பிரதேசங்களை அரசு மீட்டுக்கொள்வதால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இது எந்தவகையிலும் உதவாது.

கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து படையினர் கைப்பற்றிய பின் இன்றுவரை அங்கு எந்தப் பயனும் ஏற்படவில்லையே. கிழக்கு மாகாணம் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக உள்ளது. இதே நிலை தான் வடக்குத் தமிழ் மக்களுக்கும் ஏற்படப் போகிறது.

இனப்பிரச்சினைக்கு எந்த அரசியல் தீர்வையும் முன்வைக்காமல் படையினர் புலிகளிடமிருந்து பிரதேசங்களைக் கைப் பற்றுவதால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இயலாது - இப்படி ச.சந்திரநேரு எம்.பி. தெரிவித்தார். (அ-2)

# புலிகளின் தலைவர் பிடிபட்டால் இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோருகிறது காங்கிரஸ்

புதுடில்லி, ஜன.4

இலங்கையின் வடக்கே நடந்து வரும் இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு பிடிபட்டால் அவரை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்தியாவின் ஆளும் கூட்டணிக்கு தலைமை வகிக்கும் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கடந்த 1991 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கை எதிர்கொள்ள அவர் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வீரப்ப மொய்லி தெரிவித்துள்ளார்.

இதேநேரம் கிளிநொச்சி நகரம் இலங்கை இராணுவத்தின் வசம் வந்துள்ளது தொடர்பாக தமிழக அரசியல் தலைவர்களான கருணாநிதி, ஜெயலலிதா போன்றோர் எவ்வித கருத்தினையும் நேற்று வெளியிடவில்லை. (அ)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக கொழும்பு உட்பட மேல்மாகாணத்திலும் தங்கியிருக்கும் அனைவரும் தங்களை பதிவுசெய்து கொள்ள வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டென்ட ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

ஏற்கனவே தங்களைப் பதிவு செய்து கொண்டவர்களும் மீண்டும் குறித்த நிலையங்களில் தங்களை பதிவுகளைச் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (அ-ரி)

## அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோர்டன் டியூகிட் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை அரசாங்கம் இலாபம் ஈட்டியிருப்பதை இப்போது காணமுடிகின்றது.

''இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள்- உரிமைகள்- குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு ஒன்றை எட்டுவதையும் நாம் காண விரும்புகின்றோம்'' என்று கோர்டன் டியூகிட் தெரிவித் தார்.

''அவர்களுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்பதனை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்''- என்றும் அவர் கூறினார். (அ-1)

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் காலை 6.15 க்கும் முல்லைத்தீவுக்கு தெற்கே முற்பகல் 10.30 மணிக்கும் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பிற்பகல் 1.15 மணிக்கும் இத்தாக்குதல்களை விமானப் படையின் ஹெலிகள் மேற்கொண்டன என்றும்-

முல்லைத்தீவு கடற்புலி முகாம் மீது பிற்பகல் 2.10 க்கு 'ஜெற்' விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக விமானிகள் உறுதி செய்துள்ளனர் என்றும் இராணுவத் தரப்பு தெரிவித்தது. (அ-1)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.குடாநாட்டின் எல்லையில் உள்ள நகரங்கள் படையினர் வசம் வரும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதுஎன்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

## படை வெற்றிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வரும் போது நாங்கள் கூடத்தான் வெடி கொளுத்தி கொண்டாடுவோம். இப்போதைய தேவை கௌரவமான அமைதித்தீர்வு தான். ஆனால் அதனின்று நாம் வெகுதொலைவில் உள்ளோம்.

21 ஆண்டுகளாகியும் 13ஆவது அரசியல் யாப்பு திருத்தம் நடைமுறைக்கு வரவில்லை என்பது வரலாறு

இராணுவ வெற்றிக்குப் பிந்திய அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களாலும் அனைத்துலக சமூகத்தாலும் ஏற்கப்படக்கூடியது அல்ல.

வடபகுதி இன்று போர்க்களமாகி உள்ளதால் கிழக்குப் பகுதி அரசியல் போர்க்களமாகியிருக்கிறது.

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் கடையை நீங்கள் மூடிவிட்டீர்கள் என்று அவர்தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-02)


A/L DAY CLASS
சிறந்த கல்வி
கணக்கீடு
P. பகீரதன்
B.B.A (F.M. Spl.)
ஆரம்பம்: 05.01.2009 Mon.- 8.00a.m.
(Mon. to fri. 8 - 10am)
உயர்ந்த பெறுபேறு
NEC
பெருமாள் கோயில் அருகில்
Clock Tower Road, Jaffna

புதிய கல்வியாண்டில்
மீண்டும் ஒரு புதிய பிரிவு ஆரம்பம்
05.01.2009 திங்கள் 3.30 மணி
தரம் 1 2 3 4 5 6 7 8 9 10 11
★ SUPER GRADE ஆசிரியர் குழு
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

CB Computer Academy
விளம்பரம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Computerized Accounting, DTP
ICT (Grade 10 & 11), GIT (A/L)
Ms Office, Internet and E-Mail
VB.NET, Java, C++ Programing
Station Road, Kondavil


24 கணிதப் பரீட்சையா?
DMI
A/L-2011
ஜனவரி - 10
காலை 9.00 மணி
Free
ஜனவரி 10 முதல் 24வரை சனி, ஞாயிறு தினங்களில் A/L வகுப்புக்கள் முடிவடைந்ததிலிருந்து 2 மணி நேரம் கணிதக் கருத்தரங்கு DMI யினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

BITSMANS
கல்விநிறுவனம்- மானிப்பாய்
A/L - 2011
★கணித ★உயிரியல்
★ கலை ★ வர்த்தக
வகுப்புகள்
ஆரம்பம்:-7.1.2009
புதன் 4 p.m.

ஐடியல் அக்கடமி
சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.
இடைப்பிட்டி, காரைநகர்.
நீராவியடி, யாழ் நகர்.
யாழ் வீதி, மானிப்பாய்.
தரம் 1 முதல் O/L, A/L வரை
பிரிவு - II
ஆரம்பம்:- 05.01.2009 திங்கள்- 3.30 pm
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்.

A/L DAY CLASS
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவு
★ வழமையான ஆசிரியர் குழு ★
ஆரம்பம்: 05.01.2009
Mon. 7.00 a.m.
NEC
பெருமாள் கோயில் அருகில்
Clock Tower Road, Jaffna

மலிவு விலையில்......
திருமண அழைப்பிதழ்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
விசேட விலைக்கழிவு
10%

புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)
# 63, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
இணையத்தள முகவரி : www.andradesigns.com

A/L 2011 பிரத்தியேக வகுப்புகள்
05.01.2009 காலை 7.30 மணி
ஆரம்பம்
அளவையியல் - அரவிந்தன்
தமிழ் - செல்வரதன்
ஜெயகணேஸ்
இந்துநாகரிகம் - M.C.சுரேந்தர்
கலைவேந்தன்
புவியியல் - கபிலன்
பொருளியல் - லோகேஸ்வரன்
சதா பொன்ஸ் கல்வி நிலையம், அல்வாய்.

VACANCY
JOHN KEELS OFFICE AUTOMATION the Authorized dealer for the Toshiba product in Srilanka, has decided to expand their valuable services in Jaffna District.
CENTER MANAGER
We are searching young, dynamic and self motivated individual for the vacancy of above position.
Ideal candidate should have.
1. Degree in BBA or relevant subject.
2. Excellent ability in customer service, Management ability in labors handling and administrative talent
3. Good Communication skills in English/Singala
Salary and other benefits not less than 20,000/=
Those interested should send in their detail resume stating names of two non related referees to the following address
Johns Keells Office Automation (Pvt,) Ltd
P.O Box:158, Jaffna
Tele:+94 21 2228147, M: 0777286003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.